உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

சுடர்: 29 கதிர்: 295 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 1 புதன் 17.09.2014

stay connected with: uthayan.print uthayanprint
*Uthayan - A lively National Tamil Daily*



**தலைவராக அப்ரிடி வேண்டும் - ரசாக்**

பக்கம் 18

# சீன ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு

## என்றுமில்லாதவாறு கொழும்பில் நேற்றுக் கோலாகலம்



கொழும்பு, செப்.17
இலங்கையுடன் வர்த்தகம் மற்றும் கடற்போக்குவரத்து போன்றவற்றை ஊக்குவிக்கக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணமொன்றை மேற்கொண்டு நேற்று முற்பகல் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த சீன ஜனாதிபதி ஜீ ஜின் பிங் கிற்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரை வரவேற்றார். வரவேற்பு நிகழ்வில் நடனக்கலைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர்.
அதன் பின்னர் சீன ஜனாதிபதி வாகனப் பேரணியாக கொழும்ப்ப நோக்கிப் பயணித்தார். வழி நெடுகிலும் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்

19 ஆம் பக்கம் பார்க்க

## முட்டைப் பொரியலில் கஞ்சாப் பொட்டலம்

### யாழ். சிறைச்சாலையில் சம்பவம் கொண்டு வந்த பெண் பொலிஸில்

யாழ்ப்பாணம், செப்.17
யாழ்.சிறைச்சாலையில் உள்ள கைதிக்கு முட்டைப் பொரியலுக்குள் 4 கிராம் 770 மில்லிகிராம் கஞ்சாவை மறைத்து வைத்து சிறைச்சாலைக்குள் அனுப்ப முயன்ற பெண்ணைச் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளனர்.

22 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்காக புதுக்குடியிருப்பில் காணி அளவீடு

### பொதுமக்களின் எதிர்ப்புக்களைப் புறந்தள்ளி

யாழ்ப்பாணம், செப். 17
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக இராணுவத்தினரின் 682 ஆவது பிரிகேட் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான காணி, நில அளவைத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று அளவீடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் எதிர்ப்புக்களுக்கு அஞ்சியநில அளவைத்திணைக்களத்தினர், இராணுவ முகாமுக்குள் நின்றே காணிகளை அளவீடு செய்துள்ளனர்.
18.75 ஏக்கர் விஸ்தீரணமுள்ள பொதுமக்களின் காணிகளே இராணுவத்தினரின் தேவைக்குச் சுவீகரிப்பதற்காக அளவீடு செய்யப்பட்டுள்ளது.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக இராணுவத்தினரின் பெரிய முகாம் அமைந்துள்ளது. இந்த முகாம் அமைந்துள்ள பகுதி பல்வேறு பொதுமக்களுக்குச் சொந்தமானது. காணிக்குரிய

19 ஆம் பக்கம் பார்க்க

## பரீட்சை நேரம் குறையுமா?

யாழ்ப்பாணம், செப்.17
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு உரிய நேரத்தைக் குறைப்பது தொடர்பில் ஆராயப்படவுள்ளது என்று மத்திய

22 ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு நிறைவேற்றும்

### நம்பிக்கை வெளியிடுகின்றது இந்தியா

புதுடில்லி, செப்.17
இலங்கை அரசு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்று நம்புகின்றோம் - என்று தெரி வித்துள்ளது இந்திய மத்திய அரசு.
"13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எமது கோரிக்கையை இலங்கை அதிகாரபூர்வமாக நிராகரிக்கவில்லை. எனவே இலங்கை வழங்கிய உறுதி மொழி நிறைவேற்றப்படும் என்று நம்புகின்றோம்".- இவ்வாறு இந்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## "அரச பயங்கரவாதத்துள் சிக்கி கொண்டோம் நாம்"

### காணியை இராணுவத்திடம் பறிகொடுக்கும் ஒருவர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், செப். 17
"பயங்கரவாதத்திலிருந்து எங்களை விடுவித்ததாக அரசு சொல்கின்றது. ஆனால் நாம் இப்போது அரச பயங்கரவாதத்தினுள் சிக்குண்டுள்ளதாகவே எண்ணுகின்றோம். மீள்குடியமர்ந்து மூன்று வருடங்களாகியும் எங்களது வீடுகள் எங்களிடம் மீள ஒப்படைக்கப்படாமல் இருக்கின்றது. இந்த நிலையில் எப்படி நல்லிணக்கம் சாத்தியமாகும்" என்று கேள்வியெழுப்புகின்றார் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்படும் காணி ஒன்றின் உரிமையாளர்.
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள இராணுவ முகாமுக்குரிய காணியை நில அளவைத் திணைக்களத்தினர் நேற்றைய தினம் அளவீடு செய்தனர். குறித்த முகாம் அமைந்துள்ள காணி

22 ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள்களின் விலை நள்ளிரவு முதல் குறைப்பு

### மின்கட்டணத்திலும் மாற்றம்

கொழும்பு, செப்.17
பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் விலை மற்றும் மின்சாரக் கட்டணங்கள் என்பன குறைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார். நுரைச்சோலை அனல்மின் நிலையத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி, சீன ஜனாதிபதியுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பை அடுத்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்ட அறிவிப்பை ஜனாதிபதி விடுத்தார். நேற்று நள்ளிரவு தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலையும் மின்சார கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி பெற்றோல் லீற்றருக்கு 5 ரூபா வாலும், மண்ணெண்ணெய்லீற்றருக்கு 20 ரூபாவாலும், டீசல் லீற்றருக்கு 3 ரூபாவாலும் விலை குறைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மின்சார கட்டணம் 25 வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

## யாழ். வருகிறது யாழ்தேவி

### பரீட்சார்த்த பயணமாக அடுத்தவாரம்

யாழ்ப்பாணம்.செப்.17
"பளையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான யாழ்தேவி ரயில் சேவைக்கான பரீட்சார்த்த ரயில் சேவை அடுத்த வாரம் இடம்பெறும். தொடர் ரயில்சேவை ஆரம்பிப்பு தொடர்பில் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை" என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண

19 ஆம் பக்கம் பார்க்க

## பேச்சுக்கு மத்தியஸ்தராக சீனா, ரஷ்யாவை நியமித்தால் கூட்டமைப்பு என்ன செய்யும்?

### கலாநிதி தயான் ஜயதிலக கேள்வி

கொழும்பு, செப்.17
அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பில் சர்வதேச கண்காணிப்புடன் அரசுடன் பேச்சு நடத்துவதற்கு தாம் தயாரென கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சர்வதேச கண்காணிப்பாளராக சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி மஹிந்த நியமித்தால் அடுத்த கட்டமாக என்ன செய்யும் என்று கேள்வியெழுப்பியுள்ளார் அரசியல் விமர்சகரும் முன்னாள் இராஜ

22 ஆம் பக்கம் பார்க்க

# மூளைசாலிகள் வெளியேற்றம் இலங்கையில் இப்போது அதிகம்

## தொழில்நுட்ப அமைச்சரே இப்படிக் கூறுகின்றார்

கொழும்பு, செப்.17
புத்திஜீவிகள் இலங்கையை விட்டு வெளியேறி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார் தொழில்நுட்ப அமைச்சர் சம்பிக்க ரணவக்க. பெரும் எண்ணிக்கையிலான புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் குடியேறியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
உலக அரசியல் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
"2001ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 5 லட்சத்து 89 ஆயிரம் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறி, வெளிநாடுகளில் குடியேறியுள்ளனர். தொழில்சார் தகுதிகளைப் பெற்றுக்கொண்டவர்களே இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், கட்டட நிர்மாணக் கலைஞர்கள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலான புத்திஜீவிகள் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.
அரசியல்வாதிகள் ஜஸ்பக்கட் மற்றும் பச்சைமிளகாய் சவால்களில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றனர். பொருத்தமற்ற அரசியல்வாதிகளை தெரிவு செய்த மக்களும் இன்றைய அரசியல் சூழ்நிலைக்கு பங்குதாரர்களாவர்.
அதிகளவான மக்கள் அரசியல்வாதிகளை திட்டுகின்றனர் விமர்சனம் செய்கின்றனர் எனினும் இந்த அரசியல்வாதிகளை யார் தெரிவு செய்கின்றார்கள்?. இலங்கையின் அதிகளவான அரசியல்வாதிகள் கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவதை விடவும், பிரபல்யத்தையே விரும்பி செயற்படுகின்றனர். செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் தங்கள் பற்றிய செய்திகள் பிரசுரமாவதையே விரும்புகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# சாட்டிக் கடற்கரையில் தாயின் சடலம் மீட்பு



யாழ்ப்பாணம், செப். 17
யாழ். சாட்டிக் கடற்கரையில் இருந்து 2 பிள்ளைகளின் தாயார் நேற்று செவ்வாய்க்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.
பண்டத்தரிப்பு, சில்லாலைப் பகுதியைச் சேர்ந்த அன்ரனி லொறிற்றா (வயது-45) என்ற 2 பிள்ளைகளின் தாயாரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.
இவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார்.
இவரைக் காணவில்லை எனக் கணவன் இளவாலைப்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
இந்நிலையில் சடலம் ஒன்று சாட்டிக் கடற்கரையில் இருப்பதாக மண்கும்பான் தபால் நிலையத் தபாலதிபர் குறித்த நபரின் உறவினர்களுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை தகவல் தெரிவித்துள்ளார்.
சாட்டி கடற்கரைக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் அதனை யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.
சடலமாக மீட்கப்பட்ட 2 பிள்ளைகளின் தாயார் மன நிலை பாதிக்கப்பட்டவர் என உறவினர்கள் தெரிவித்தனர். (து-4,106)

# விவசாயக் கொள்கை அரசிடம் இல்லை

## பொதுபல சேனா அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.17
நாட்டில் விவசாய அமைச்சு ஒன்று காணப்படுகின்ற போதிலும், அரசிடம் விவசாயம் பற்றிய கொள்கைகள் எதுவும் கிடையாது என்று குற்றஞ்சாட்டியுள்ளது பொதுபல சேனா அமைப்பு.
அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் விதாரன்தெனியநந்த தேரர் இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"விவசாய அமைச்சு இருந்த போதிலும் அதனை வழிநடத்துவது பல்தேசிய நிறுவனங்களாகும். விவசாயம் தொடர்பில் தேசிய கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் நாட்டில் விவசாயத் துறையும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# தொலைபேசி பரப்புரைகள் வேண்டாம்

## தேர்தல் ஆணையாளர்



கொழும்பு, செப்.17
வாக்காளர்களின் சுதந்திரத்துக்கு பாதிப்பு ஏற்படும் வகையில், தொலைபேசிகள் ஊடாகப் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பான கோரிக்கைகளை அவர் வேட்பாளர்களிடம் முன்வைத்துள்ளார். தேர்தல் வாக்களிப்பு இடம்பெறவுள்ள 48 மணித்தியாலத்துக்கு முன்னர் இவ்வாறான செயற்பாடுகள் முன் எடுக்கும் பட்சத்தில் அது தேர்தல் சட்டதிட்டத்தை மீறும் செயலாக கருதப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதனிடையே, தேர்தல் தொடர்பில் தமது அமைப்புக்கு 404 முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளது என்று கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (ற)

# "திருமணம் செய்து கொள்வதற்கே 4 வயதுச் சிறுமியைக் கடத்தினேன்"

## கைது செய்யப்பட்டவர் வாக்குமூலம்



கொழும்பு, செப்.17
குருநாகல் கனேவத்த பிரதேசத்தில் கடத்தப்பட்ட தமாரா கேஷானி எனும் சிறுமியைத் தான் கடத்திச்சென்றதற்குக் காரணம், பெரியவளானதும் அவரைத் திருமணம் செய்துகொள்வதற்கே என்று அந்தச் சிறுமியைக் கடத்திச்சென்ற இலேபெரும ஆரச்சிலாகே காமினி அல்லது 'கிறீஸ் காமினி' எனும் நபர் பொலிஸாருக்குக் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.
அவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"நான் மனைவியை விட்டு நீண்டகாலமாகப் பிரிந்து வாழ்கிறேன். அதனால் பல பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முயன்றேன். அனைவரும் என்னை நிராகரித்துவிட்டார்கள். அதனால், மனமுடைந்துபோன நான் அழகிய சிறுமி ஒருவரைக் கடத்திவந்து வளர்த்து அவள் பெரியவளானதும் திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்தேன். அதன் காரணமாகவே இந்தப் பிள்ளையைக் கடத்தி வந்தேன்.
ஒருநாள் நான் கூலி வேலையொன்றைத் தேடிக்கொண்டு அபகொலவேவ பிரதேசத்துக்கு சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த இந்தச் சிறுமியின் அழகில் சொக்கிப்போனேன். பெரியவளானால் இன்னும் அழகாக இருப்பாள் என்ற கற்பனையில் அன்றிரவு அவர்களது வீட்டுக்குச் சென்று ஜன்னலில் அடிக்கப்பட்டிருந்த பொலித்தீன் தாளை வெட்டி உள்ளே நுழைந்து, தாயின் பக்கத்தில் உறங்கிக்கொண்டிருந்த அந்தப் பிள்ளையைத் தூக்கிவந்து காட்டில் மறைத்து வைத்துக்கொண்டேன். அந்தச் சிறுமி அழும்போதெல்லாம் குருவிகளைக் காட்டி ஆறுதல்படுத்துவேன். மூன்று நாள்களாக அவளுக்குச் சாப்பிட பிஸ்கட் மட்டுமே கொடுத்து வந்தேன்."
இவ்வாறு அவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.
சந்தேகநபர் மனநோயால் பீடிக்கப்பட்டிருக்கலாம் எனவும், அவரை நீதிமன்றத்தின் மூலம் மனநல வைத்தியரிடம் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# யோசனைகளை ஏற்கும்வரை முரண்பாட்டை தொடருவோம்

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, செப்.17
"எமது கட்சியின் 12 யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்வரை அரசுடன் முரண்பாட்டையே தொடரப் போகின்றோம்"- என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.
ஊவா மாகாணத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"எமது கட்சியின் 12 யோசனைகளும் அரசைச் சரியான" பாதையில் 'இட்டுச்செல்வதற்கான யோசனைகளாகும். இந்த யோசனைகள் அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.
இந்தநிலையில் எமது கட்சி மாத்திரமே அரசுக்குள் உள்ள பிரச்சினைகளை ஏற்படுத்தும் கட்சியாக உள்ளது. அதாவது மக்களுக்காகவே இந்த பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதேவேளை- எமது கட்சியின் யோசனைகள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் கொள்கைகளில் உள்ளடக்கப்படும் என்று நம்புகின்றோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இன அழிப்புக்கு நீதி வேண்டி ஜெனிவாவில் நேற்று மாபெரும் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 17
மனித உரிமைகள் கூட்டத்தொடர் இடம்பெறும் ஜெனிவா அரங்குக்கு வெளியே அலையெனத் திரண்ட புலம்பெயர் தமிழர்கள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சுப்பிரமணிய சுவாமி ஆகியோரின் உருவப் பொம்மைகளை எரித்து, இன அழிப்புக்கு நீதி கோரி மாபெரும் போராட்டம் நடத்தினர்.
ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 27 ஆவது கூட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் உள்ள மனித உரிமை அரங்குக்கு முன்பாக ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்த தமிழர்கள் திரண்டு போராட்டத்தை நடத்தினர்.
போராட்டத்துக்கு முன்பதாக அங்கு திரண்ட ஆயிரக் கணக்கான புலம்பெயர் தமிழர்களும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனது பிரமாண்ட உருவப்படத்தை முன்னால் தாங்கியவாறு பேரணியாகச் சென்றனர். இதன் போது இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் என்று கோஷம் எழுப்பினர். அத்துடன் சகல தமிழின உணர்வாளர்களும், தமிழீழ தேசியக் கொடியை ஏந்திச் சென்றதுடன், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனது படத்தையும் தாங்கிச் சென்றனர்.
இந்தப் பேரணியின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இந்தியாவின் அரசியல்வாதி சுப்பிரமணிய சுவாமி ஆகியோரது கொடும்பாவிகள் நிலத்தில் இழுத்துச் செல்லப்பட்டன.
இறுதியில் பேரணி, ஐ.நா. மன்றத்தின் முன்பாக உள்ள முருகதாசன் திடலுக்கு வந்து சேர்ந்தது. அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்துக்கு முன்னதான ஈழத்தில் 'இந்திய அரசுக்கு எதிராக உணவுத் தவிர்ப்பில் இருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபனுக்கு ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது. அத்துடன் போரில் கொல்லப்பட்ட போராளிகள், பொது மக்களுக்கும் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.
அதன் பின்னர் கருத்துரைகளும் இடம்பெற்றன. இதன் போது இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் உயிரிழந்த பொதுமக்களுக்கும், இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் இனப்படு கொலைக்கும் நீதி வேண்டிப் பலரும் கருத்துக்களைத் தெரிவித்தனர். (வ-5)



Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 01 புதன் (17.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 295

## தென்னிந்தியத் திருச்சபையின் 40 பேர்ச் காணி சேந்தான்குளத்தில் கடற்படைக்காகச் சுவீகரிப்பு

### நாளை மறுதினம் அளவீட்டுப் பணி

யாழ்ப்பாணம், செப்.17

சேந்தான்குளத்திலுள்ள தென்னிந்தியத் திருச்சபைக்குச் சொந்தமான 40 பேர்ச் காணியைக், கடற்படை முகாம் அமைப்பதற்குச் சுவீகரிப்பதற்காக அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே கீரிமலை சேந்தான்குளத்தில் கடற்படையினர் தமது முகாமை அமைத்துள்ளனர். குறித்த முகாம் அமைந்துள்ள பகுதியைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒட்டப்பட்டிருந்தன.

இந்த நிலையில் குறித்த காணியை அளவீடு செய்வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## கேரளா கஞ்சாவுடன் மாட்டினார் ஒருவர்

கிளிநொச்சி, செப்.17

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தில் சுமார் ஒரு கிலோ 300 கிராம் கேரளாக் கஞ்சா வவுனியா மதுவரித் திணைக்களத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

(22ஆம் பக்கம் பார்க்க)

# இரணைமடு குடிதண்ணீர் திட்டம் மாற்றங்களுடன் நடைமுறைக்கு

## ஆசிய அபிவிருத்தி வங்கி சம்மதம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 17

**இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான குடிதண்ணீர் திட்டத்தை மாற்றங்களுடன் நடைமுறைப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி சம்மதம் வழங்கியுள்ளது.**

**இரணைமடுக் குளத்தின் புனரமைப்பு தனியாகவும், யாழ்.குடாநாட்டின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, கடல் நீரை நன்நீராக்கும் திட்டத்துக்கு தனியாகவும் உதவி வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள், வடக்கு மாகாண சபையுடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தனர். இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இரணைமடுக் குளத்திலிருந்து, யாழ்.குடாநாட்டுக்கு குடிதண்ணீர் கொண்டு வரும் செயற்திட்டம் கடந்த சில மாதங்களாக இழுபறி நிலைமையில் இருந்தது. வன்னி மாவட்ட விவசாயிகள், இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிதண்ணீர் கொண்டு செல்வதற்கு மறுத்திருந்தமையினால் இந்த நிலைமை பூதாகாரமாக மாறியிருந்தது.

இதனையடுத்து இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்

(22ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை ஜனாதிபதி ஒக்ரோபரில் திறக்கிறார்

கிளிநொச்சி, செப்.17

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் புதிய கட்டடத்தை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைக்கவுள்ளார். கிளிநொச்சி திருநகரில் புதிய மாவட்ட செயலகத்தின் கட்டடப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் ஜனாதிபதி அதனைத் திறந்து வைக்கவுள்ளார். இது தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11.00 மணியளவில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வட மாகாண ஆளுநர் திறக்கப்படவுள்ள புதிய மாவட்ட செயலகக் கட்டடத்தைச் சென்று பார்வையிட்டார்.

(த-18)

## தமிழ்த் தேசியப் பற்றாளரான மாணிக்கசோதி விபத்தில் சாவு

### அவரது ஒன்றுவிட்ட சகோதரரும் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், செப். 17

தமிழ்த்தேசியப் பற்றாளரான அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி (வயது-72), அவரது ஒன்று விட்ட சகோதரனான செல்லத்துரை செல்வகுமார் (வயது -70) ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மாணிக்கசோதி ஜனாதிபதி சட்டத்தரணியும், யாழ்.மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவியுமான செல்வி சாந்தா அபிமன்னசிங்கத்தின் மூத்த சகோதரனாவார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## சிறப்புப் பாட அனுமதி, வகுப்பறைகள் கோரி யாழ்.பல்கலை மாணவர் நேற்று போராட்டம்

### விரிவுரைகளையும் புறக்கணிக்க முடிவு

யாழ்ப்பாணம், செப். 17

தாம் விரும்பும் பாடநெறிகளில் விசேட கற்கையை மேற்கொள்ள அனுமதிக்குமாறும், விரிவுரைகள் நடைபெறுவதற்கு உரிய இடவசதி போதாமல் உள்ளதால் நிர்வாகம் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரியும் பல்கலைக்கழகத் திட்டமிடல், பொருளியல் மற்றும் அரசியல் பாட நெறிகளில் பயின்ற மாணவர்கள் நேற்று மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு நேற்றுத் தொடக்கம் வகுப்புக்களையும் புறக்கணித்துள்ளதாக மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விரும்பிய துறையைக் கற்க அனுமதி வழங்குங்கள், வகுப்புத் தடை என்றால் உடனடி அனுமதி சிறப்புக்கலை என்றால் காலதாமதமான அனுமதியா?, எமது ஆண்டில்

(22ஆம் பக்கம் பார்க்க)



## சரியான அறிவித்தல் இல்லை; மாணவர்கள் பெரும் ஏமாற்றம்

### வவுனியாவில் பெற்றோர் விசனம்

வவுனியா, செப். 17

சரியான அறிவித்தல் வழங்கப்படாமையால் போட்டிகளுக்கு வந்த மாணவர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

வவுனியா மாவட்ட கலாசார விழா நேற்று வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெறுவதாகப் பாடசாலைகள் உட்பட அனைவருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவிருந்த பிரதம விருந்தினருக்கு நேரம் இன்மையால் அது ஒத்திவைக்கப்பட்டது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களால் உரிய பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படாமையால் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வந்த பெருமளவான மாணவர்கள், குறிப்பாகத் தூர இடங்களில் இருந்து வந்த மாணவர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்

(22ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் நகைகள் திருட்டு

முல்லைத்தீவு, செப்.17

முல்லைத்தீவு நெடுங்கேணியில் அத்துமீறி விவசாயி ஒருவரின் வீடு புகுந்த திருடர்களால் அங்கிருந்த 11 பவுண் நகைகள் மற்றும் 17 ஆயிரத்து 500 ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளதாகப் பொலிஸார்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மும்மொழியின் நடைமுறையே சட்டக் கல்லூரியில் வேண்டும்

### இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, செப்.17

சட்டக் கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஆங்கில மொழிமூல பரீட்சை வினாத்தாள் திட்டத்தை மாற்றி மீண்டும் முன்பிருந்தபடி மும்மொழி நடைமுறையைக் கொண்டுவர அமைச்சும், ஆணைக்குழுவும் ஆவன செய்ய வேண்டும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாகச் சங்கத்தின் தேசியத் தலைவர் எம். அனஸ் மற்றும் தேசிய பொதுச் செயலாளர் ஏ.எஸ்.எம். சலீம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 17

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்தமை மற்றும் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 9 பேருக்கும் எதிர்வரும் 30 ஆம் திகதி

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கூ.ச.பணியாளர்களின் நிரந்தர நியமனத்துக்கான ஆவணங்களை அனுப்பவும்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.17

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் ஆளணி அங்கீகாரம் மற்றும் அவர்களது நிரந்தர நியமனத்துக்கான ஆவணங்களை சங்கங்கள் காலதாமதம் இன்றி உடனடியாக தமக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதிகமான கூட்டுறவுச் சங் கங்கள் பணியாளர்களின் ஆளணி அங்கீகாரம், நிரந்தர நியமனம் போன்றவற்றுக்கு நேர்முகத் தேர்வுகளை நடத்தி விட்டு அதற்கான விவரங்களை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவுக்கு அனுப்பத் தவறி வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, "ஆளணி அங்கீகாரத்துக்கான பணியாளர்களுக்கு நேர்முகத் தெரிவு நடத்தப்பட்டால் அதற்குரிய சகல ஆவணங்களையும் சங்கங்கள் உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்க வேண்டும். அதனைவிட நேர்முகத் தேர்வில் பணியாளர் ஒருவர் போதிய கல்வித் தகைமை இன்றி தேர்வின் போது சம் பந்தப்பட்ட பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டால் அதற்கான காரணத்தையும் சங்கம் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

குறிப்பாக ஆளணி அங்கீகாரத்துக்காக நேர்முகத் தேர்வு நடத்தப்பட்ட பணியாளர்களது ஆவணங்களை சங்கங்கள் துரிதகதியில் அனுப்பி வைக்காவிட்டால் அந்தச்சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படும். சங்கங்களின் ஆளணி மீளாய்வு தொடர்பான பூரண விவரங்களைத் திரட்டும் பணியில் திணைக்களம் மேற்கொள்ளவுள்ள இந்த ஆளணி மீளாய்வைத் திரட்டுவதற்கு திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் பிரத்தியேகமாகச் செயற்பட்டும் வருகின்றார். இந்தக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் சங்கங்களின் ஆளணி தொடர் பான விவரங்கள் மீளாய்வு செய்யப்படும்" என்றார். (வ-17)

# மரண அறிவித்தல்கள்

## இளையப்பா செல்வராசா (ஜேர்மனி)



குரும்பசிட்டி,தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பா செல்வராசா 15.09.2014 திங்கட்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையப்பா-சின்னம்மா தம்பதியரின் இளையமகனும், சோமசுந்தரம் -அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தமலரின் பாசமிகு கணவரும், தவமணி (கனடா), காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும், கவிஞர் கந்தவனம் (கனடா), பாலச்சந்திரன், அரியமலர், இராமச்சந்திரன், ஞானமலர் ஆகியோரின் மைத்துனரும், சண்முகநாதன், சிவானந்தம் ஆகியோரின் சகலனும், புஸ்பமலர், கலைவாணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குரும்பசிட்டி கிழக்கு,
புதியவீதி, தெல்லிப்பழை.

(52335)(5.8.3)

தகவல்:
இரபநாயகர் (சுப்பிரி-சகோதரி)



## திருமதி அன்னபூரணம் திருநாவுக்கரசு

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 113, பருத்தித்துறை வீதி, நல்லூரை (பாரதியார் சிலைக்கு அருகில்) வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் திருநாவுக்கரசு 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலைஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும், இராஜசேகரம், லோகநாயகி (கனடா), குணசேகரம் (சுவிஸ்), தயாநிதி (லண்டன்), கலாறதி, அற்புதராசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், குணசிங்கம் (கனடா), மாலினி (சுவிஸ்), குகேந்திரன் (கிருபா - லண்டன்), சர்வானந்தன் (யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), சசித்திரா (கனடா), ஆகியோரின் அன்பு மாமியும், நாகம்மா, காலஞ்சென்ற சுந்தசாமி மற்றும் சரஸ்வதி (கனடா), நித்தியானந்தன், இளையதம்பி (அம்பாள் ஹாட்வெயர்), லெட்சுமி (ஓய்வுநிலை ஆசிரியை - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), இராசலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), கனகராஜா மற்றும் தனபாக்கியம், தில்லைநாயகி, பரராசசிங்கம் (ஓய்வுநிலை எழுதுவினைஞர்), பத்மநிதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காண்டீபன் (கனடா), ஜெயத்திரா (கனடா), ஜெனனி (சுவிஸ்), கோபிகா (சுவிஸ்), ஜஸ்மினி (சுவிஸ்), மதனிகா, மதுஷிகா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கருணிகா (சென்.ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்), கிருஷன் (கனடா), கிருஷா (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், அதீஸ் (கனடா), அகினேஸ் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2014) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நல்லூரிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

113, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொ.பே.இல: 0212225528, 0773946198

(52330)
(12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியை
**திருமதி இராஜசுலோஜனா தயசீலன்** அவர்களின்
மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனை அடைவதோடு, அவரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிகழகம்**
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், புத்தூர்.

(52334)
(45.6.3)

# கண்ணீர் அஞ்சலி




எனது நெருங்கிய நண்பனாகிய
**தர்மராஜா** அவர்களின் அன்பு
மனைவியாகிய நல்லோரை
வரவேற்கும் நல்லாள்
திருமதி **வள்ளிநாயகி தர்மராஜா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

**க.சிவராஜா** -J.P.
(வைத்தியர்)

சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

(52323) (45.6.3)

# மரண அறிவித்தல்



## அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், உடுவில்)*

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி நேற்றுமுன்தினம் (15.09.2014) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் உடுவில், சித்தாவத்தையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அபிமன்னசிங்கம் (பழைய விதானையார்) குலமணி தம்பதியரின் அன்பு மகனும், இராஜகுலதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சாந்தா அபிமன்னசிங்கம் (ஜனாதிபதி சட்டத்தரணி), சித்தாவத்தை உதயகுமார் (பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரனும், உமாதேவியின் (சிறுப்பிட்டி) அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.09.2014) புதன்கிழமை மு.ப.10.30 மணிக்கு வேதாரணியர் வளவு, உடுவிலில் உள்ள (Divisional Secretariat, Vali South முன்பாக) அவரது இல்லத்திலிருந்து பூவோடை (இணுவில்) மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வேதாரணியர் வளவு,
உடுவில்.

(52336)
(12.3.6)

தகவல்:
செல்வி.சாந்தா-அபிமன்னசிங்கம்
(ஜனாதிபதி சட்டத்தரணி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
## ஞானம்மா கனகரத்தினம்



மலர்வு
02.09.1935

உதிர்வு
18.08.2014

கடந்த 18.08.2014 சிவபதமடைந்த எமது அப்பம்மா ஞானம்மா கனகரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (17.09.2014) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.(பேரப்பிள்ளைகள்)

பாலசந்திரன் பிரசன்னா (அவுஸ்திரேலியா),
பாலசந்திரன் விேனாகாந்த் (பிரான்ஸ்),
பாலசந்திரன் சமர்த்தனி
பாலசந்திரன் லபோசன் (சுவிஸ்),
மருமகள் (ரமா)

அராலி

## கலைவிழா

யாழ்ப்பாணம், செப்.17
கொழும்பு நடேஷ்வராலயா நுண்கலைக் கல்லூரியின் 12 ஆவது வருடாந்த கலைவிழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் 300 மாண வர்களுக்கு மேல் பங்கு கொண்டு கலை நிகழ்வுகளை நிகழ்த்தவுள்ளனர். (வ)

## ஹோமியோபதி வைத்தியர்கள் பதிவுசெய்யலாம்

வடக்கிலும் கிழக்கிலும் 10 வருடங்களுக்கு மேல் ஹோமியோபதி வைத்தியத்தை மேற்கொண்டு வரும் வைத்தியர்களுக்கான பதிவு நடவடிக்கைகள் தேசிய ஹோமியோபதி அமைப்பால் மேற்கொள்ளப்படவுள்ளன.
வைத்தியர்கள் தங்கள் முழு சுயவிவரத்தையும் தபால் உறை, 10 ரூபா முத்திரையுடன் தலைவர் தேசிய ஹோமியோபதி அமைப்பு, இல. 160/1 கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சூரிய சக்தி தொழில் நுட்பங்கள் குறித்த விளக்கம்

வோர்டும் எனர்ஜி என்னும் நிறுவனத்தினர் சூரிய சக்தியை மிகவும் பயனுள்ள வினைத்திறன் மிக்க வகையில் பயன்படுத்தக் கூடிய வகையிலான தொழில் நுட்பங்கள் குறித்த தெளிவான விளக்கங்களை நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல.165, மானிப்பாய் வீதியில் உள்ள யாழ்.வணிகர் கழகத்தின் பணிமனையில் பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.
ஆர்வமுடையவர்கள் அனைவரும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றி பயனடை யுமாறு யாழ். வணிகர்கழகம்கேட்டுள்ளது. (வ)

# ரயில் வீதிக் கடவைகளில் உரிய கற்கள் பதிக்கவில்லை

## பயணிப்போர் சிரமத்தில்



யாழ்ப்பாணம், செப். 17
ஏ -9 வீதியில் கச்சேரியடி, நாவலர் வீதி உட்பட பல வீதிகளிலும் ரயில் வீதிக் கடவைகளில் அதற்கென உரிய கற்கள் போடப் படாததால் அந்தப் பாதை வழியே பயணிக்க முடியாது பயணிகள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
ரயில் வீதிக் கடவைகளில் கருங்கற் சல்லிகள் போடப்பட்டுள்ளன. ஆனால் அந்த இடங்களில் கொங்கிறீற் கற்கள் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். சில இடங்களில் மாத்திரம் அவ்வாறு கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. வேறு சில இடங்களில் அத்தகைய கொங்கிறீற் கற்கள் அந்த இடங்களில் குவிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்னும் பதிக்கப்படவில்லை. அதிகாரிகள் அக்கறையற்று உள்ளனர். அதற்குப் பொறுப்பாக உள்ளவர்களும் அவ்வாறே உள்ளனர் என்று குற்றம் சுமத்தப்படுகிறது.
யாழ்.நாவலர் வீதியில் ரயில் பாதையைக் கடக்கும் இடத்தில் கருங்கல் சல்லிக் கற்களே போடப்பட்டுள்ளன. ஆனால் கொங்கிறீற் கற்கள் இன்னமும் பதிக்கப்படவில்லை. நேற்று நண்பகல் அவ்வழியே இரும்புப் பொருள்களை ஏற்றிச் சென்ற லாண்ட் மாஸ்டர் ரயில் தண்டவாளத்தைக் கடந்த போது அதில் இறுகியிருந்த சல்லிக் கற்களைக் கிளறி பாரிய பள்ளத்தை ஏற்படுத்தியுள்ளது. தவிர அது அந்த வழியே தொடர்ந்து பயணிக்க முடியாத நிலையில் நின்றவேளை அவ்வழியே சென்றவர்களே உதவி புரிந்து அந்த வாகனத்தை மறுபக்கம் தள்ளிவிட்டனர். அது சென்ற பின்னர் அது ஏற்படுத்திய குழியால் அவ்வழியே சென்றவர்கள் கடும் சிரமங்களை எதிர் கொண்டனர். எனவே அதற்குரிய கொங்கிறீற் கற்களைப் பதிக்குமாறு பயணிகள் கோருகின்றனர். (வ-4)

# தென்மராட்சி பிரதேச பொலிஸ் அதிகாரிகளுக்கு செயலமர்வு



தென்மராட்சி.செப்.17
தென்மராட்சி பிரதேசத்துக்கு உட்பட்ட சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு அண்மையில் சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்தில் இடம் பெற்றது.
சிறுவர்கள், பெண்கள் தொடர்பான சட்டம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல் ஆகியவை தொடர்பில் செயலமர்வு நடைபெற்றது. வேள்ட் விசன் நிறுவன அனுசரணையுடன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்த சேகரன் தலைமையில் செயலமர்வு இடம்பெற்றது.
இலங்கை சட்ட உதவி நிலைய சட்ட ஆலோசகர் திருமதி சஜீவனி அபேவர்த் தன, களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளரும், பிரதான பொலிஸ் பரிசோதகரு மான முத்திக பாலச்சந்திர வேள்ட்விசன் நிறுவன செயல் திட்ட ஒருங்கிணைப்பாளர் சமன் கருணாதிலக ஆகியோர் கருத்துரை வழங்கினர்.
சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றப் பதிவாளர் எம்.எஸ். எம்.மசீர் செயலமர்வின் இணைப்பாளராக செயற்பட்டார். (வ-9)

# துணுக்காய் கல்வி வலயத்தில் விசேட பயிற்சிப் பட்டறைகள்

துணுக்காய்.செப்.17
துணுக்காய் கல்வி வலயத்தின் வலயத்துக்குட்பட்ட பிரதேசங்களில் விசேட பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.
வரவுக் குழுக்களை வலு வுள்ள தாக்கல் மற்றும் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு வீதத்தை நூறு ஆக்குதல் என்னும் தொனிப் பொருளில் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகின்றன.
கடந்த வாரம் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும் கடந்த 9 ஆம் திகதி மாங்குளம் மகா வித்தியாலயத்திலும் பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்றன.
வயது முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சக்திதரனின் ஏற்பாட்டில் நடைபெறும். இந்தப் பயிற்சிப் பட்டறைகள் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தலைமையில் நடைபெற்று வருகின்றன.
யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகளில் அந்தந்தப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செய லர்கள், கிராம அலுவலர்கள், சிறுவர் நன்நடத்தை அலுவலர், பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் என பெருமளவானோர் கலந்து கொள்வதாகத் தெரிவிக் கப்பட்டது. (வ-9)

# கிணற்றுப் பாதுகாப்பு மூடி திருட்டு

யாழ்ப்பாணம், செப்.17
வேலணை வங்களாவடி கடைத்தொகுதியில் கடைக்காரரினதும் பொது மக்களதும் பாவனைக்காக வேலணை பிரதேச சபையால் அமைக்கப்பட்டிருந்த கிணற்றுக்குப் போடப்பட்ட பாதுகாப்பு மூடி இனந்தெரியாதவர்களால் ஞாயிற்றுக்கிழமை திருடிச் செல்லப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.
கிணற்றின் பாதுகாப்புக்கென வேலணைப் பிரதேச பொது சுகாதார பரிசோதகர்களின் பணிப்புரையை அடுத்து கடைத் தொகுதியில் உள்ள வியாபாரிகள் மேற்படி பாதுகாப்பு மூடியைக் கிணற்றுக்குப் பொருத்தியிருந்ததாகக் கூறப்பட்டது. (வ-7)

## மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு சத்தியலிங்கம்

வரணி, செப்.17
வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் கடந்த வியாழக் கிழமைபிப4மணிக்கு மிருசுவில் பிரதேச மருத்துவ மனைக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டுஅங்குவைத்திய அதிகாரி மற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.
வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராசா ஆகியோர் இதன் ... போது உடனிருந்தனர். (வ-122)


# மரண அறிவித்தல்

## மாரிமுத்து பாலசுந்தரம்

(முன்னாள் உரிமையாளர் பாலா கராஜ் - சாவகச்சேரி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து பாலசுந்தரம் 14.09.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து- மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மட்டுவில் வாகையடியைச் சேர்ந்த துரைபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், பவளராணியின் அன்புக் கணவரும், மாரிமுத்து கனகசபை, காலஞ்சென்ற மாரிமுத்து சிவஞானத்தின் அன்புச் சகோதரனும், சுதாமினி (கனடா), தர்மேந்திரா(ஆஸ்திரேலியா-பல் வைத்தியர்), சத்தியதீபா(கனடா), அனுராதா (காணி நிர்வாக திணைக்களம்- யாழ்ப்பாணம்), யசேந்தினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன், காயத்திரி, நந்தகுமார், சியாமளன்(ரட்ணாஸ் வைன்டிங் சொப் -ஸ்ரான்லி றோட்), பிரபாகர் ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தசாமி, யோகராணி, தர்மரட்ணம், ஜெயராணி, அமிர்தராணி, பாக்கியதுரை, அற்புதராணி, மகாதேவா ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினிசன், வினிஜா, இசான், மாயா, அஸ்வின், றெவின், அஸ்மிகா, பர்மினி, ஆகாஷினி, கவின்சன், ஆரியா, விதிஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(18.09.2014)வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

86/2, வளாக வீதி,
கொக்குவில் மேற்கு,கொக்குவில்.
தொ.பே.: 021 222 5366, 077 614 1496

தகவல்: குடும்பத்தினர்.
(0260314)(S.B.S)



# கண்ணீர் அஞ்சலி



## றொனி பாக்கியஜோதி கனேசன்

(முன்னாள் ஆசிரியர் - யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி)

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நாம் ஆழ்ந்த கவலை அடைவதோடு, எமது நிறுவனப் பயனாளிகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்குபடுத்தி சிறப்பாக நடத்தியமையை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமைத்துவக் குழுவினரும் பணியாளர்களும் (02322) (46.6.3)
யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், யாழ்ப்பாணம்.



# மரண அறிவித்தல்

## செல்வதுரை செல்வகுமார் (ஐயக்கோன் தம்பர்)

உடுவில் சித்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வதுரை செல்வகுமார் நேற்று (16.09.2014) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.
அன்னார் சண்முகாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்வதுரை - தவமணி தம்பதியரின் புதல்வரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: மனைவி

## கிளாலி கடற்பரப்பில் படகோட்டப் போட்டி



வலி.தென்மேற்கு, செப்.17
பச்சிலைப்பள்ளி பிரதேச கடற்றொழிலாளர் மத்தியில் ஒற்றுமையையும் ஊக்குவிப்பையும் ஏற்படுத்தும் நோக்குடன் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்குக் கிளாலி கடற்பரப்பில் படகோட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் ஜசாக் நிறுவனமும் இணைந்து நடத்தும் இந்தப் போட்டி கிளாலி துறைமுகத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் இந்தப் பிரதேசத்திலுள்ள கிளாலி, ஆத்தி நகர், புலோப்பளை கிழக்கு, சங்கத்தான் வயல் ஆகிய நான்கு கடற்றொழி லாளர் சங்கங்களைச் சேர்ந்த மீனவர்கள் பங்குபற்றுவார்கள்.

இதேவேளை, பெண்கள், முதியோர், சிறுவர்களுக்கான பல தரப்பட்ட விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறவுள் ளன.

சமாசத் தலைவர் கே.தில்லைக்குமரன் தலைமையில் கிளாலித் துறைமுகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக செயலாளர், கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொள்வார்கள்.

இதேவேளை, பாடசாலை மட்டத்தில் பிரதேச அபிவிருத்தியும் மீனவர் அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் 8 ஆம், 9 ஆம், 10 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியும் இடம்பெறவுள்ளது. (த-115)




துணுக்காய் அமதிபுரம் கிராமத்தில் மிதிவெடிகளுடன் காணப்படும் போர்க்கால மண் அரணை அகற்றுமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தில் போர் நடைபெற்ற காலத்தில் அமைக்கப்பட்ட மண் அரண் இதுவரை அகற்றப்படாமல் மிதிவெடிகளுடன் காணப்படுகின்றது. இது அக்கராயன் கிராம அலுவலர் பிரிவின் காட்டுப்பகுதிக்குள் நீண்டு செல்கின்றது. வீதிக்கு மிக அருகில் காணப்படும் இந்த மண் அரண் எப்பொழுதும் அச்சுறுத்தல் மிகுந்ததாகக் காணப்படுவதாக கிராம மக்கள் கூறுகின்றனர். இதனை அகற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர். (த-18)

# நீண்ட காலமாக மரக்கடத்தலில் ஈடுபட்ட நால்வர் மொறவெவ காட்டில் சிக்கினர்

திருகோணமலை, செப். 17
திருகோணமலையில் பல வருட காலமாக மரக்கடத்தலில் ஈடுபட்டு வந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நால்வரும் மரம் வெட்டிக்கொண்டிருக்கும் வேளையே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர்கள் நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று விலை மதிப்பான மரங்களை வெட்டி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்கள் குறித்து பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து மொறவெவ குளத்து கர்ட்டுப் பகுதியில் வைத்து நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரில் ஒருவர் தப்பி ஓடியதாகவும் அவரைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை திருகோண மலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ள தாகத் தெரிவித்த மொற வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-10)



## நோர்வேத் தூதுவர் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, செப்.17
இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் அடங்கிய குழுவினர் கிளிநொச்சி அரச அதிபரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று காலை 8.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நிலவரங்கள் தொடர்பாக அரச அதிபரிடம் நோர்வேத் தூதர் கேட்டறிந்ததாக தெரிவிக்கப்பட்டது.

தூதுவர் யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வழியில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (த-18)

ULTRA TECH வடபகுதியில்
ULTRA TECH சிமெந்து வடபகுதியில் பொறியியலாளரின் மற்றும் கட்டட ஒப்பந்ததாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆதித்தியா பிறிலா கம்பனியின் ULTRA TECH சிமெந்து தனது விற்பனைத் துறையை வடபகுதி நோக்கி நகர்த்தி உள்ளது. கல் அரிபவர்கள் மற்றும் சகல தேவைகளுக்கும் சிறந்த சிமெந்து என்று பொறியியலாளரின் சிபார்சு பெற்ற வெற்றிச் சின்னம் "ULTRA TECH சிமெந்து" சீக்கிரத்தில் காயும் தன்மையும் அதிகூடிய பசைத் தன்மையைக் கொண்ட சிமெந்து. வாடிக்கையாளர்களே ULTRA TECH சிமெந்தைப் பாவித்து நீங்கள் நேரத்தை மிச்சம் பிடித்து பணத்தையும் சேமித்து இலட்சாதிபதி ஆவதற்கு அரிய சந்தர்ப்பத்தை ULTRA TECH ஏற்படுத்தி உள்ளது. கூடிய கற்களைப் பெறலாம்.
உடனடியாக ஓடர்களைப் பதிவுசெய்யும் முகவரி : (52271) (7.6.3)
City Suppliers
129, Stanley Road, Jaffna. T.P.No : 021 221 9300

வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு
கொடிகாமம், பருத்தித்துறை பிரதான வீதியில் (குடமியன், வரணி பகுதியில்) வீட்டுடன் கூடிய 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 856 9774 (52312) (16.3)

வேலையாள்கள் தேவை
கட்டட நிர்மாண வேலைக்கு மேசன், மேசன் உதவியாளர்கள் தேவை.
தொடர்பு: 077 927 1852 (52338) (45.3.6)

ஒரே மருந்தில் எல்லா நோயும் தீருமா ?(ஆம் என்பவர் பலர்)
உங்கள் நிலைக்கேற்ற.
படிமுறையில் அமைந்த ஆங்கிலப் பயிற்சி நெறிகளை அதி நவீன மற்றும் நட்பான கல்விச்சூழலில் நிபுணர்களிடம் கற்றுத்தேர்ந்திடுங்கள்.
KU Education
சர்வதேச ஆங்கிலம்
General English
Spoken English
Business English
IELTS/A1-B1-ESOL
City & Guilds APPROVED CENTRE
UEC Quality Education
16 Years
http://edu.kugroup.info
மெதுவாக கற்கும் திறனுடையவர்களுக்காகவே விசேடமாக உருவாக்கப்பட்ட பயிற்சிநெறிகள்
Knowledge Universe
The British College of Studies
No 626,1/1,K.K.S Road,Jaffna
021-3208342/0777302882
Only centre with UK-MBA qualifed lecturers in Jaffna

Mega ஸ்கொலர்ஷிப்
கொம்பியூட்டர் தொழிற் கல்விக்கான புலமைப்பரிசில்
கொம்பியூட்டர் புலமைப்பரிசில்
• பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்.
• பரீட்சையை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.
• 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
• இலகுவான 25 (MCQ) பொது அறிவு வினாக்கள்
• பரீட்சை 30 நிமிடங்கள் மட்டுமே.
• 75% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு).
• இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை).
• தவணைமுறை கட்டண வசதி.
• சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Win 75%
Sept. 21st
ஞாயிறு
விரையுங்கள், வெற்றிபெறுங்கள்

தற்பொழுது நேரடி பதிவுகள் ஆரம்பம்
CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ். நகர்
2G ஸ்ரான்லி வீதி,
021 2225677

## எனக்கு 81, உனக்கு 24

### மொடல் அழகியின் காதல் வலையில் சிக்கிய தாத்தா

வியன்னா,செப்.17

ஆஸ்திரியா நாட்டில் கோடீஸ்வர முதியவர் ஒருவர் இளம் வயது மொடல் அழகியைத் திருமணம் செய்துள்ளமை அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த ரிச்சர்ட் லுங்கர் வயது-81) என்ற முதியவர், ப்ளேபாய் பத்திரிகையின் மொடல் அழகியான கேதி என்ற பெண்ணின் காதல் வலையில் விழுந்துள்ளார்.

சுமார் 7 மாத காலமாக காதலித்து வந்த இந்த ஜோடி, கடந்த 13 ஆம் திகதி திருமணம் செய்து கொண்டுள்ளது. இந்த வயது வரம்பை மீறிய திருமணம் ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் உள்ள ரிச்சர்டின் அரண்மனையில் அரங்கேறியுள்ளது. மேலும் இது ரிச்சர்ட்டுக்கு ஐந்தாவது திருமணம் என்பது குறிப்பிடத்தக்கது.



மெக்ஸிக்கோ நாட்டின் பாஜா கலிபோர்னியா குடாநாட்டில் நேற்று முன்தினம் பெய்த கனத்த மழை மற்றும் வீசிய கடும் சூறாவளியால் கோபோ சான் லூகாஸ் மரங்கள் முறிவடைந்து மின் விநியோகக் கம்பிகள் மீது வீழ்ந்துள்ளன. அவற்றை அகற்றும் பணிகள் இடம்பெறுகின்றன. (வ)

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஹிலாரி போட்டி?



வொஷிங்டன், செப்.17

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட, அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டனின் மனைவியும், முன்னாள் வெளியுறவுத் துறைஅமைச்சருமானஹிலாரி கிளின்டன் தயாராகி வருவதாகத்தகவல்கள்தெரிவிக்கின்றன.

அயோவா மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் ஹார்கின்ஸ், அந்தப்பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு இண்டியா னோலா நகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஹிலாரிகிளின்டன் விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பொதுவாக, ஜனாதிபதி வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான முதற்கட்டத் தேர்தல் அயோவாவில் ஆரம்பமாவது வழக்கமாக இருந்து வருகிறது.

அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றதன் மூலம், 2016 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதிதேர்தலில்போட்டியிட ஹிலாரிகிளின்டன் தயாராகி வருவதாக பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர். ஹிலாரி அங்கம் வகிக்கும் ஜனநாயகக் கட்சியின் அரசியல் நடவடிக்கைக் குழு தேர்தலில் ஹிலாரி போட்டியிட ஆதரவு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே, கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், ஜனநாயகக் கட்சி வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் போட்டியிட்ட ஹிலாரி, மூன்றாவது இடத்தைப் பிடித்தார் என்பது நினைவுகூரத்தக்கது. (வ)

# படகை மோதித் தகர்ப்பு; 500 பேர் உயிரிழப்பு

இத்தாலி, செப். 17

மத்திய தரைக் கடலில் சட்ட விரோதமாக அகதிகளை ஏற்றிச் சென்ற கும்பல், அந்தப் படகை வேண்டும் என்றே இடித்துக் கவிழ்த்ததில் அதிலிருந்த 500 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் செய்தித் தொடர்பாளர் பிலாவியோடி கியாகோமோ நேற்று முன்தினம் கூறியதாவது:-

மால்டா அருகே, மத்திய தரைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இருவரை அந்த வழியாகச் சென்ற சரக்குக் கப்பலில் இருந்தவர்கள் கடந்த வியாழக்கிழமை மீட்டனர். அவர்களைத் தவிர, கடலில் சிக்கிய மேலும் 9 பேரை கிரேக்கம், மால்டாவைச் சேர்ந்த கப்பல்களிலிருந்தவர்கள் மீட்டனர்.



அவர்களுடன் சுமார் 500 பேர் மேலை நாடுகளில் தஞ்சம் கோரி ஒரு படகில் வந்ததாகவும், அவர்களை சட்ட விரோதமாக அழைத்து வந்தவர்கள் அந்தப் படகை வேண்டும் என்றே கவிழ்ந்ததாகவும் மீட்கப்பட்ட அகதிகள் தெரிவித்தனர்.

கவிழ்க்கப்பட்டதாகக் கூறப்படும் அந்தப் படகிலிருந்த 500 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்று உறுதி செய்யப் படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அகதிகளை அந்தப் படகில் ஏற்றிக்கொண்டு, எகிப்தின் டாமியெட்டா நகரிலிருந்து சட்ட விரோதக் கும்பலொன்று கடந்த செப்ரெம்பர் 6 ஆம் திகதி புறப்பட்டதாக உயிர் பிழைத்தவர்கள் கூறினர்.

அவர்களது கூற்றுப்படி, தனிப் படகில் வந்த அந்தக் கும்பல், வழியில் அகதிகளை வேறு படகுகளுக்கு பல முறை மாறச் சொல்லியுள்ளனர்.

அப்படி அவர்கள் மாறச் சொன்ன ஒரு படகு மிகவும் சிறியதாக இருந்ததால் அதில் ஏற அகதிகள் மறுத்துள்ளனர். இதனால் கோபமடைந்த அந்தக் கும்பல், அகதிகள் இருந்த படகை மோதித் தகர்த்ததாக மீட்கப்பட்ட அகதிகள் கூறினர்- என்றார்.

மீட்கப்பட்டவர்கள் கூறிய தகவல்கள் உறுதிப்படுத்தப்படவில்லை.

இதுகுறித்து இத்தாலிய காவல் துறை விசாரணை மேற்கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அகதிகள் சென்ற இரு வேறு படகுகள் கவிழ்ந்ததில் 400 பேர் உயிரிழந்தனர்.

அதுமுதல் தாங்கள் மேற்கொண்டு வரும் ரோந்துப் பணியில், இதுவரை 2,380 அகதிகள் மீட்கப்பட்டுள்ளதாக இத்தாலிய கடற்படை தெரிவித்துள்ளது. (வ)

## பிணைக் கைதிகள் தொடர்பில் ஐ.எஸ்.ஐ.எஸ். மீண்டும் மிரட்டல்

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் பிடியில் உள்ள 2வது பிரித்தானிய பிணைக் கைதியின் தலையைத் துண்டிக்கப் போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பல பகுதிகளை கைப்பற்றிய ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஞாயிற்றுக்கிழமை பிரிட்டனைச் சேர்ந்த டேவின் ஹெய்ன்ஸ் என்ற நபரின் தலையைத் துண்டித்து கொலை செய்துள்ளனர்.

இந்தநிலையில் தங்களுக்கு எதிராகப் போர் புரிவோருக்கு ஆதரவாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தொடர்ந்து செயற்பட்டால், மற்றொரு பிணைக் கைதியான ஹென்னிங் என்பவரின் தலையைத்




துண்டித்துக் கொலை செய்வோம் என ஐ.எஸ். ஐ.எஸ். இன் ஜோன் என்ற தீவிரவாதி காணொலி ஒன்றில் மிரட்டல் விடுத்துள்ளார்.

ஹென்னிங் பிரிட்டனின் மான்செஸ்டரில் உள்ள எக்லெசில் இருந்து வந்த முன்னாள் கார்ச்சாரதி என்று கூறப்படுகிறது.

அவர் கடந்தாண்டு சமூகப் பணியில் ஈடுபடுவதற்காக துருக்கியில் இருந்து சிரியா எல்லைக்குள் வந்தபோது கடத்தப்பட்டிருந்தார். (வ)

## பழங்குடியின கிராமத்தில் ஆஸ்திரேலிய பிரதமர்

சிட்னி, செப்.17

ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட், ஒரு வார காலத்துக்கு தனது தலைமை அலுவலகத்தை விட்டுவிட்டு நுலுன்பை என்ற பழங்குடியின கிராமத்தில் குடிசை அமைத்துத் தங்கியுள்ளார்.

டார்வின் நகரில் இருந்து சுமார் 1000 கி.மீ. தொலைவில் இருக்கும் அந்தக் கிராமத்துக்கு, அலுவலகத்தில் இருக்கும் அனைத்து விதமான தகவல் தொடர்பு சாதனங்களுடன் விமானத்தில் சென்று இறங்கிய டோனி அபோட்டை, அதிகாரிகளும், கிராமவாசி



களும்உற்சாகத்தோடுவரவேற்றனர்.

கடந்த ஆண்டு ஆஸ்திரேலிய பிரதமராகப் பதவியேற்றபோது, பழங்குடியின மக்களுக்கு உறுதியளித்தபடி, ஒரு வார காலத்துக்கு அந்தக் கிராமத்தில் தங்கி, தனது அலுவலகப் பணிகளை மேற்கொள்ளவிருக்கிறார் டோனி அபோட். (வ)

## ஜப்பானில் நிலநடுக்கம் சுனாமி அபாயம் இல்லை

டோக்கியோ, செப்.17

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவு கோலில் 5.6 ஆகப் பதிவாகியுள்ளது.

டோக்கியோவை மையமாக வைத்து ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின.

எனினும் உயிர்ச் சேதமோ, பொருட் சேதமோ ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை. இந்த சுனாமியின் தாக்கம் பயங்கரமாக இருந்த போதும், சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

## இந்திய எல்லைக்குள் சீன கிராம மக்கள் ஊடுருவல்

டில்லி, செப். 17
சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் இந்தியா வருகை தரவுள்ள நிலையில், இந்திய எல்லைப் பகுதியான லடாக்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சீனர்கள் ஊடுருவியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நீர் மின்சார உற்பத்தி நிலையத் தொழிலாளர்களை அவர்கள் விரட்டியடித்ததாகவும் கூறப்படுகிறது.
இதுகுறித்து துணை ஆணையாளர் சிம்ரன்தீப் சிங் கூறியதாவது:-
இந்திய-சீன எல்லையில் உள்ள டெம்சோக் கிராமத்தில் நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்துக்கு சீனா தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு அவ்வப்போது போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன.
சீனாவில் உள்ள தோஷிகங் கிராமத்தைச் சேர்ந்த ஏராளமானோர் சீன அரச வாகனங்களில் இந்திய எல்லைக்குள் திங்கட்கிழமை அழைத்து வரப்பட்டனர். பின்னர் அங்கு நீர் மின்சார உற்பத்தி நிலையம் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியத் தொழிலாளர்களை அவர்கள் அங்கிருந்து விரட்டியடித்தனர்"- என்றார்.
இதற்கிடையே சுசுல் எல்லைப் பகுதியில் திங்கட்கிழமை நடைபெற்ற இந்தியா- சீனாவைச் சேர்ந்த இராணுவப் படைத் தலைவர்கள் இடையிலான கொடியமர்வு கூட்டத்தில் ஊடுருவல் குறித்த பிரச்சினை இந்தியத் தரப்பில் எழுப்பப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (வ)

## ஈரோடு பஸ் நிலையம் அருகே வெடிகுண்டு மீட்பு

ஈரோடு பஸ் நிலையம் அருகே வெடிகுண்டு போன்ற பொருளை பொலிஸார் கைப்பற்றினர். பஸ் நிலையம் அருகேயுள்ள ஒரு தெருவில் வெடிகுண்டு போன்ற பொருள் கிடப்பதாக ஈரோடு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வில், நூலால் சுற்றப்பட்ட பொருள் மீது திரி இணைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. அந்தப் பொருளைக் கைபற்றிய பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.(வ)



## சரணடைந்த தீவிரவாதிகளுக்கு மத்திய பாதுகாப்பு படையில் பயிற்சி

மணிப்பூர், செப்.17
வடகிழக்கு மாநிலமான அசாம், மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்களில் ஒப்பந்த அடிப் படையில் சரணடைந்துள்ள தீவிரவாதிகளுக்கு மத்தியப் பாதுகாப்புப் படையில் பயிற்சியுடன் பணி வழங்க மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்காக காத்திருப்பதாகத் தெரிய வருகிறது.
தீவிரவாதத்தை இனிமேல் கையில் எடுக்கப்போவதில்லை என்கிற ஒப்பந்தத்துடன் வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதிகள் சரண் அடைந்துள்ளனர். அவர்களுக்கு மத்தியப் பாதுகாப்புப் படையில் பயிற்சியுடன் பணி வழங்க மத்திய உள்துறை அமைச்சகம்பாதுகாப்பு அமைச்சகத்துக்குப் பரிந்துரை செய்திருந்தது. இந்தப்பரிந்துரையை ஏற்றுக்கொண்ட பாதுகாப்பு அமைச்சகம் மத்திய பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவை ஒப்புதலுக்காகக் காத்திருப்பதாகத் தெரிய வருகிறது.
பாதுகாப்புப் படையில் இணைவதற்கு கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பு என்றும், அவர்களுக்கு வயது வரம்பு என்பது 35 வயதுக்குள் என்றும் தெரிய வருகிறது.
அவர்களுக்கு 10 ஆம் வகுப்புக்கான பயிற்சியும் வழங்கப்பட்டு, தெரிவு எழுதவும் அனுமதி வழங்கப்படும். பாதுகாப்புப் படைப் பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு 10-15 ஆயிரம் வரை உதவித் தொகையும் வழங்கப்படும் என்றும் தகவல் தெரிய வருகிறது. (வ)



வியட்நாமுக்கு நான்கு நாள் அரச பயணமாகச் சென்றிருந்த இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு ஹனோயிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் வரவேற்பு அளிக்கப்பட்டபோது.

# சேது சமுத்திரத் திட்டம் மாற்று வழித் தடத்தில்

### நிதின் கட்கரி உறுதி

ராமர் பாலத்தை இடிக்காமல் மாற்று வழித் தடத்தில் சேது சமுத்திரத் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக ஒரு மாதத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
மோடி அரசின் 100 நாள் செயற்பாடு குறித்து டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி இதனைக் கூறினார்.
சேது சமுத்திரத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக ராமர் பாலத்தை இடிக்கும் பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.
இந்தத் திட்டத்தை மாற்றுப் பாதையில் செயற்படுத்துவது குறித்து இந்திய ரயில் தொழில்நுட்ப பொருளாதார சேவை நிறுவனத்திடம் மத்திய அரசு ஆலோசனை கேட்டிருப்பதாக



அவர் கூறினார். இந்த ஆலோசனைகள் தற்போது பெறப்பட்டுள்ளதாகவும் அவற்றை ஒரு மாதத்துக்குள் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பரிசீலனைக்கு வைத்து முக்கிய முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
இன்னும் இரண்டு ஆண்டுகளில் சாலை போக்குவரத்து, தேசிய நெடுஞ்சாலை துறைகளில் புரட்சிகர மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்றும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்வதில் போக்குவரத்து, கப்பல் துறைகளின் பங்களிப்பு, குறைந்த பட்சம் 2 வீதம் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
நாள் ஒன்றுக்கு 30கி.மீ. தொலைவுக்குச் சாலை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும் நிதின் கட்கரி தெரிவித்தார்.(வ)

## 'ஜெ' மீதான சொத்துக் குவிப்பு வழக்குத் தீர்ப்பு செப். 27 இற்கு

சென்னை, செப்.17
ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு 20ஆம் திகதிக்குப் பதிலாக 27ஆம் திகதியே வழங்கப்படும் என்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.
சொத்துக்குவிப்பு வழக்கில் முன்னிலையாக ஏதுவாக சிறப்பு நீதிமன்றத்தை பரப்பன அக்ரஹாரம் பகுதிக்கு மாற்றக் கோரி ஜெயலலிதா தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில், தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் தற்போதுள்ள நீதிமன்றத்தில் முன்னிலையாக இயலாது என்று ஜெயலலிதா குறிப்பிட்டிருந்தார். எனவே, பாதுகாப்புக் கருதி பரப்பன அக்ரஹாரம் பகுதியிலுள்ள நீதிமன்ற வளாகத்தில் சிறப்பு நீதிமன்ற விசாரணையை நடத்த வேண்டும் என்றும் மனுவில் ஜெயலலிதா கோரியிருந்தார். (வ)

# நித்தியின் ஆண்மைப் பரிசோதனை அறிக்கை சி.ஐ.டி. பொலிஸிடம்

பெங்களூர், செப்.17
நித்தியானந்தாவுக்கு நடத்தப்பட்ட ஆண்மைப் பரிசோதனை அறிக்கையை நேற்று முன்தினம் சி.ஐ.டி. பொலிஸாரிடம் மருத்துவர்கள் ஒப்படைத்தனர்.
2010 ஆம் ஆண்டு சிஷ்யை ஆர்த்தி ராவ் தொடுத்த வழக்கில் சாமியார் நித்தியானந்தாவுக்கு ஆண்மைப் பரிசோதனை நடத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, கடந்த 8 ஆம் திகதி பெங்களூர் விக்டோரியா மருத்துவமனையில் நித்தியானந்தாவுக்கு ஆண்மைப் பரிசோதனை நடத்தப்பட்டது. 7 பேர் கொண்ட மருத்துவர்கள் குழு சேர்ந்து இந்தச் சோதனையை சுமார் ஐந்தரை மணி நேரத்தில் நடத்தி முடித்தனர்.
இதற்கிடையே நித்தியானந்தாவுக்கு நடத்தப்பட்ட ஆண்மைப் பரிசோதனைக் குறித்து பல்வேறு சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியாகின. உண்மையில் நித்தியானந்தாவுக்கு ஆண்மைப் பரிசோதனையே



நடத்தப்படவில்லை என்று கூட செய்திகள் வெளியாயின.
இந்த நிலையில், நித்தியானந்தாவின் ஆண்மைப் பரிசோதனை அறிக்கையை நேற்று முன்தினம் இரவு மருத்துவர் துர்கன்னா, சி.ஐ.டி. பொலிஸ் அதிகாரியிடம் வழங்கினார்.
அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த துர்கன்னா அறிக்கையைப் பற்றிய தகவலைத் தெரிவிக்க மறுத்துவிட்டார். மேலும் அறிக்கை தயாரித்த மருத்துவர்கள் குறித்து வெளியான தவறான தகவல்களில் மேற்கொள்ளப்பட்ட உண்மை இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்த துர்கன்னா, தற்போது பரிசோதனைகளே போதுமானவை என்றும், மேலும் நீதிமன்றம் மற்றும் பொலிஸ் கேட்டுக் கொண்டால் மேற்கொண்டு பரிசோதனைகள் செய்யப்படும் என்றார். ஆனால், தற்போது செய்யப்பட்டுள்ள இந்தப் பரிசோதனைகள் மட்டும் வழக்கு விசாரணைக்குப் போதுமானதாக இருக்காது. அவை முதற்கட்ட சோதனைகள் மட்டுமே எனவே, மேற்கொண்டு சில சோதனைகள் செய்ய வேண்டி இருக்கும் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)



கொழும்பு ஒருகொடவத்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புறதொற செவன குடியிருப்புத் தொகுதி பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது. 34 வீடுகளைக் கொண்ட 4, இரண்டு மாடிக்கட்டடங்கள் குறைந்த வருமானம் பெறும் நிலையில் வாழும் குடும்பங்களுக்கு இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## 11 ஆயிரம் பொலிஸார் கடமையில்

கொழும்பு, செப்.17
ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது பாதுகாப்புக் கடமைகளில் 11 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
இன்று தொடக்கம் 11 ஆயிரம் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## பறவை கூடுகளுடன் சீனர் கைது

கொழும்பு, செப்.17
4.75 கிலோகிராம் நிறையுடைய 12 பறவைக்கூடுகளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சீனப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சட்டவிரோதமாக அவற்றைக் கடத்த முற்பட்டபோதே 48 வயதுடைய குறித்த சீனப் பிரஜை கைது செய்யப்பட்டார் என்று சுங்கப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ற)


## பொலிஸாரின் சித்திரவதைகள் அம்பலப்படுத்தப்படுவதில்லை

### மனித உரிமை அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, செப்.17
பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சித்திரவதைகள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பிலான தகவல்கள் அம்பலப்படுத்தப்படுவதில்லை எனத் தெரிவித்துள்ளார் வாழ்வதற்கான உரிமை என்ற மனித உரிமை அமைப்பின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ.
பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பிலான தகவல்கள் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
2009ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பொலிஸார் சித்திரவதைகள் மேற்கொண்டனர் என்று முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை என்று தெரிவித்துள்ள அவர், 2006ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பொலிஸாருக்கு எதிரான நான்கு சித்திரவதை சம்பவங்கள் தொடர்பிலான வழக்குகளே பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.
1994ஆம் ஆண்டு 22ம் இலக்க சட்டத்துக்கு அமைய பொலிஸார் மேற்கொள்ளும் சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்று குறிப்பிட்டுள்ள அவர், சித்திரவதைச் சம்பவங்களுக்கு எதிராக வழக்குத் தொடரக் கூடிய அமைப்புக்கள் இருக்கின்ற போதிலும், அவை தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

## நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்பட வேண்டும்

### இல்லையேல் அரசை விட்டு வெளியேறுவோம் அதுரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை



கொழும்பு, செப்.17
நிறைவேற்று ஜனாதிபதி முறைமையில் காணப்படும் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கைக்கு அரசு உடன்படாவிட்டால் அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவு வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளார் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கைக்கு உரிய பதிலளிக்கப்படாவிட்டால் அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க முடியாது.
ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தமது யோசனைத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.
இவ்வாறு ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படாவிட்டால் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கக் கோரும் தரப்பினர் கூட, எமது யோசனைத் திட்டங்களை ஏற்றுக் கொள்வார்கள்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

## வாவியில் மூழ்கியோர் சடலமாக மீட்பு

கொழும்பு, செப்.17
அநுராதபுரம் திஸா வாவியில் படகு கவிழ்ந்ததில் காணாமற்போன சிறைச்சாலை உத்தியோகத்தர் இருவர் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
காணாமற்போனவர்களின் சடலங்கள் நேற்று அதிகாலை பொலிஸ் உயிர்ப் பாதுகாப்பு பிரிவினரால் மீட்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.
சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் அவர்கள் நேற்றுமுன்தினம் படகு கவிழ்ந்து வாவியில் மூழ்கியிருந்தனர். (ற)

## தோல்வியை நோக்கி செல்கின்றது ஐ.தே.க.

### இப்படிக் கூறுகின்றது அரசு



கொழும்பு, செப்.17
ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியை நோக்கி நகர்கின்றது என்று அரசு தெரிவித்துள்ளது.
ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவும் என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:-
"ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் தலைவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் இறுதி நேரத்தில் தேர்தலில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளார் என்று உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஊவா மாகாணத் தேர்தல் நீதியாக நடக்காது

### எச்சரிக்கை விடுக்கின்றன எதிர்க்கட்சிகள்

கொழும்பு, செப்.17
ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெறும்போது வன்முறைகள் அதிகரிக்கலாம் என்றும் பொது மக்களின் சுதந்திரமான வாக்களிப்புக்கு இடையூறுகள் ஏற்படலாம் எனவும் எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.
பதுளையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே இவ்வாறு அவை தெரிவித்துள்ளன.
எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை தேர்தல் நடைபெறும்போது தமது தரப்பு வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான ஏற்பாடுகள் எதனையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் முறைப்பாடுசெய்துள்ளன.
தேர்தல்கள் ஆணையாளர் மீது நம்பிக்கை இல்லை என்றும் அரசின் கட்டளைகளுக்கு ஏற்ப தேர்தல் ஆணையாளர் செயற்படுகின்றார் என்றும் பிரதான கட்சிகள் தெரிவித்துள்ளன.
பெப்ரல், கபே ஆகிய தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் அமைப்புகளிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ள பிரதான எதிர்க்கட்சிகள் வாக்களிப்பு சுதந்திரமாக நடைபெறக் கூடிய வாய்ப்புகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளன.
அரச தரப்பு வேட்பாளர் ஆதரவாளர்கள் எதிர்க்கட்சி வேட்பாளர்கள் மீதும் அவர்களின் அலுவலகங்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றன என்றும், ஆனால் பொலிஸார் உரிய முறையில் விசாரணைகளை நடத்த தவறியுள்ளனர் என்றும் ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.பி.வி ஆகியவற்றின் பிரதிநிதிகள் அந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டியுள்ளனர்.
தேர்தல் விதிமுறைகளை மீறி நிவாரணப் பணிகள் மற்றும் புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தல் போன்ற அபிவிருத்தி செயற்பாடுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊவா மாகாணத்தில் ஈடுபடுகின்றார் என்றும் தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்களை ஜனாதிபதி பயன்படுத் துகின்றார் என்றும் ஜே.வி.பி.யின் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.
இதேவேளை எதிர்க்கட்சிகள் கூறுவது போன்று மொனராகலை, பதுளை போன்ற மாவட்டங்களில் வன்முறைகள் இடம்பெறவில்லை என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (ற)

## இலங்கை வந்துள்ள சீன ஜனாதிபதி நிவாரணங்கள் எடுத்து வரவில்லை

### ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ கூறுகின்றார்

கொழும்பு, செப்.17
இலங்கைக்கு வந்துள்ள சீன ஜனாதிபதி நிவாரணங்களை எடுத்து வரவில்லை என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"சீன ஜனாதிபதி இலங்கைக்கு பெரியளவில் உதவிகளையும் நிவாரணங்களையும் எடுத்து வருகின்றார் என்று அரசு கூறி வருகின்றது. எனினும், உண்மையான நிலைமை அதுவல்ல. பெரும் வட்டிக்கு சீன ஜனாதிபதி, இலங்கைக்கு கடன் வழங்க உள்ளார்.
இந்தக் கடன் கல்வி, வறுமை ஒழிப்பு, கிராமிய வைத்தியசாலை அபிவிருத்தி உள்ளிட்ட நலன் திட்டங்களுக்கு வழங்கப்பட மாட்டாது. அதிவேக நெடுஞ்சாலைகள், மேம் பாலங்கள், கடலை நிரப்பி தீவுகள் அமைத்தல் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கே கடனுதவி வழங்கப்படுகின்றது.
இவ்வாறான கடன் தொகைகளையே அரசும் விரும்புகின்றது.
இந்தக் கடன் தொகையானது இலகுக் கடன் அடிப்படையிலானதல்ல, அதிகளவு வட்டிக்கே இந்தக் கடன் பெற்றுக்கொள்ளப்பட உள்ளது.
நாட்டில் நிலவி வரும் வறட்சி காரணமாக மூன்று லட்சம் மக்களுக்கு குடிதண்ணீர் வசதியில்லை.
அரசு பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதைத் தவிர வேறு எந்த விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்துவதில்லை.
சாதாரண பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு நாட்டம் காட்டுவதில்லை.
கடந்த காலங்களில் பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் உதவிகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டது. அரசுகள் பேணிய வெளியுறவுக் கொள்கை மற்றும் வெளி நாடுகளுடனான நட்புறவின் அடிப்படையில் உதவிகள் கிடைக்கப்பெற்றன.
எனினும், இந்த அரசு அதிகளவு வட்டிக்கு கடன் வாங்கி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## கதறும் கத்தி
### ரிலீஸாகிய பாடல்



விஜய் நடித்துள்ள கத்தி படத்தின் செல்பி புள்ள பாடல் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. விஜய், சமந்தா நடிப்பில் உருவாகி வரும் கத்தி திரைப் படத்துக்கு ஆரம்பத்தில் இருந்தே பிரச்சினைகள் வந்து கொண்டுள்ளன. கத்தி படத்தின் தயாரிப்பாளர், இலங்கை ஜனாதிபதிக்கு நெருக்கமானவர் என்பதால் படத்தை வெளியிட தடைகோரும் தமிழ் அமைப்புகளைச் சந்தித்து வரும் படக் குழுவினர் தற்போது புதிதாக இன்னொரு பிரச்சினையையும் சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

சில நாள்களுக்கு முன்னர் விஜய், அனிருத் இசையமைப்பில் செல்பி புள்ள என்ற பாடலை பாடினார். விஜய் பாடுவதற்கு முன்னர் அனிருத் முழுப்பாடலையும் விஜய்க்கு பாடி காட்டினார். இரண்டு பேருமே பாடிய பாடல்களும் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் விஜய் பாடிய பாடல்தான் படத்தின் வரும் என்று அனிருத் கூறியுள்ளார்.

இந்த நிலையில் அனிருத் பாடிய செல்பி புள்ள பாடல் நேற்று முன்தினம் காலை இணையத்தில் வெளியாகியுள்ளது. அனிருத் இசைக் குழுவில் இருந்தவர்களில் யாரோ ஒருவர்தான் இந்த பாடலை லீக் செய்திருக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது. இதனால் கத்தி படக்குழு அதிர்ச்சியில் உறைந்துள்ளது. இதையொட்டி அனிருத் பாடல் பதிவு செய்யும் இடத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இது குறித்து படக்குழு அளித்துள்ள தகவலில், கத்தி படத்தில் இடம்பெறும் பாடல் இது இல்லை, ரசிகர் கள் ஏமாற வேண்டாம், விரைவில் நாங்களே அதிகார பூர்வமாக வெளியிடுவோம்-என்று தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கத்தி படத்தை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டால், முழுப்படத்தையும் திரையிடுவதற்கு முன்னரே இணையத்தில் வெளியிடுவோம் என்று விஜய்யின் அலுவலகத்துக்கு மர்ம நபர் ஒருவர் தொலைபேசியூடாக மிரட்டியுள்ளார். இதனால் கத்தி தொடர்ந்து கதறிக் கொண்டே இருக்கின்றது.

## கறுப்பு இறைச்சி

அமெரிக்காவில் தலை முதல் கால் வரை கறுப்பாக இருக்கும் சேவல் 1.5 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இறைச்சியும் கறுப்பு நிறத்தில் இருப்பதால் இவ்வளவு விலை என்கிறார் கோழிப் பண்ணையாளர்.

இந்தோனேசியாவை பூர்வீகமாக கொண்ட கறுப்பு சேவல்கள், தற்போது அரிய வகை இனமாக உள்ளன. மத்திய ஜாவாவிலும் சீனாவிலும் தற்போது காணப் படுகின்றன.

இந்தச் சேவலின் தலை முதல் கால் வரை அனைத்துமே கறுப்புதான். இரவு நேரத்தில் வெளிச்சம்படும் போது கரும்பச்சை நிறத்தில் ஜொலிக்கிறது.

இந்தச் சேவல், வெளிப்புறத்தில் எப்படி முற்றிலும் கறுப்பு நிறத்தில் இருக்கிறதோ, அதேபோல் அதன் உள் உறுப்புகள் அனைத்தும் கறுப்பு நிறத்தில்தான் இருக்கின்றன.

இதன் முட்டை மற்றும் இறைச்சி அதிக புரோட்டீன் சத்து நிறைந்தது. இத்தகைய அரிய வகை கறுப்பு சேவல்கள், அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் உள்ள கிரீன்பீல்ட் கோழிப் பண்ணையில் விற்பனைக்கு வந்துள்ளது.



## இன்றைய பேஸ்புக் தத்துவம்



நல்ல 'பிகரும்' எருமை மாடும் ஒன்றுதான். சைக்கிளில் போகும் போது பெல் அடிச்சா, இரண்டுமே திரும்பிப் பார்க்காது.

## ரிலாக்ஸா வாசியுங்க

"தம்பி, ஒரு பியர்"

"என்ன அண்ண, இன்லறக்கு ரொம்ப சோகமா இருக்கிறீங்கள் ? முகம் டல்லா இருக்கு?"

"அதை விடுப்பா! பியரை எடுத்திட்டு வா!"

"பரவாயில்லை, சொல்லுங்க அண்ணே!!"

"அது வந்து, எனக்கும் என் மனைவிக்கும் சண்டை வந்திட்டுது. ஒரு மாசம் என்னோட பேச மாட்டேன் என்று சொல்லிப் போட்டாள்"

"போங்க அண்ணே! சந்தோசமான விடயத்துக்குப் போய் இவ்வளவு கவலைப் படுறீங்களே?"

"அடேய்! இண்டைக்குத்தான் அந்த மாசத்தோட கடைசி நாள்!"

## விலகியது ஏன் ?



கனாக் காணும் காலங்கள் தொடரில் பள்ளி மாணவராக அறிமுகமானவர் இர்பான். பட்டாளம் படத்திலும் பள்ளி மாணவராக நடித்தார். அதன் பிறகு எப்படி மனசுக்குள் வந்தாய், சுண்டாட்டம், எதிர்வீச்சு படங்களில் நடித்தார். இதில் சுண்டாட்டம் மட்டும் சுமா ராக ஓடிய திரைப்படம். மீண்டும் பட வாய்ப்புகள் கிடைக்காததால் சின்னத்திரைக்கு மீண்டும் வந்தார். சரவணன் மீனாட்சி தொடரின் இரண்டாம் பகுதியில் சரவணனாக நடித்தார். 200 'எபிசோட்கள்' கடந்த நிலையில் அதிலிருந்து விலகி விட்டார்.

இதுகுறித்து இர்பான் கூறி யிருப்பதாவது, சரவணன் மீனாட்சி தொடர் எனக்கு நல்ல பிரபலம் கொடுத் தது உண் மைதான். இப்போதும் நான் வெளியில் சென்றால் என்னை சர வணனாகத்தான் பார்க்கிறார்கள். ஆனால் எனது லட்சியம் சினிமாவில் வெற்றி பெறுவதுதான்.

பொங்கி எழு மனோகரா, ரூ என்ற இரண்டு படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளேன். ஒன்றை இழந்தால்தான் ஒன்றை பெறமுடியும் என்கிற சூழ்நிலை. அதனால் மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு சினிமாவுக்காக சின்னத்திரையை விட்டுவிட்டேன். பொங்கி எழு மனோகரா முழுநீள நகைச் சுவைத் திரைப்படம். இந்தப் படம் எனக்கு சினிமாவில் நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன். சின்னத்திரை ரசிகர்கள் என்னை புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன், என்கிறார் இர்பான்.




போற்றுதலுக்குரிய அவதூத் பாபா
## ஷிவானந்த் ஜி

சில பதின் வருடங்களுக்கு முன்னர் பாபாஜி நம் பூமிக் கிரகத்துக்கு வந்து சேர்ந்தார். மிக இளம் வயதிலேயே அவர் ஆன்மிகத்தில் பற்றுடையவராக இருந்தார். அவருக்கு 8 வயதாக இருக்கும்போது ஒரு யோகி அவர் முன் தோன்றி ஒரு மந்திரத்தால் அவரை உய்வித்துச் சென்றார். அவர் அளித்துச் சென்ற மந்திரத்தால் பல ஆன்மிக அனுபவங்களை அடைந்த பாபாஜி அந்த யோகியையே தனது குருவாக வரித்துக்கொண்டார். அவரைத் தேடித் தனது ஆன்மிகப் பயணத்தைத் தொடங்கிய பாபாஜி இமா லயம் உட்படப் பல இடங்களில் தேடி அலைந்தும் அவரைக் கண்டடைய முடியவில்லை. அன்றுதொட்டு அவர் தன் நாளின் பெரும் பகுதியைத் தியானத்தில் செலவழித்தார். மேற்கொண்டு தன் பயணத்தில் பலப் பல சித்தர்களையும் யோகிகளையும் சந்தித்த பாபாஜி அவர்களிடம் இருந்து தன் ஆன்மிக லட்சியத்துக்கான அருளையும் ஆசிகளையும் பெறும் பாக்கியத்தைப் பெற்றார்.



கொழும்பு வருகிறார்
செப்ரெம்பர் 19 - 21

3 நாள்கள் ஆன்மிக யோகா கருத்தரங்கு
மாணிக்கவாசகர் கோயில் கலையரங்கம்

அன்பே சிவம்! அறிவியலும் சிவம்!

# அழகைத் தரும் பப்பாசி



வருடம் முழுவதும் கிடைக்கக் கூடிய ஏழைகளின் அப்பிள் பழம், இந்த பப்பாசிப் பழம். விலைதான், ஆனால் அதில் கொட்டிக் கிடக்கும் சத்துக்கள் ஏராளம். பப்பாசிப்பழத்தில் உள்ள சத்துக்கள் நேரடியாக இரத்தத்தில் கலப்ப தில்லை என்று மருத்துவ நிபுணர்கள் கூறு கிறார்கள்.

எனவேதான் நீரிழிவு நோயாளிகளுக்கும் இந்தப் பழம் பரிந்துரைக்கப்படுகிறது.

மருத்துவத் துறையில் மிகவும் சவாலான ஒரு நோய் என்றால் அது புற்றுநோய். இதற்கு பப்பாசி இலைச் சாற்றில் எதிர்ப்பு மருந்து இருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பப்பாசிப் பழத்தில் உள்ள விதவிதமான சேர்க்கைகள் புற்றுநோயைக் கட்டுப்படுத்த வல்லது என்றும் மருத்துவர்கள் கூறுகிறார்கள். பொதுவாக குழந்தைகளுக்கு பப்பாசிப் பழத்தைக் கொடுத்தால், குழந்தையின் வளர்ச்சிக்கு மிக உதவியாக இருப்பதோடு, பல், எலும்பு போன்றவை உறுதி பெறும்.

குழந்தை பெற்ற பெண்கள் பப்பாசிப்பழம் சாப்பிட்டால் பால் நன்றாகச் சுரக்கும். அத்துடன் அடிக்கடி பப்பாசிப் பழம் சாப்பிட்டு வருபவர்களை எந்தவித நோயும் அண்டாது. பப்பாசிப்பழத்தில் இயற்கையாகவே, விஷக் கிருமிகளைக் கொல்லும் ஒருவித சத்து இருப்பதால், பப்பாசிப்பழம் சாப்பிடுபவர்களுக்கு இரத்தத்தில் நோய் கிருமிகள் தங்கி நோயை உண்டாக்க வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகிறது.

வறண்ட சருமத்தைப் போக்கவும் அன்றாடம் புதிதாக ஜொலிக்கும் சருமத்தைப் பெறவும், தினமும் பப்பாசி சாப்பிட்டு வரலாம். பப்பாசிப் பழத்தை முகத்தில் தடவி அரை மணி கழித்துக் கழுவினால் முகம் பளிச்சென்று இருக்கும். பல் தொடர்பான குறைபாடுகளுக்கும் சிறுநீர் பையில் ஏற்படும் கல்லைக் கரைக்கவும் பப்பாசி கை கொடுக்கும்.

# நரம்புத் தளர்ச்சியை நீக்கும் பசளி...

ஒவ்வொரு நாள் உணவிலும் ஏதேனும் ஒரு கீரையை உட்கொள்பவர்களுக்கு விற்றமின் குறைபாட்டினால் உண்டாகும் நோய்கள் ஏற்படுவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெரும்பாலான கீரைகள் மிகவும் குளிர்ச்சித்தன்மை உடையதுடன் மலத்தையும் இளக்கும் தன்மையையும் கொண்டுள்ளன்.

இதனால் சிலருக்கு சளித்தொல்லை, தொண்டைக்கட்டு போன்றவை எப்பொழுதாவது ஏற்படலாம். இந்தத் தொல்லைகளுக்காக பயந்து சிலர் கீரையை உட்கொள்வதில்லை. அதுபோன்றவர்கள் கீரையுடன் பருப்பு, மிளகு, சீரகம், மஞ்சள், வெங்காயம் போன்றவற்றைச் சரியான முறையில் சேர்த்துக்கொண்டால் இந்தத் தொந்தரவுகள் ஏற்படாமல் தடுக்கலாம்.


தொடர்ந்து ஒரே கீரையை எடுத்துக் கொள்பவர்களுக்கு கீரையில் உள்ள உப்புகள் இரத்தத்தில் அதிகமாக கலந்து கற்களை உண்டாக்கலாம். இதனைத் தவிர்ப்பதற்கு மூடிய பாத்திரத்தில் கீரையை நன்கு வேகவைத்து, நீரை வடிகட்டி இலைகளை மட்டும் சமைத்து உபயோகப்படுத்தலாம். இதனால் உப்பைத் தவிர பிற சத்துகள் வீணாகாமல் உடலில் சேருகின்றன. அது போல் கீரையிலுள்ள இரும்பு, பொஸ்பரஸ், சுண்ணாம்பு, சிலிகா, துத்தநாகம் மற்றும் செலினிய சத்துகள் செல் அழிதல் மற்றும் முதிர்தலை கட்டுப்படுத்தி ஆயுளை நீடிக்கின்றன. பெரும்பாலான கீரைகள் நாடி நரம்புகளுக்கு வலுவையும் உண்டாக்குகின்றன.



பலவிதமான கீரைகளை நாம் அடிக்கடி உட்கொண்டாலும், சில கீரைகளே அனைவரும் உட்கொள்வதற்கு ஏற்றதாகவும், எளிதில் செரிமானம் ஆகக் கூடியதாகவும் காணப்படுகின்றன.

அது போன்ற கீரைகளில் தனித் தன்மை வாய்ந்தது பசளிக்கீரை. தரைப் பசளி, கொடிப்பசளி என இரண்டு வகைகளாக காணப்படும் பசளிக் கொடிகளில் சிவப்பு நிறத்தண்டுகளையும், சிவப்பு மற்றும் பச்சை நிறம் கலந்த இலைகளையுடைய கொடி பசளியே உணவுடன் கூட்டாகச் செய்து சாப்பிட பயன்படுத்தப்படுகிறது.

விற்ற மின் ஏ, பி, சி, புரதம், இரும்பு, சுண்ணாம்பு, பொஸ்பரஸ் போன்ற சத்துக்கள் ஏராளமாக உள்ள பசளிக் கீரையை வாரம் இரண்டு முறையாவது மதிய உணவுடன் சேர்த்துச் சாப்பிட நரம்புத்தளர்ச்சி நீங்குவதுடன், உடல் உஷ்ணம் தணியும்.



# நினைவாற்றலுக்கு மாம்பழம்

முக்கனிகளில் முதலிடத்தையும் பழங்களின் ராஜா என்ற சிறப்பையும் பெற்ற மாம்பழம் சாப்பிடுவதால் பல நன்மைகள் நமக்குக் கிடைக்கின்றன.

இனிப்பு மற்றும் புளிப்புச் சுவையுடைய மாம்பழத்தில் விற்றமின் 'ஏ' அதிக அளவில் உள்ளது. தெளிவான கண் பார்வைக்கு விற்றமின் 'ஏ' மிகவும் அவசியமாகும்.

உடலுக்குக் கெடுதல் விளைவிக்கும் கொழுப்புச் சத்தைக் குறைக்கும் பொருள்

**மாம்பழம் பொட்டாசியம், நார்ச் சத்து, விற்றமின் சி, பி6, மக்னீசியத்துடன் இரும்புச் சத்தையும் அதிகம் கொண்டுள்ளது.**

மாம்பழத்தில் உள்ளது. எனவே, இதயம் மற்றும் இரத்தக் குழாய்களில் தங்கியிருக்கும் கெட்ட கொழுப்பை நீக்கி உயர் இரத்த அழுத்தம், இதய நோய் ஏற்படாமல் தடுக்கும்.

மாம்பழம் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் கட்டுப்படுத்தும் எனவே, நீரிழிவு நோயாளிகளும் அளவுடன் சாப்பிட்டுப் பயன் பெறலாம்.

மாம்பழம் பொட்டாசியம், நார்ச்சத்து, விற்றமின் சி, பி6, மக்னீசியத்துடன் இரும்புச் சத்தையும் அதிகம் கொண்டுள்ளது. இரும்புச் சத்து ரத்த சோகையைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

இரத்த சோகை, ஈறுகளில் இரத்தம் வருதல், இருமல், காய்ச்சல், குமட்டல் போன்ற நோய்களுக்கு மாம்பழத்தை மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இரவு நேரத்தில் கண் விழித்துப் படிக்கும் மாணவர்கள் நொறுக்குத் தீனிகளைத் தவிர்த்து விட்டு மாம்பழத் துண்டுகளைச் சாப்பிடலாம். மாம்பழத்தில் உள்ள குளுடாமின் அமிலம் அதிக கவனம் செலுத்துவதற்கும் நினைவாற்றலுக்கும் துணை புரியும்.

தினமும் 100 கிராம் அளவு மாம்பழம் சாப்பிட்டு வந்தால் கண்பார்வை தெளிவாகும். தொடர்ந்து ஒருமாதம் மாம்பழமும் பாலும் சேர்த்துச் சாப்பிட்டால் உடலுக்குத் தேவையான வலிமையும் எடையும் கிடைக்கும். கல்லீரல் குறைகளைப் போக்கும் தன்மை வாய்ந்த மாம்பழம் சிறந்த மலமிளக்கியாகவும் செயற்படுகிறது.



# சகல நோய் நிவாரணி வில்வம்



உடம்பில் அனைத்து பாகங்களுக்கும் மருந்தாக பலன் தரும் தாவரங்களில் வில்வ மரமும் ஒன்று. இதன் இலை, பூ, காய், பழம், வேர், பிசின் பட்டை என அனைத்திலும் நோய் தீர்க்கும் மருத்துவ குணம் அடங்கியுள்ளது.

சிறுவர் முதல் பெரியோர் வரை தாக்கும் சிறு நோய்களானாலும் எளிதில் குணமடையா நோய்களானாலும் சிறந்த மூலிகை மருந்தாகச் செயற்படுகிறது இந்த வில்வ மரம். வில்வ மரத்தின் இலை காரத்தன்மை கொண்டவை.

இதனை இடித்து பிழிந்த சாற்றில் பசும்பால் சேர்த்து குழந்தைகளுக்கு கொடுத்தால் காய்ச்சல், சோகை, வீக்கம் குணமாகும்.



மூன்று இலைகளைச் சுத்தம் செய்து தினமும் மென்று தின்று வந்தால் உட்செல்களிலுள்ள அனைத்து நோய்களும் அகலும்.

வில்வ இலையின் சாற்றுடன் அதே அளவு கல்யாண முருங்கை சாற்றையும் சேர்த்து பருகிவர நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும். மேலும்

**வில்வ இலையின் சாற்றுடன் அதே அளவு கல்யாண முருங்கை சாற்றையும் சேர்த்து பருகி வந்தால் நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம்.**

பச்சை இலைகளாகவும் சாப்பிட்டு வர ஆஸ்துமா நோயையையும் கட்டுப்படுத்துகிறது.

வில்வ மரத்தின் காயை உலர்த்தி பொடி செய்து குழந்தைகளுக்கு சிறிதளவு கொடுத்துவர கழிச்சல், மூலநோய் நீங்கும். இதுபோல் காய்தூளை சிறிது வெல்லத்துடன் சேர்த்து உண்டால் இரத்தத்தில் உள்ள அதிக கொழுப்பு, செரிமான குறைவால் ஏற்படும் அஜீரண வயிற்று வலி நீங்கும்.

வில்வம் பழத்தின் சதையை உலர்த்தி காயவைத்து பொடி செய்து அதில் ஒரு கிராம் எடுத்து சிறிது சீனி சேர்த்து மூன்று வேளை உட்கொண்டு வந்தால் சீதபேதி, பசியின்மை ஆகியவையும் குணமாகும்.

மேலும் பழத்தை ஓடு நீக்கி பிழிந்து சீனிப் பாகில் காய்ச்சிசர்பத் செய்து குடித்துவர உடலின் வெப்பம் தணியும். அதிக வியர்வை ஏற்படுவதும் குறைகிறது. மேலும் மலச்சிக்கல் வராது தடுக்கிறது.




முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைந்துள்ள வளாகம் நுளம்பு பெருகும் வகையில் பற்றைகள் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.
கடந்த 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை சுகாதார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் ஈடுபட்டனர்.
ஆயினும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைந்துள்ள வளாகம் துப்புரவு செய்யப்படவில்லை. ஆரம்ப சுகாதார நிலையமும் அந்த வளாகத்திலேயே அமைந்துள்ளது.
எனவே சம்பந்தப்பட்டவர்கள் ஏனையோருக்கு முன்மாதிரியாக இருப்பதற்காகவாவது சுகாதார வைத்திய அதிகாரி வளாகத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமெனக் கிராம வாசிகள் கோருகின்றனர். (த-102)

## வவுனியா தெற்கு பிரதேசத்தில் விரைவில் சுற்றுலா மையங்கள்

வவுனியா, செப். 17
வவுனியாவில் வவுனியா தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுலா மையங்கள் அமைப்பதற்குத் தீர்மானித்திருப்பதாக வவுனியா பிரதேச சபையினர் தெரிவித்தனர்.
கடந்த சனிக்கிழமை வவுனியா தெற்குப் பிரதேச சபையினருக்கும் வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களின் தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.
கல்நாட்டினகுளம், கோமரசங்குளம், பம்மைமடு ஆகிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய பூங்காக்கள் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
இதற்குக் கிராம மட்டத் தலைவர்கள் கிராம மக்கள் பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.
அடுத்த ஆண்டில் உரிய பண உதவிகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட இடங்களில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் எனவும், அவர்கள் கூறினர். (த-402)

# கிளாலிப் பகுதியில் இம்முறை இருநூறு ஏக்கரில் நெற்செய்கை

கிளிநொச்சி, செப். 17
கிளிநொச்சி கிளாலிப் பகுதியில் இந்த முறை 200 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளும் ஏற்பாட்டை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்.
கிளாலிப் பகுதியில் போருக்கு முன்னர் மீன்பிடியும் விவசாயமும் இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத் தொழிலாக இருந்து வந்தது. போரினால்



இடம்பெயர்ந்து தற்போது இந்தப் பகுதி மக்கள் மீள் குடியேறியபோதும் வெடிபொருள் அச்சம் காரணமாக மீன்பிடியோ அல்லது விவசாயமோ உரிய முறையில் மேற்கொள்ள முடியாமல் உள்ளது.
இந்த நிலையில் கடந்த ஆண்டு இந்தப் பகுதியில் குறைவான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்காள்ளப்பட்டபோதும் வறட்சி காரணமாக அவை அழிவடைந்தன.
இந்த நிலையில் இந்த ஆண்டு காலபோகச் செய்கை 200 ஏக்கர் நிலப்பிரப்பில் நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஆரம்ப கட்ட வேலைகளில் விவசாயிகள் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும், குறித்த நிலப்பரப்பில் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொள்ளவிருக்கின்றனர் எனவும் கமக்கார அமைப்பு தெரிவித்துள்ளது. (த-55)

## கிளிநொச்சியில் நுளம்புப் பெருக்கம்



கிளிநொச்சி, செப். 17
கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளில் நுளம்புகளில் பெருக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.
பல்வேறு பகுதிகளிலும் கடந்த காலங்களை விட இந்த முறை நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.
இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எவையும் உரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.
கடந்த காலங்களில் நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத் தும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இந்த முறை இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படாமல் உள்ளமையால் கிராமப் புறங்களில் உள்ள மக்கள் பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகும் அபாய நிலை காணப்படுவதாக அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (த-55)

## 3 ஆயிரம் பயனாளிகளுக்கு சேதனப்பசளை பொருள்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய விவசாய அமைச்சின் ஊடாக 3 ஆயிரம் பயனாளிகளுக்குச் சேதனப் பசளை உற்பத்திக்கான பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
மத்திய விவசாய அமைச்சின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் இராசாயன உரப் பாவனையைக் குறைத்து சேதனப் பசளையை உற்பத்தி செய்வதற்கான 2013 ஆம் ஆண்டுத் திட்டத்தில் 3 ஆயி ரம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பொலித்தீன் கூட்டெரு தயாரிக்கும் பயிற்சி என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இதேவேளை - 2014 ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் 500 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் கூட்டெரு தயாரிப்பதற்கான பொருள்கள் வழங்கப்பட விருப்பதாக மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-55)

## நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கு வவுனியாவில் ஆசிரியர் பற்றாக்குறை

வவுனியா, செப். 17
வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட பாடசாலைகள் பலவற்றில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது.
பல்கலைக்கழகங்கள் செல்வதற்கான வெட்டுப்புள்ளியில் இந்தப்பாடத்துக்கு சலுகை உள்ளமையால் அதிக மாணவர்கள் இதனைக் கற் கிறார்கள்.
ஆண்டு 5 முதல் ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவு வரையான மாணவர்களுக்குச் சுமார் 150க்கும் மேற்பட்ட நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.
ஆனால் குறித்த பாடத்துக்கு ஆசிரியர்கள் இல்லாமையினால் விருப்பத்துக்கு ஏற்ப பாடத்தைக் கற்க முடியாமல் மாணவர்கள் சிரமப்படுகின்றனர். வலயக் கல்வி அதிகாரிகளிடம் இது குறித்துத் தொடர்பு கொண்டுள்ள போதும், உரிய நியமனங்களை அரசு ஏற்படுத்தும் வரை இந்த வெற்றிடங்களை நிரப்ப முடியாது என அவர்கள் கைவிரிக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது. (த-402)

## முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

### கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, செப். 17
முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுகடல் பகுதி, ஏனைய கடல்நீர் ஏரிகள் ஆகியவற்றில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கடற்றொழில் நீரியல்வள திணைக்களம் தெரிவித்துள்ளது.




முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், நாயாறு போன்ற கடல்நீர் ஏரிகளில் தொடர்ந்தும் சட்டவிரோத மீன்பிடி இடம்பெற்று வருகின்றது.
இந்நிலையில் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாகச் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக இந்த ஆண்டு 56 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.
இதில் சுமார் 2 லட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டதுடன் 13 படகுகள், 13 வெளி இணைப்பு இயந்திரங்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.
இதேவேளை - சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரி வித்துள்ளது. (த-55)



92 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் பாடசாலை மாணவர் மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளின் ஆக்கங்களை உள்ளடக்கிய ஓவியக் கண்காட்சி நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியை வடக்கு மாகாணக் கூட்டுறவு, உள்ளூராட்சி, சிறுகைத்தொழில் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் ஆரம்பித்து வைத்தார். வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன், கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம், சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.இலகுநாதன் உட்பட சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில்

## அன்பளிப்பை ஏற்பதற்கு மறுத்தார் சபைச் செயலாளர்

வலி.தென்மேற்கு, செப்.17

வலி தென் மேற்குப் பிரதேச சபையில் அன்பளிப்புப் பொருள்களை ஏற்றுக்கொள்வதில்லை என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடுத்து, தேசிய சேமிப்பு வங்கி பிரதேச சபைக்கு வழங்க முன்வந்துள்ள அன்பளிப்புப் பொருளை ஏற்க மறுத்த செயலாளர், இது குறித்து சபைக் கூட்டத்தில் தெரிவித்திருந்த போதிலும் எந்தவித மாற்று நடவடிக்கையும் எடுக்க உறுப்பினர்கள் முன்வரவில்லை. இதனால் அன்பளிப்பாக வழங்கப்படவிருந்த பொருள் வழங்கப்படாதுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாயிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியில் தொடர்ந்து தொடர்புகளை ஏற்படுத்தி வருவதனால் சபையின் நலன் கருதி ஒலிப்பதிவுக் கருவியை வழங்க முன்வந்துள்ள வங்கி அதிகாரி இது குறித்து செயலாளரிடம் தெரிவித்திருந்தார். கடந்த வாரம் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய அன்பளிப்புப் பொருளை ஏற்க மறுத்த செயலாளர், இவ்விடயம் பற்றி சபைக் கூட்டத்திலும் தெரியப்படுத்தியிருந்த போதிலும் உறுப்பினர்கள் மௌனத்தைக் கடைப்பிடித்ததனால் அந்தப் பொருள் கைக்கெட்டாமல்தவறவிடப்பட்டுள்ளது. (த-115)

## மின் குமிழ்கள் பொருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு

பண்டத்தரிப்புப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி வீதிகளுக்கு மின்குமிழ்கள் பொருத்துவதற்காக வட மாகாண சபை உறுப்பினர் அரியகுட்டி பரஞ்சோதி வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக இந்தப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான வீதிகளுக்கு மின் குமிழ்கள் பொருத்தப்படவில்லை. வீதிகள் இருளில் மூழ்கியிருப்பதனால் மக்கள் இரவு நேரங்களில் நடமாட அஞ்சுகின்றனர்.

இந்த நிலை குறித்து பிரதேச சபை உறுப்பினர்கள் மாதாந்தக் கூட்டத்தில் பல தடவைகள் சுட்டிக்காட்டியபோதிலும் மின் குமிழ்கள் பொருத்துவதற்கான ஒழுங்குகளைப் பிரதேச சபை மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில் பண்டத்தரிப்பு பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் அ.ஜோன் ஜிப்ரிக்கோ வடமாகாண சபை உறுப்பினர் அரியகுட்டி பரஞ்சோதியுடன் தொடர்பு கொண்டு மின்விளக்குகள் பொருத்த வேண்டிய அவசியம் குறித்து சுட்டிக்காட்டியதுடன் நிதியுதவி வழங்குமாறும் கோரியிருந்தார்.

அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் பண்டத்தரிப்பு பிரதேசத்தில் மின் குமிழ்கள் பொருத்துவதற்காக ரூபா 50 ஆயிரத்தைப் பிரதேச சபைக்குஅனுப்பி வைத்துள்ளார். முன்னுரிமை அடிப்படையில் இந்தப் பணத்தின் மூலம் பண்டத்தரிப்புக்கு மின்குமிழ்கள் பொருத்தப்பட்ட பின்பு ஏனைய பகுதிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது. (த-115)

# ஏழாலை, சுன்னாகம் பகுதிகளில் வன்முறைகள் திடீரென அதிகரிப்பு

## அச்ச உணர்வுடன் வாழும் மக்கள்

வலி. வடக்கு. செப். 17

ஏழாலை, சுன்னாகம் பகுதிகளில் இடம்பெறும் தொடர்ச்சியான வன்முறைகள் காரணமாகப் பொதுமக்கள் பெரும் அச்ச உணர்வுடன் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாகக் கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாகச் சுன்னாகம் நகரப் பகுதியில் குறிப்பிட்ட சில இளைஞர் குழுக்கள் வாள்கள், பொல்லுகள் சகிதம் நடமாடுவது, சண்டையிடுவது, ஏனையவர்களைத் தாக்குவது போன்ற சம்பவங்களில் ஈடுபடுவது அதிகரித்துள்ளது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

இதேபோன்று ஏழாலைப் பகுதியிலும் இளைஞர் குழுக்களின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன. கடந்த இரண்டுநாள்களுக்குள் மூவர் வாள்வெட்டுக்கு உள்ளாகிப் படுகாய மடைந்துள்ளனர். அத்துடன் பொது மக்களின் சொத்துகளுக்கும் சேதம் விளைவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகக் கிராம அலுவலர்கள் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் பொலிஸாருக்கு அறிவித்தாலும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனால் கிராம அலுவலர்களும் சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களும் மனம் சலித்த நிலையில் தம்பாட்டில் இருந்து விடுகின்றனர்.

கடந்த வாரம் சுன்னாகம் நகரப் பகுதியில் இடம் பெற்ற சண்டையில் உடைக்கப்பட்ட சைக்கிள் ஒன்று தொடர்ந்து மூன்று நாள்களாக வீதி ஓரத்தில் வீசப்பட்ட நிலையில் காணப்பட்டது. இரவு நேரத்தில் ரோந்து சென்ற பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் அது குறித்து அக்கறை காட்டவில்லை. கிராம அலுவலர் நான்காம் நாள் பொலிஸாருக்குக் கொடுத்த தகவலைத் தொடர்ந்து அந்தச் சைக்கிள் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இந்த வன்செயல்களை அடுத்து ஏழாலை, சுன்னாகம் பகுதிகளில் மக்கள் இரவு நேரத்தில் நடமாடுவதைத் தவிர்த்து வருகின்றனர். (த-86)

## 2 நாள்களில் 200 புதிய அங்கத்தவர்களை இணைத்துள்ளது ஊர்காவற்றுறைச் சங்கம்

யாழ்ப்பாணம்,செப்.17

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டு நாள்களில் புதிதாக 200 அங்கத்தவர்களை இணைத்துச் சாதனை படைத்துள்ளது.

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு இந்தச் சங்கம் கிளைகள் ரீதியாகப் புதிதாக அங்கத்தவர்களை இணைக்கும் பணியில் ஈடுபட்டது.

சங்கத்தின் சகல பணியாளர்களும் சேர்ந்து இரண்டு நாள்களில் குறைந்தது இருநூறுக்கும்மேற்பட்ட அங்கத்தவர்களைப் புதிதாக இணைத்துள்ளனர்.

இந்தச் சங்கம் கடந்த வருடத்திலும் புதிதாக 500 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை இணைத்திருந்தது.

இதேவேளை, கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக அங்கத்தவர்களை இணைத்து செயற்பாட்டை அதிகரிப்பதற்கு முன்வரவேண்டும் என்று கூட்டுறவுஅபிவிருத்தித்திணைக்களம் கேட்டிருந்தது.

கூட்டுறவு குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சகல கிளை நிலையங்கள் ஊடாகவும் அங்கத்தவர்களை இணைப்பதற்கு சங்கங்கள் முன்வரவேண்டும். அனேகமாக கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக அங்கத்தவர்களை இணைக்கும் செயற்பாட்டுக்குப் பின்னடித்து வருகின்றன. இதனால் மக்கள் மத்தியில் கூட்டுறவின் மகிமை குறைவடைந்து செல்கிறது என்று கூட்டுறவாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த-17)

## மாதா சொரூபம் அடித்து உடைப்பு

வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த மாதா சொரூபம் இனம் தெரியாதவர்களினால் அடித்துடைக்கப்பட்ட சம்பவம் கடந்த திங்கட் கிழமை இரவு ஏழாலை மேற்கில் இடம் பெற்றுள்ளது.

ஏழாலை மேற்கு மயில் வாகனம் கடையடியில் வீட்டு மதில் சுவருடன் வழிபாட்டுக்கு உரிய முறையில் வைக்கப்பட்டிருந்த மாதா சொரூபமே அடித்துடைக்கப்பட்டுள்ளது.

இந்த மாதா சொரூபத்தை இந்தப் பகுதியில் உள்ள இந்து, கிறிஸ்தவ மக்கள் மத வேறுபாடுகள் இன்றி நாளாந்தம் வழிபட்டுவந்தனர். மாதா சொரூபம் உடைக்கப்பட்டமை குறித்து பொலிஸில் முறைப்பாடுசெய்வதற்கு யாரும்முன்வராமையால் இதுவரை முறைப்பாடு பதியப்படவில்லை. (த-86)

## வல்வெட்டித்துறை நகர சபை விசாரணை மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 17

இடைநிறுத்தப்பட்டுள்ள வல்வெட்டித்துறை நகர சபை மீதான விசாரணைகள் கடந்த வார இறுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது வரையில் நகரசபையைச் சேர்ந்த மூவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை நகர சபையின் கூட்டத் தொடரில், சபைக் கொடுப்பனவுக்கு உறுப்பினர்களின் அங்கீகாரம் கிடைக்காமையினால் சபை முடங்கும் நிலைமையை எதிர்நோக்கியிருந்தது.

இந்நிலையில், வடக்கின் உள்ளூராட்சி அமைச்சர் என்ற அடிப்படையில் வடக்குமாகாண முதலமைச்சர் க.விக்னேஸ்வரன், நகர சபையை இடைநிறுத்துவதாகத் தெரிவித்திருந்தார். அத்துடன் சபையின் பொறுப்புகள் அனைத்தையும் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் பாரப்படுத்தியிருந்தார். சபையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழுவும் முதலமைச்சரினால் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த விசாரணைக் குழுவின் விசாரணைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வல்வெட்டித்துறை நகரசபையின் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர் ஒருவரும் முதல்கட்டமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (த-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அலட்சியம், பொறுப்பற்றதனத்துக்கு கிடைத்துள்ள மிகப் பெரும் பரிசு

எமது அலட்சியம் மற்றும் பொறுப்பற்றதனத்துக்கு எவ்வளவு பெரிய விலையைக் கொடுக்க வேண்டி இருக்கிறது என்பதை நினைக்கும்போது அதிர்ச்சி ஏற்படுகிறது. அதிகாரிகள் தமக்குரிய கடமையைச் சரிவரச் செய்யாமல் விட்டதன் அலட்சியம் தலைமுறைகளைப் பாதிக்கும் விளைவாக விரிவாகி நிற்கின்றது, பொறுப்பற்றதனம் குறித்த கோபத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகிறது. இதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள இங்கு யாரும் இருக்கப்போவதில்லை என்பது தெளிவு. ஆளையாள் குற்றஞ்சொல்லிக் கொண்டு தாங்கள் தப்பிவிடும் கைங்கரியத்தில்தான் சம்பந்தப்பட்ட எல்லோருமே இறங்கப்போகிறார்கள் என்பது சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட உண்மை.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் கழிவு எண்ணெய்ப் படிவால் அந்தப் பகுதி முழுவதுமே குடிதண்ணீர் மாசடைந்திருப்பதற்கு யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்? ஜெனரேற்றர்கள் கொண்டு அங்கு ஒரு மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டபோதே அதனால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து துறை சார்ந்த அதிகாரிகள் அக்கறைப்பட்டிருக்க வேண்டும். போரைக் காரணம் காட்டிக் கொண்ட அதிகாரிகள் அது பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும். சரி அதுதான் போகட்டும், கழிவு எண்ணெய்யை மின் நிலையத்தினர் நிலத்தில் சேர்ப்பதால் தமது கிணறுகள் மாசடைகின்றன என்று அயல் காணிக்காரர்கள் குரல் எழுப்பியபோதாவது அதிகாரிகள் சுதாகரித்துக்கொண்டிருக்க வேண்டும். அதுவும் நடக்கவில்லை. பிரச்சினை முற்றிப் பெருத்த பின்னரும்கூட, இது பற்றி கொழும்பில்தான் கேட்கவேண்டும். இங்கே எங்களுக்கொன்றும் தெரியாது என்று சாட்டுக்கூறித் தமது பொறுப்பை தட்டிக்கழித்தார்கள் அவர்கள்.

அந்தப் பகுதிக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி இது குறித்து அக்கறைப்பட்டிருக்க வேண்டும். கழிவுகளை அவர்கள் எங்கே கொட்டுகிறார்கள், அதனால் ஏற்படப்போகும் பாதிப்பு என்ன என்று அவர்கள் அக்கறைப்பட்டிருக்க வேண்டும். அது நடக்கவேயில்லை. அது இராணுவத்தினரின் உயர் பாதுகாப்புக்குள் இருந்தது; அதனால் எம்மால் போய்ப் பார்க்கவோ நடவடிக்கை எடுக்கவோ முடியாமல் போய்விட்டது என்று அவர்களும் சாட்டுப் போக்குக் கூறலாம். ஒப்பீட்டளவில் இதைவிட முக்கியத்துவம் குறைந்த பிரச்சினைக்கெல்லாம் போராட்டமும் வேலை நிறுத்தமும் செய்யத் தெரிந்த அவர்களுக்கு மக்களின் அவசியத் தேவையான குடிதண்ணீருடன் சம்பந்தப்பட்ட விடயத்தில் ஏற்பட்டுள்ள சுகாதாரப் பிரச்சினைக்காகப் போராட்டம் நடத்த முடியாமல் போய்விட்டமை கவலைதான்.

இது விடயத்தில் அக்கறைகாட்டி மக்கள் நலனைப் பாதுகாத்திருக்கவேண்டிய உள்ளூராட்சிச் சபையும் மெத்தனமாகவே இருந்தது. அது தனக்கு அப்பாற்பட்ட விடயம் என்றும் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்றும், கைவிரித்தது. தனக்கு வாக்களித்த மக்களின் உடல் நலன், சுகாதாரத்தில் தனக்கிருக்கும் அக்கறையை வெளிப்படுத்தி அந்த மக்களின் வாழ்வாதார உரிமைக்காகப் போராடுவதற்குப் பதில் சமாளிப்பதற்கான வறட்டுக் காரணங்களையும் தற்காலிக நிவாரணங்களையும் தேடிக்கொண்டிருந்தது.

எல்லாவற்றையும் பொறுக்க முடியாமல் பாதிப்பு பெரிது என்று தாமாகவே உணர்ந்த மக்கள் கிளர்ந்தெழும்வரை அரசியல்வாதிகளும் இது பற்றி அக்கறையே காட்டாமல் இருந்துவிட்டார்கள்.

இத்தகைய அலட்சியம், பொறுப்பற்றதனம் எல்லாமாகச் சேர்ந்து இப்போது சுன்னாகம் முதல் காங்கேசன்துறை வரையில் உள்ள நிலத்தடி நீர் தடாகத்தை (வோட்டர் பேசின்) பாதித்துள்ளது. இனிமேல் எதுவும் செய்ய முடியாது என்கிற அளவுக்கு அது குடி தண்ணீர் மூலத்தைச் சிதைத்துள்ளது. போதாதற்கு அதனால் ஏற்படப்போகும் நோய்கள் பற்றிய அபாய எச்சரிக்கை மேலும் அதிர்ச்சி அடைய வைக்கிறது. மலட்டுத் தன்மை, புற்றுநோய் என்பன அதிகரிக்கும் சாத்தியம் உண்டென்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அளவுக்கு அதிகமான விவசாய அடிஉரப் பாவனையால் இவை இரண்டும் அளவுக்கு அதிகமாகவே வடக்கில் பரவியுள்ளன என்கிற பின்னணியில் இந்த எச்சரிக்கை நிச்சயம் அச்சமூட்டும் ஒரு விடயம்தான்.

அலட்சியமும் பொறுப்பற்றதனமும் எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடுகின்றன என்பதற்கான மிகச் சிறந்த உதாரணம் இது. இனிமேலாவது விழித்துக்கொண்டு அனைத்துத் தரப்பினரும் விரைந்து செயற்பட்டு பாதிப்புகளைக் குறைப்பதற்கான வழிவகைகளை ஆராயவேண்டும். மக்களுக்கும் இது பற்றிய விழிப்புணர்வை ஊட்ட வேண்டும். மீண்டும் இந்த விடயத்தில் அலட்சியமோ பொறுப்பற்றதனமோ இருக்கக்கூடாது.

# நான் எப்போதும் தயார் கூட்டமைப்பு மறுக்கிறது - ஜனாதிபதி

*சர்வதேசத்தின் முன்னிலையில் தான் இனி எந்தப் பேச்சும்- சம்பந்தன்

*ராஜபக்ஷவுக்கு ஜப்பானிய பிரதமர் வழங்கிய அறிவுரை

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்து பத்திரிகைக்கு வழங்கியிருந்த பேட்டியின்படி நாடாளுமன்றக் குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் ஒருபுறமிருந்தாலும், அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் அம்சங்கள் இன்னமும் அப்படியேதான் இருக்கின்றன என்பதைத் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளது.



கடந்த காலத்தில் நாடாளுமன்றக் குழுவினரோடுதான் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தி வந்துள்ளார். இலங்கை மக்கள் ஒரே தேசியம் என்று வாழும்படியான அரசியல் மற்றும் அரசமைப்பு செயற்பாடுகளை பரிந்துரை செய்யவும் அறிக்கையிடவும் ஒரு தீர்வுப் பொதியை உருவாக்கும்படியாக இந்தத் தெரிவுக் குழு பணிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்த நிலைப்பாட்டிலிருந்து ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி அவர் அந்தப் பேட்டியில் தெளிவுபடுத்தியிருக்கவில்லை. "தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசுவதற்கு நான் தயாராய் இருக்கிறேன். ஆனால் அவர்கள் என்னோடு பேசுவதற்கு மறுக்கிறார்கள். ஒரு கலந்துரையாடலின்றி எவ்வாறு அதிகாரப் பகிர்வு அல்லது வேறு எதுவானாலும் என்னால் விவாதிக்க முடியும்" என்று கேட்டு அவர் குறை கூறியிருந்தார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ பேச்சுக்கள் எவ்வாறு அமைந் தாலும் அவை சர்வதேசத்தின் முன்னிலையில் நடைபெறவேண்டும் என்று அறிவித்துள்ளது. இது ஒரு முன் நிபந் தனை என்பதுடன் அவ்வாறான விவாதங்களை நெடுங்காலமாக நடத்தியிருக்கின்றோம், சர்வதேச பிரசன்னம் மிகவும் அவசியமாகும். இதுதான் பேச்சுக்கள் வெற்றியளிப்பதற்கான ஒரே வழி என்று அதன் தலைவர் ராஜவரோதயம் சம்பந்தன் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் நியூயோர்க்கில் ராஜபக்ஷ இந்தியப் பிரதமரை சந்தித்துப் பேசினாலும் கூட, தேசிய நல்லிணக்க முயற்சிகள் தொடர்பான விடயங்கள் அவரைப் பொறுத்தவரை ஒரு சிக்கல் நிறைந்த விடயமாகவே இருக்கப் போகின்றது. மே 27 ஆம் திகதி நரேந்திர மோடி பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் நடந்த பேச்சுக்களின் போது எழுப்பப்பட்ட பிரச்சினைகளை பிரதமர் மோடி நினைவு கூராமல் இருப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. 1987 ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் இணைத்துக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையிலேயே இந்தியா அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்தியப் பயணத்தின்போது இந்த விடயமே முக்கியத்துவம் பெற்றிருந்தது.

வவுனியாவில் நடந்து முடிந்த நான்கு நாள் தமிழரசுக் கட்சி மாநாட்டின் போது அதன் புதிய தலைவராக மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தப் பெயரிலேயே தேர்தல் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் த.தே.கூட்டமைப்பின் தேசியத் தலைவராக சம்பந்தன் இருந்து வருவார். தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் இறுதித் தீர்மானத்தின் வாசகம் இவ்வாறு இருந்தது.

"அரசு தற்போது மேற்கொண்டு வரும் எமது மக்கள் மீதான ஒடுக்குமுறைகள், அதிக அதிகமாக நில அபகரிப்பை செய்தல், எமது மக்களின் சொத்துக்களை அழித்தல், எமது பெண்கள் மற்றும் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்தல், அரசியல் தீர்வொன்றை காண்பதை இழுத்தடித்துச் செல்வது போன்றவற்றை அரசு தொடர்ந்து செய்து வருமானால்- அந்த நிலைப்பாடு இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு முடிவுக்கு வராமலிருக்குமானால் நாம் மகாத்மா காந்தியின் வழியில் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிப்போம். நாட்டிலுள்ள சகல முற் போக்கு அமைப்புக்களுக்கும் இந்தியா உட்பட சர்வதேச நாடுகளுக்கும் அழைப்பு



விடுக்கின்றோம், அவர்களை முன்வந்து எமது போராட்டத்தை ஆதரிக்கும்படி."

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்ததன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக துணிவைப் பெற்றிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகின்றது. எனவே தான் ஜனவரிக்குப் பின்னர் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக அது அரசுக்கு முன் அறிவித்தல் கொடுத்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தல் நடக்கக்கூடிய காலகட்டத்தில் இது நடக்கும்படியாக நிர்ணயிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொரு தீர்மானத்தில், இரண்டு இறைமையுள்ள நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய- இலங்கை உடன்படிக்கையை இலங்கை அரசு தொடர்ந்தும் மீறிச் செயற்பட்டுக் கொண்டிருப்பதை அனுமதிக்க வேண்டாம் என்று இந்தியாவையும் சர்வதேசத்தையும் இலங்கை மக்களையும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**ஜப்பானிய பிரதமர் கூறியது**

சர்வதேச விவகாரங்களில் இன்னொரு சிக்கலான விடயம் அரசுக்கு ஏற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. அது, ஜப்பானிய பிரதமர் மிக வெளிப்படையாக தெரிவித்துச் சென்றுள்ள விடயமாகும்.

இலங்கை அரசின் சில செயற்பாடுகளுக்கு தம்மால் ஆதரவு வழங்குவது சாத்தியமாக இருக்காது என்று தெரிவித்துள்ள ஜப்பானியப் பிரதமர் ஷின்ஸோ அபே. இலங்கை தனது சில பிரச்சினைகள் தொடர்பாக ஐ.நா. உட்பட சர்வதேசத்துடன் கலந்துரையாட வேண்டும் என்றும் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார். ஜப்பானிய பிரதமரின் கருத் துக்களை அரசு கவனத்தில் எடுத்திருப்பதாகவும் தெரிகின்றது. அந்த வகையில் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மனித உரிமைகள் சபையின் புதிய ஆணையாளருடன் ஒரு சந்திப்புக்கு அனுமதி கேட்டிருக்கிறார். அதேபோல் ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந் தர பிரதிநிதி மனித உரிமைகள் சபையின் 27 ஆவது மாநாட்டில் பேசுகையில், 'ஆணையாளரை இலங்கை தொடர்ந்தும் ஆதரிக்கும். ஆணையாளரின் பணிமனை மற்றும் அதன் பணிகளுக்கும் ஆதரவளிக்கும்' என்று கூறியுள்ளார். என்றாலும் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணையை இலங்கை நிராகரிக்கிறது என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

புதிய மனித உரிமை ஆணையாளர் இளவரசர் செயித் ராத் அல் ஹுசேயின் தமது உரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"இந்தச் சபையின் கட்டளைப்படி இலங்கை தொடர்பாக நடைபெறுகின்ற விசாரணைகளுக்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றேன். இது தொடர்பான மனித உரிமை ஆணையாளர் பணிமனையின் அறிக்கை சபையில் பின்னர் தாக்கல் செய்யப்படும். நீதி மற்றும் நல்லிணக்கத்தை முன்வைத்து இலங்கை அரசு அதிகாரிகளை விசாரணை செயற்பாடுகளில் ஒத்துழைக்கும்படியாக கேட்டுக் கொள்கின்றேன். இலங்கையில் தற்போது மனித உரிமை சமூகத்தின் மீதும், குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியமளிப்பவர்கள் மீதும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவது குறித்து நான் அதிர்ச்சியடைந்துள்ளேன். அத்துடன் சமீப காலத்தில் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களாகிய சிறுபான்மையோர் மீது வன்முறைகள் நடைபெற்றிருப்பதையும் கண்டிக்கின்றேன்" என்று அவர் குறிப்பிட்டிருப்பது போன்று இலங்கை மீதான சர்வதேச விசாரணை தொடர்பான வாய் மூலமான அறிக்கையொன்று அனேகமாக மனித உரிமை சபையில் இம்மாதம் 25 ஆம் திகதி தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழ்பேசும் மக்களின் விடிவுக்காக ஜனநாயக வழியில் போராடுவோம்

## அனைத்து சக்திகளின் ஆதரவையும் ஒன்று திரட்டி

*இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாட்டில் தலைவர் மாவை சேனாதிராசா ஆற்றிய தலைமையுரையின் இறுதிப் பகுதி பிரசுரமாகின்றது.*



மத நம்பிக்கைகள், ஆன்ம நேயங்கள் யாவுமே எம் கண்முன்னால் பறிக்கப்படுகின்றன, ஆக்கிரமிக்கப்படுகின்றன.

கடந்த அறுபது ஆண்டுகளில் இடம் பெற்ற இனஅழிப்பு நடவடிக்கைகளை விட போர் முடிந்தது எனச் சொல்லியே ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டிருக்கும் ராஜபக்ஷ அரசின் அடிவருடிகளால் கடந்த ஐந்து ஆண்டு ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற இன அடையாள அழிப்பு நடவடிக்கைகளை சொல்லிமாளாது. எம் தமிழ் முஸ்லிம் தேசத்தில் எம் மக்களின் இனச் செறிவை அடியோடு மாற்றியமைப்பதே ஆட்சியின் திட்டமாகும்.

இவற்றைப் பற்றியெல்லாம் தலைவர் சம்பந்தன் 23.08.2014 இல் புதுடெல்லியில் பிரதமர் நரேந்திரமோடி முன்னால் முன்வைத்த பொழுது, பிரதமர் சொன்னார்; உங்களுடைய முக பாவங்களே உங்கள் நிலைமைகளை எடுத்துக்காட்டுகின்றன. என்னை ஈர்த்துள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு ஒன்றைக் கோருகின்றீர்கள். வன்முறையை நாடவில்லை என்பதையிட்டு நான் திருப்தியடைகின்றேன். நான் உங்களுடன் இருக்கின்றேன் என்றும் கூறினார். அவரின் பிரதிபலிப்பை அவர் வெளியிட்ட அறிக்கையில் வெளிப்படுத்தி யிருந்தார். அவரது நடவடிக்கைகள் பயனுற அமைவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதனைப் புரிந்து கொண்டு அடுத்த நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டியுள்ளோம்.

அதற்காக எம்மிடம் எஞ்சியுள்ளது, இந்தியா உள்ளிட்ட சர்வதேசம் ஒப்புக்கொள்கின்ற ஜனநாயக வழிகளிலான, போராட்டம்தான். இந்திய நாடும் சர்வதேசமும் அதைத் தெரிந்து கொள்ளும் வகையில் அந்த அடித்தளத்திலிருந்து அதற்கும் மேலாகவும் நாம் காந்திய வழியில், சாத்வீக வழியில் தருமத்தில், அறத்தில் நம்பிக்கை வைத்து எம் தமிழ்ப்பேசும் மக்களின் விடுதலைக்காகவும் விடிவுக்காகவும், தன்னாட்சிக்காகவும் போராடுவோம் என்ற தீர்மானத்தை அறிவிப் போம்.

வன்னி மண்ணிலே சென்ற சனிக்கிழமையும் காணாமற் போனோரைத் தேடி கண்ணீர் விட்டுக் கதறி அழும் தாய்க் குலத்தின் துயரத்தைக் கேட்டோம். என் கணவன் எங்கே? என் மனைவி எங்கே? என் பிள்ளை எங்கே? என்று வானுலகம் வரை கேட்க குரல் எழுப்புகிறார்கள். நீதி எங்கே கிடைக்கப் போகிறது. என்ற ஏக்கமும், ஆதங்கமும் நெஞ்சைப் பிளக்கிறது.

இதனால் இந்துமா சமுத்திரப் பிராந்தியத்திலே வல் லாண்மை வலுமிக்க பாரதம் மற்றும் அதன் பிரதமரிடம் கடந்த கால வெளியுறவுக் கொள்கையை விட இலங்கையில் தமிழ்த் தேசிய இனத்தின் தன்னாட்சியை நிலை நாட்டவும் சிறிய தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் புதிய கொள்கையைக் கோரி நிற்கின்றோம். அது அவசியமெனக் கருதுகிறோம். எங்கள் ஜனநாயகவழிப் போராட்டங்களை ஆதரிக்க வேண்டும் என வேண்டி நிற்கின்றோம். சிலப்பதிகார காவியத்தை வடித்த இளங்கோ அடிகள் , அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும். என்று ஆன்மத்தைத் திறந்து அறிவித்தார். தன் கணவனான கோவலனை நியாய மற்ற முறையில் கள்வன் என்று கொன்றொழித்த பாண்டிய மன்னனை மாணிக்கம் பதித்த காற்சிலம்பை உடன் கொண்டு சென்று நீதி கேட்கின்றாள் கண்ணகி. அந்தச் சிலம்பைச் சிதறடித்தபொழுது உண்மை தெரிந்த பாண்டிய மன்னன் மூர்ச்சித்து வீழ்ந்து கிடக்கின்றான். மதுரை மாநகரம் தீப்பற்றி எரிகிறது. இதனைக் கேட்க எம் நெஞ்சம் பற்றி எரிகிறது.

அந்தக் குற்றப் பத்திரிகையைத்தான் ஐ.நா.மனித உரிமை சபை சர்வதேச விசாரணை என்று தீர்மானம் நிறைவேற்றி செயலாற்றுகிறது. அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அத்தீர்மானத்தை எடுத்த நாடுகள் மட்டுமல்லாமல் நடுநிலை வகித்த இந்தியா,தென்னாபிரிக்கா,ஜப்பான் உள்ளிட்ட நாடுகளையும் எதிர்த்து நின்றோரையும் நாம் வென்றெடுக்க வேண்டும். சாத்வீகப் போராட்டம். அத்தோடு நாம் ஜனநாயக வழியில் சாத்வீக வழியில் அந்த நாடுகளின் உலகம் முழுவதும் சிதறிக் கிடக்கும் பத்து இலட்சத்துக்கு மேலான புலம் பெயர்ந்த எம் நெஞ்சத்து உறவுகளும் ,தமிழகம் உள்ளிட்ட தமிழர் வாழும் நாட்டு மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் ஆதரவளிக்கும் வகையில் நாம் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும்.

நான் சிறைகளில் அடைக்கப்பட்ட காலங்களில் இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில், பாரதி வடித்த கவிதையிலொன்று என்னைச் சோர்வற்றுத் துன்பத்தைத் தாங்கும் மருந்தாக வலிமைப்படுத்தியது. இதம் தருமனையில் நீங்கி இடர்மிகு சிறை பட்டாலும், பதந்தரு இரண்டும் மாறிப் பழி மிகுந்திட்டாலும் விதந்தரு கோடியின்னல் விளைத்திட்டு என்னை அழித் திட்டாலும் சுதந்திர தேவி நினை நான் மறக்கிலேனே என்ற பாடல்தான் அது. ஐரிஸ் போராட்டக்களத்திலிருந்து பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்ட தேசபக்தன் ஒருவன் எழுபது நாள்களுக்குமேல் பிரிட்டிஷ் சிறையில் உண்ணாவிரதமிருந்து சாகும் வேளையில் இரத்தத்தால் வடித்த வரிகளைப் பாருங்கள் கூடிய துன்பத்தைத் தாங்குபவர்களே இறுதியில் வெற்றி பெறுவர் என்பதுதான் அந்த வரிகளின் சுருக்கமாகும்.

அதற்குத் தேவையான கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஆகவும் செயலாற்றுவர் எனும் உணர்வோடு உரிமையோடு கூட்டமைப்பில் அங்கம் வகிப்பர். போராட்டத்துக்கான கட்டமைப்பை ஒருமைப்பாட்டோடு உருவாக்குவோம் என்பதை அறுதியிட்டுக் கூறிக்கொள்கின்றேன். இதன் பொருட்டு தேசிய சபை உருவாக்குவதற்கு முன்னின்று உழைப்பேன் என உறுதியளிக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநாடு ஒன்றும் இந்த ஆண்டில் நடத்தவேண்டுமென அழைப்பு விடுக்கின்றேன்.

இலங்கை அரசானது ஐக்கிய இலங்கை கட்டமைப்பில் வடக்கு கிழக்கு மாநிலத்தில் தமிழ்ப் பேசும் மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டும், தமிழ் இன அடையாளங்களை அழிக்கும் மற்றும் இனக் குடிப்பரம்பலை குலைக்கும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் , தமிழ் முஸ்லிம் மக்களுக்குரித்ததான சொந்த நிலங்களில் அகதிகளாயுள்ள மக்கள் மீளக் குடியேறப் பொருத்தமாக அக்காணிகளை அபகரித்து நிற்கும் இராணுவத்தினர் வெளியேறிச் செல்ல உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்,

தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் தொடராமல் உடன் நிறுத்தும் நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும்.

காணாமல் போனோர் விடயத்தில் அரசு உண்மையைக் கண்டறியும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அரசுக்கு செய்தியொன்றை விடுக்கின்றேன். இம் மாநாட்டிலிருந்து எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் அரசு நம்பகத்தன்மையும் அர்த்தமுள்ளதுமான நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அல்லது ஜனநாயக வழிகளில் சாத்வீக வழிகளில் மக்களை அணிதிரட்டி போராட்டங்களில் ஈடுபடுவதென்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாடு தீர்மானிக்கின்றது. தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் அனைத்து சக்திகளையும் அணிதிரட்டி ஜனநாயக வழியில் போராட்டங்களை நடத்த வேண்டுமென்ற பொறுப்பை வரலாற்றுக் கடமையை நான் தெரிவு செய்து கொண்டிருக்கின்றேன்.

பாரதப்போரிலே பார்த்தசாரதியாக நின்ற பரமாத்மா கிருஷ்ணன் அர்ச்சுனனிடம் போதித்ததென்ன வென்றால் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பது தான். அதுதான் பகவத்கீதையின் அடிநாதம். எம் கடன் பணி செய்வது. ஆனால் அது தமிழி னத்தின் விடுதலைக்காக பயனுறவேண்டும் என்பதுதான் எம் இதய வேட்கை. எனவே ஏற்கனவே கூறியது போல நாம் எல்லோரும் தமிழ்த்தேசத்தின் தமிழ் - முஸ்லிம், தமிழ்ப்பேசும் மக்களின் விடுதலைக்காகவும் விடிவுக்காகவும் ஒன்றுபட்டுழைப்போம் என்ற திடசங்கற்பத் துடன் உங்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றி கூறி விடைபெறுகின்றேன். (முற்றும்)

# சிந்தித்துச் செயலாற்றுவோம்

ஆ. விமல்ராஜ்,
கொக்குவில் கிழக்கு



குடாநாட்டின் வியாபார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் என்றுமில்லாத வகையில் மிகவும் நெருக்கடியான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தொடர்ச்சியான பொருளாதார மந்தநிலை காரணமாக மக்கள் மிகவும் இக்கட்டான கட்டத்தில் உள்ள னர். வர்த்தக சங்கத்தினரும் இது தொடர்பாக பத்திரிகைகள் மற்றும் ஊடகவியலாளர் கூட்டங்களை ஒழுங்குசெய்து தத்தமது கருத்துக்களைத் தெரியப்படுத்திய வண்ணமுள்ளனர்.

அதிகரித்த கடன்சுமை, திட்டமிட்டவாறு எதிர்பார்த்த வியாபார புரள்வு இல்லாத நிலை மற்றும் நிதி நிறுவனங்களின் கடன் மீளளிப்பு மற்றும் குத்தகை நிறுவனங்களின் எதிர்பாராத நெருக்குதல்கள் முதலான பல்வேறுபட்ட காரணங்களால் குடாநாட்டு வர்த்தகத்துறை மிகவும் அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பொதுவானதொரு நெருக்கடியான நிலைமையில் நாம் அனைவரும் சிந்தித்து ஓரளவுக்கேனும் தீர்வு காண முயற்சித்தல் காலத்தின் அவசியம் மற்றும் அவசர தேவையாகும்.

மேற்கூறப்பட்ட காரணிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கவையாக நிதி நிறுவனங்கள் (ஒரு சில வங்கிகள் தவிர்ந்த) மற்றும் குத்தகை நிறுவனங்கள் முக்கியமாக தனியார் நிறுவனங்கள் குடாநாட்டு மக்களின் பெருமளவு பொருளாதாரத்தை விழுங்கும் வகையில் செயற்படுகின்றமை பல்வேறு தரப்பட்ட மக்களாலும் பிரஸ்தாபிக்கப்படுகின்ற ஒன்றாகும். சில நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை நிறுவனங்கள் தத்தமது நிதிசார் திட்டங்கள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையில்லாது செயற்படுகின்றமை தவறானதாகும்.

அண்மையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற குடாநாட்டின் அதிக வருமான வரி செலுத்தும் வர்த்தகர்கள் மற்றும் வியாபாரத்துறையினரைக் கௌரவிக்கும் நிகழ்வு தொடர்பாக ஊடகங்கள் வாயிலாக அனேகமானவர்கள் அறிந்திருப்பர். மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணம் வணிகர் கழகத் தலைவர் தமது உரையில் மேற்கூறப்பட்ட நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களைக் குற்றம் சுமத்தும் வகையில் குறிப்பிட்டிருந்தார். மேற்கூறிய நிறுவனங்கள் குடாநாட்டு வாடிக்கையாளர்களைத் தவறாக வழிகாட்டுவதாக அவர் குறிப்பிட்டிருந்தார். அவரது மேற்படி கூற்று யதார்த்தமானதுடன், மேற்படி நிறுவன்ங்கள் தொடர்பாக மக்களின் விழிப்புணர்வு எவ்வாறு உள்ளதென ஊகிக்கவும் உதவியுள்ளது.

மேற்குறித்த நிதி மற்றும் குத்தகை நிறுவனங்களை நாடுவோர் முதலில் கடன் அல்லது குத்தகை மூலமாகப் பெற்றுக்கொள்ளவிருக்கும் நிதி சரியான இலாப நட்ட விகிதாசாரம், நீண்ட காலப் பகுதியில் தாம் ஈட்டவுள்ள வருமானம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுதல் மிகவும் அவசியமான ஒன்றாகும். அத்துடன் மேற்படி நிறுவனங்களின் நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து தமது ஒப்பந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் நன்மையளிக்கும். மூலதனப் பற்றாக்குறை காரணமாக தமது அவசர தேவை கருதி மேற்படி நிறுவனங்களை நாடும் அனைவரும் ஒன்றல்ல... இரண்டு தடவைகளுக்கு மேற்பட்டு சிந்தித்துச் செயற்படுவது காலத்தின் தேவையென்பதுடன், தமது எஞ்சிய சொத்துக்களைத் தானும் தக்க வைக்க முடியும். நிதிசார் துறையுடன் நன்கு அனுபவமுள்ளவர்கள், நண்பர்கள் அல்லது மேற்குறிப்பிட்ட வர்த்தக மற்றும் வணிகர் கழகங்களுடன் தொடர்பு கொண்டு செயற்படுவது மிகவும் நன்மையளிக்கும். வணிகர் நிறுவனங்களும் இவ்வாறான மக்கள்ள மிகவும் சரியான பாதையில் வழிகாட்டுவது அவர்களுக்குள்ள பொறுப்பு மட்டுமன்றி காலத்தின் தேவையுமாகும். எனவே இவ்விடயத்தில் அனைவரும் சிந்தித்துச் செயலாற்றுவது அவசியமான ஒன்றாகும்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: எந்த ஒரு வேலையையும் ஒருமுறைக்கு பலமுறை சிந்தித்துச் செய்து வெற்றிபெறுவீர்கள். மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பண வரவு அதிகரிக்கும்.



**இடபம்**: தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் நல்ல பலன் தரும். வாடிக்கையாளர்கள் பற்றிய வீண் கவலை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணவரத்து திருப்தி தரும். ஆனால் எதிர்பார்த்த அளவு இருப்பது கடினம்.



**மிதுனம்**: குடும்பத்தில் வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். புத்தி சாதுரியத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள். வாழ்க்கைத் துணையுடன் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும்.



**கடகம்**: எந்த ஒரு காரியத்தையும் நிதானமாகச் செய்து முடிக்கும் உங்களது கருத்துக்கு மற்றவர்களிடம் வரவேற்பு இருக்கும். எதிர்ப்புகள் விலகும். தடைப்பட்ட காரியங்களை மீண்டும் செய்து முடிக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.



**சிங்கம்**: தொழில் வியபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம்.



**கன்னி**: குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் உதவி கிடைக்கும். தடைப்பட்ட காரியங்களைச் செய்து முடிக்க மீண்டும் பெண்கள் முயற்சிகள் மேற்கொள்வார்கள்.



**துலாம்**: திட்டமிடுவதில் கெட்டிக்காரர்களான நீங்கள் எதிலும் சிக்காமல் நழுவுவதில் கெட்டிக்காரர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். சிக்கலான சில விடயங்களைச் சாதுரியமாகப் பேசி முடித்து விடுவீர்கள்.



**விருச்சிகம்**: தொழில் வியாபாரத்தில் முன்பு இருந்ததை விட முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தர்கள் தங்களது சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் திறம்படச் செய்து முடித்து பாராட்டுக் கிடைக்கப் பெறுவார்கள்.



**தனுசு**: தேவையற்ற வீண் பேச்சுக்களைக் குறைப்பதன் மூலம் குடும்பத்தில் அமைதி ஏற்படும். கோபத்தைத் தவிர்த்து பேசுவது நல்லது. பெண்கள் சாதுரியமான பேச்சின் மூலம் சிக்கலான பிரச்சினைகளையும் தீர்த்து விடுவீர்கள்.



**மகரம்**: ஒரு காரியத்தைச் செய்யும் முன்பு அது சரியா தவறா என்று பல முறை மனதுக்குள் கேள்வி எழுப்பி பின்னர் ஒரு முடிவு எடுப்பீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். எதிலும் சற்றுக் கூடுதல் கவனமாக இருப்பது நல்லது.



**கும்பம்**: தொழில் வியாபாரம் தொடர்பான மனக்கவலை தோன்றி மறையும். ஆனால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிலும் நிதானமாகச் செயற்படுவதும் மற்றவர்களை அனுசரித்துப் போவதும் நல்லது.



**மீனம்**: குடும்பத்தில் இருந்து பிரிந்து சென்ற நபர் மீண்டும் வந்து போவார். அதனால் மகிழ்ச்சி உண்டாகும். கோபத்தைக் குறைத்து இனிமையாகப் பேசுவதன் மூலம் குடும்பத்தில் அமைதி உண்டாகும். வெளியூர்ப் பயணம் செல்ல வேண்டி இருக்கலாம்.

## நாளை

**புரட்டாதி-02 வியாழக்கிழமை | 18.09.2014**

திதி: தசமி பி.இ.02.56 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் முழுவதும்

சுபநேரம்:07.33-09.03 வரை
இராகுகாலம்:01.33-03.03 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## துன்பமும் இன்பமும் பிரிக்க முடியாதவை

விவேகானந்தர் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பிரதிகளில் பந்தம் பற்றிக் குறிப்பிடுகையில்;

நமது எல்லையில்லாத ஆசையை நிறைவேற்றுவதற்கு ஓர் எல்லை உண்டு. ஆசையை நிறைவேற்றும் சக்தியின் வெவ்வேறான தன்மை காரணமாக வாழ்க்கையில் சிலர் பிறரைவிட அதிக வெற்றி பெறுகின்றனர். எல்லை என்ற அடிமைத்தனத்தைப் போக்கவே வாழ்நாள் முழுவதும் போராடுகிறோம். துன்பம் அளிப்பதை வெறுத்து இன்பம் தருவதை மட்டும் தான் விரும்புகிறோம். ஆனால் நாம் விரும்பும் பொருள்கள் துன்பத்தையும் இன்பத்தையும் ஒருங்கே தரக்கூடியவாறு பிரிக்க முடியாதபடி பின்னியிருக்கும் கூட்டுப் பொருள்கள் ஆகும். நமது விருப்பங்கள் அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கின்றன. இதனால் தற்காலத்தில் இன்பமாக இருப்பது எதிர்காலத்தில் துன்பமாக மாறிவிடுகிறது. இன்று நேசிப்பதை பின்னர் பகைக்கிறோம். துன்பம் சிறிதும் இல்லாமல் இன்பம் ஒன்றையே எதிர்கால வாழ்வில் நாம் பெறமுடியும் என நம்புகிறோம். அது நடக்காத காரியமாகும். எல்லாப் பொருள்களுக்கும் முடிவு மரணம். மாற்றம் அல்லது மரணம் என்கின்ற காரணத்தால் காலப் போக்கில் துன்பம் ஏற்பட்டே தீரும். உயிரினங்கள் நுண்ணியதாகும் அளவுக்கு அதன் கலாசாரமும் உயர்ந்திருக்கும். மன மகிழ்ச்சி உடல் இன்பத்தை விட மிக உயர்ந்தது. மனத் துன்பம் உடல் துன்பத்தை விட மிகக் கொடியது. எண்ணத்தின் ஆற்றலும் ஞாபக சக்தியும் வானுலகத்திலும் நரகத்திலும் நம்மை வசிக்கச் செய்கின்றன. துன்பத்தை வெல்ல நாம் போராடிமுயற்சியால் வெற்றி அடைகிறோம். அதேவேளை தோல்வி அடைந்து புதிய துன்பங்களை உண்டாக்கிக் கொள்கிறோம். துன்பத்தை நோக்கும் தன்மை அசைக்க முடியாத உண்மை ஆகும். இன்பத்தை நோக்கும் தன்மை மெலிந்த ஊக்கமாகும். கடினமான காரியத்தையும் மிக மிக நல்லாதாகச் செய்ய வல்லது ஆகும்.

# செவ்வாய்க் கிரகத்தில் மலையேறும் ரோவர் விண்கலம்

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ச்சி செய்வதற்காக கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் நாஸா விண்வெளி மையத்தால் அனுப்பி வைக்கப்பட்ட கியூரியோசிட்டி ரோவர் விண்கலம் மலை ஒன்றின் உச்சியைச் சென்றடைந்துள்ளது.



நாசா விஞ்ஞானிகளால் பெயரிடப்பட்ட Gale பள்ளத்தாக்கு பகுதியில் அமைந்துள்ள மலைப் பகுதி ஒன்றிலேயே ரோவர் விண்கலம் தற்போது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை வழமையாகத் திட்டமிடப்பட்ட பாதையை விட்டு விலகி குறுக்கு வழி ஒன்றில் ரோவர் விண்கலம் பயணித்து வருவதாக நாஸா நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

அலுமினியத்தால் வடிவமைக்கப்பட்ட ரோவர் விண்கலத்தின் சில்லுகள் செயற்படுவதற்குக் குறித்த பாதையானது கடினமானதாக இருந்தமையால் மணல் நிறைந்த புதிய பாதை தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய் நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 9 | | 5 | | | 7 |
| | 3 | 1 | | 6 | | 4 | | |
| 4 | 5 | | | 7 | 1 | | | 8 |
| | | 3 | 4 | | | 1 | 9 | |
| | | 7 | | | | 6 | | |
| | 2 | 5 | | | 9 | 7 | | |
| 6 | | | 8 | 3 | | | 7 | 1 |
| | | 2 | | 9 | | 8 | 3 | |
| 3 | | | 1 | | 4 | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 4 | 3 | 8 | 9 | 1 | 7 | 2 |
| 9 | 2 | 1 | 6 | 7 | 5 | 3 | 8 | 4 |
| 3 | 7 | 8 | 1 | 4 | 2 | 5 | 6 | 9 |
| 5 | 6 | 2 | 7 | 9 | 8 | 4 | 3 | 1 |
| 8 | 1 | 7 | 4 | 2 | 3 | 9 | 5 | 6 |
| 4 | 3 | 9 | 5 | 1 | 6 | 7 | 2 | 8 |
| 7 | 8 | 3 | 9 | 6 | 1 | 2 | 4 | 5 |
| 1 | 4 | 6 | 2 | 5 | 7 | 8 | 9 | 3 |
| 2 | 9 | 5 | 8 | 3 | 4 | 6 | 1 | 7 |

# தடகளப் போட்டியில் சாதனை புரிந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வீரர்கள்



பிரசன்னா



கபிலன்



எட்வின் ஜோசப்



தாரணி



ஜெயரஞ்சினி



துஸ்யந்தி

வலி.வடக்கு.செப்.17

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டி கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது. இலங்கையின் 14 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றியிருந்த இந்த தடகளப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் சார்பில் கலந்து கொண்ட வீரர்களில் 6 பேர் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆண்கள் பிரிவில் ஏ. பிரசன்னா தட்டெறிதல் போட்டியில் 3ஆம் இடத்தையும், ரி.கபிலன் 110மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 3ஆம் இடத்தையும், ஏ.ஜே.எட்வின் ஜோசப் 400மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். பெண்கள் பிரிவில் எஸ். தாரணி ஈட்டி எறிதல் போட்டியில் முதலாம் இடத்தையும், எஸ். ஜெயரஞ்சினி 100மீற்றர் தடைதாண்டல், 400மீற்றர் தடைதாண்டல் என்பவற்றில் 2ஆம் இடங்களையும், ஜி. துஸ்யந்தி உயரம் பாய்தல் போட்டியில் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக தடகள ஆண்கள் அணியின் முகாமையாளராக ஜி.டி.மதியழகனும், பெண்கள் அணியின் முகாமையாளராக திருமதி. ஜெ.சரவணபவஜயாவும், பயிற்றுநராக செல்வி. இ.அருளம்பலமும் கடமை யாற்றினார்கள். யாழ். பல்கலைக் கழகத் தடகள ஆண்கள் அணிக்கு ஏ.டினேஸ்ஸும், பெண்கள் அணிக்கு ஆர்.துஸ்யந்தியும் தலைமை தாங்கியிருந்தனர். (ரி- 86)

## தேவராஜ் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது சென். அன்ரனிஸ்

யாழ்ப்பாணம்.செப்.17

நெவில், சுதர்சன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் எமில்நகர் இருதயநாதர் விளையாட்டுக்கழக அணியைத் தோற்கடித்து தேவராஜ் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்.

நெடுங்கண்டல் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய தேவராஜ் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான, அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அடம்பன் பொது விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் மன்னார் எமில் நகர் இருதயநாதர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் விளையாட்டுகழக அணி மோதிக் கொண்டது. மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரண்டு அணியினரும் வெற்றியைப் பெறுவதற்கு கடுமையாக மோதிக் கொண்டனர்.

ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் நெவில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. பதிலுக்கு இருதயநாதர் விளையாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான கோலை அடிப்பதற்கு பலமுயற்சிகளை மேற்கொண்ட போதிலும் கோல்களைப் பெற முடியவில்லை. முதற்பாதி ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ்விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருக்க ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின்பின்தொடர்ந்த ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் சுதர்சன் தனக்குக் கிடைத்த பந்தை சரியான முறையில் முன்நகர்த்தி தனது அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார்.

ஆட்ட நேர முடிவு வரை இருதயநாதர் அணி கோல்களைப் பெற முடியாமல் போக சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த நெவில் சிறந்த வீரனாகவும், யண்சன் சிறந்த கோல்காப்பாளராகவும் தெரிவானார்கள். (ரி- 23)

## வென்றது சார்ள்ஸ் அணி

இறுதியாட்டத்தில் ப்ரெண்ட்ஸ் அணியை 12 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது சார்ள்ஸ் அணி. வவுனியா கணேசபுரம் விவேகானந்தா விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 6 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சார்ள்ஸ் அணியினரும், ப்ரெண்ட்ஸ் அணியினரும் மோதிக் கொண்டனர். முதலில் துடுப்பெடுத்தாடிய சார்ள்ஸ் அணி 5 ஓவர்கள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. பின் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ப்ரெண்ட்ஸ் அணி 4.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 51ஓட்டங்களை மாத்திரம் பெற்று 12 ஓட்டங்களால் தோல் விபடைந்தது. ஆட்ட நாயகனாக சார்ள்ஸ் அணியின் சசியும், தொடர்நாயகனாக உதயதாரகை அணியின் தர்மசீலனும் தெரிவாகினர். இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக வவுனியா உப நகர முன்னாள் பிதா க.சந்திரகுலசிங்கமும், சிறப்பு விருந்தினராக கணேசபுரம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சுப்பிரமணியமும் கலந்து கொண்டனர். (ரி)

## தாச்சிப் போட்டி முடிவுகள்

பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 8:4 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக்கழக அணி 10:6 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ரி- 23)



## அடுத்த சுற்றில் விண்மீன்

கரணவாய்.செப்.17

அற்புதமாக விளையாடி கோல் போடுவதற்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் பலவற்றை சென் பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் தவற விட சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திய பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த கட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பம் முதல் இறுதி வரை பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதிய போதும் சென். பீற்றர்ஸ் அணிக்கு கோல் போடுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் அந்த அணியின் முன்கள வீரர்கள் அவற்றைத் தவற விட்டவண்ணமிருந்தனர். இதனால் கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையில் விண்மீன் அணியின் முன்கள வீரர் றஞ்சித் அருமையான கோல் ஒன்றைப் போட, அதனைத் தொடர்ந்து 17 ஆவது, 19 ஆவது நிமிடங்களில் அந்த அணியைச் சேர்ந்த உதயதாஸ் அடுத் தடுத்து இரண்டு கோல்களைப் போட்டார். இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் பலாலி விண்மீன் அணி வெற்றி பெற்றது. (ரி- 108)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.செப்.17

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

பண்டத்தரிப்பு குஞ்சன் கலட்டி அறிவொளி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத் தும் தாச்சிப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் காலிறுதியாட்டத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ரி-23-288)



யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் றாகம கருணரெத்தின பௌத்த கல்லூரி வெற்றி பெற்றுச் சம்பியனானது. வெற்றிபெற்ற அணியின் தலைவருக்கு வடமாகாணக் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சத்தியபாலன், கொழும்பு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பந்துல ஆகியோர் இணைந்து வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ரி- 23)


# ஆதரவு தரும் காதலன் - தீபிகா



இந்தியாவின் முன்னணி ஸ்குவாஷ் வீராங்கனையான தீபிகா பல்லீகல், தோல்வியின் போது தனது காதலர் தினேஷ் கார்த்திக் ஆதரவாக இருப்பார் எனக் கூறியுள்ளார்.

காதலர்களான இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக் மற்றும் தீபிகா ஆகியோரின் நிச்சயதார்த்தம் கடந்த வருடம் நடைபெற்றது. இவர்களது திருமணம் அடுத்த வருடம் நடைபெறவுள்ளதாக தீபிகா ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்த நிலையில் தங்களது விளையாட்டுப் போட்டிகளைப் பற்றி தாங்கள் பேசிக் கொள்ள மாட்டோம் என தீபிகா தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், தேவை ஏற்பட்டால் மட்டுமே நாங்கள் கிரிக்கெட் அல்லது ஸ்குவாஷ் போட்டிகளைப் பற்றி பேசிக் கொள்வோம். மற்ற நேரங்களில் அதுபற்றிப் பேச மாட்டோம்.

வெற்றியை தங்களுக்கு பிடித்தமானவர்களிடம் பகிர்ந்து கொள்வது சிறப்பான ஒன்று. அதே சமயம் தோல்வியடையும் போது தினேஷீடைய ஆதரவு எனக்கு உற்சாகம் அளிக்கும். சமீபத்தில் நடந்து முடிந்த பொதுநலவாய போட்டிகளின் போது துரதிர்ஷ்டவசமாக பெற்றோர்களால் கிளாஸ்கோ வர முடியவில்லை. அப்போது களத்தில் இருந்து தினேஷ் ஆதரவளித்தார் எனக் கூறியுள்ளார். (ரி)



# ஐ.பி.எல். அணிகளுக்கு அதிக வாய்ப்பு - டோனி

சம்பியன் லீக் கிண்ணத்தை வெல்ல ஐ.பி.எல். அணிகளுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என சென்னை சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் டோனி கூறியுள்ளார்.

சம்பியன் லீக் தொடரின் முதன்மை சுற்று இன்று தொடங்குகிறது. இதன் அரையிறுதி ஒக்டோபர் 2ஆம் திகதியும், இறுதியாட்டம் 4ஆம் திகதியும் நடைபெற இருக்கின்றது.

ஐதராபாத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், ஐ.பி.எல் நடப்புச் சம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்கொள்கிறது. இந்நிலையில் சம்பியன் லீக் தொடர் குறித்து டோனி கூறுகையில், எங்கள் அணியில் சிறந்த வீரர்கள் உள்ளனர். ஐ.பி.எல். தொடரில் 2 மாதங்கள் ஒருங்கிணைந்து செயற்பட்டது இந்த ஆட்டத்தில் பலனை தரும். இங்குள்ள மைதான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு விளையாடினால் சம்பியன் லீக் கிண்ணத்தை வெல்ல ஐ.பி.எல். அணிகளுக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. ஐ.பி.எல். தொடரில் பிராவோ காயத்தால் விலகினார். இதனால் அணிக்கு பாதிப்பு இருந்தது. தற்போது அவர் அணிக்கு திரும்பி இருப்பது பலமாகும் என்று கூறியுள்ளார். (ரி)

# தலைவராக அப்ரிடி வேண்டும் - ரசாக்



சயிட் அப்ரிடியை பாகிஸ்தான் அணியின் அணித்தலைவராக நியமிக்க வேண்டும் என அந்த அணியின் சகலதுறை வீரர் அப்துல் ரசாக் கூறியுள்ளார். அடுத்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்நிலையில் உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் அணித்தலைவராக சயிட் அப்ரிடியை நியமிக்க வேண்டும் என்று அந்த அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அப்துல் ரசாக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அப்துல் ரசாக் கூறுகையில், தற்போதைய சூழ்நிலையில் ஒருநாள் ஆட்டத்துக்கான தலைவர் பதவிக்கு அப்ரிடி சிறந்த தேர்வாக இருப்பார். டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிகரமாக செயற்படும் ஒரு தலைவர், ஒருநாள் ஆட்டத்திலும் சிறப்பாக செயற்பட முடியாது. ஒருநாள் ஆட்டத்தில் அணித்தலைவர் வேகமாக முடிவு எடுக்க வேண்டும். அந்த திறமை உடையவர் அப்ரிடி தான் என்று தெரிவித்துள்ளார். (ரி)

# அறிமுகமானது 'லோகோ'

இந்தியன் சூப்பர் லீக் தொடரில் பங்கேற்கும் சச்சினின் கேரளா பிளாஸ்டர்ஸ் அணியின் 'லோகோ' கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது.

ஐ.பி.எல். தொடரை முன்மாதிரியாகக் கொண்டு இந்திய கால்பந்து வீரர்களை இனங்கண்டு கொள்வதற்காக இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் இந்தியாவின் உள்ளூர் வீரர்களையும் சர்வதேச வீரர்களையும் இணைத்து தொடர் நடத்தப்படவுள்ளது.

அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் தொடர், எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் கொல்கத்தா, சென்னை, மும்பை, கேரளா உட்பட 8 அணிகள் பங்கேற்கவுள்ளன. இதில் கேரளா மாநில அணியான கேரளா பிளாஸ்டர்ஸை இந்தியத் துடுப்பாட்ட நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் வாங்கியுள்ளார்.

இந்த அணிக்கான 'லோகோ' கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிமுகம் செய்யப்பட்டது.

கேரள மக்களின் கால்பந்து ஆர்வம், பாரம்பரியம், கலாசாரம், விழாக்களைப் பிரதிபலிக்கும் வகையில் கேரளாவின் சின்னமான யானை தனது தும்பிக்கையில், கால்பந்தை பிடித்திருப்பது போன்று 'லோகோ' வடிவமைக்கப்பட்டுள்ளது.

'லோகோ'வை வடிவமைத்த நிறுவனத்தினர் கூறுகையில், உலகின் சிறந்த கால்பந்து கழக அணிகள் குறித்து ஆழமாக ஆராய்ந்து, இந்த 'லோகோ' வடிவமைக்கப்பட்டது. முதலில் யானையை வைத்து விட்டு, அதனைச் சுற்றி ஏனையவற்றை வடிவமைத்தோம் என்றனர். (ரி)

## இன்றைய CLT-20 ஆட்டங்கள்

இரவு 8 மணி

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் VS சென்னை சுப்பர் கிங்ஸ்

# லயன்ஸிடமும் விழுந்தது எக்ஸ்பிரஸ்



ஏற்கனவே நோர்தன், மும்பை அணிகளுடன் தோல்வியைத் தழுவியிருந்த நிலையில், ஆறுதல் வெற்றியைப் பெற லாகூர் லயன்ஸை எதிர் கொண்ட சவுதேர்ன் எக்ஸ்பிரஸ் அணி 55 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவி சம்பியன் லீக் தொடரிலிருந்து வெளியேறியது.

நேற்று நடைபெற்ற ஐந்தாவது தகுதியாட்டத்தில் இலங்கையின் சவுதேர்ன் எக்ஸ்பிரஸ் அணியை எதிர்த்து பாகிஸ்தானிம் லாகூர் லயன்ஸ் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சவுதேர்ன் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய லாகூர் அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் நிதானமான தொடக்கத்தை அளித்தனர். இறுதி நேரத்தில் அணித்தலைவர் ஹபீஸின் அதிரடி கை கொடுக்க 20 ஓவர்கள் நிறைவில் லாகூர் அணி 6 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றனர். துடுப்பாட்டத்தில் மொகமட் ஹபீஸ் 67 ஓட்டங்களையும், சாட் நஸிம் 31 ஓட்டங்களையும், அகமட் செஷாட் 29 ஓட்டங்களையும் பெற்றது. பந்து வீச்சில் பர்வீஷ் மஹரூவ் 3 இலக்குகளை வீழ்த்தினார். பதிலுக்கு இலக்கை விரட்டிய சவுதேர்ன் அணி 18 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதன் மூலம் லாகூர் லயன்ஸ் 55 ஓட்டங்களால் சவுதேர்னை வென்றது. சவுதேர்ன் அணி சார்பில் அதிகபட்சமாக அணித்தலைவர் ஜெகன் முபாரக் 35 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அய்சாஸ் சீமா 3 இலக்குகளையும், வகாப் ரியாஷ், அட்னன் ரசூல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக மொகமட் ஹபீஸ் தெரிவானார். (ரி)

# உலகக் கிண்ணதுக்கு முன்னர் அணிக்குத் திரும்புவேன் - சயீட் அஜ்மல்

ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னதாக சர்வதேச கிரிக்கெட்டுக்கு திரும்புவேன் என்று பந்து வீச்சுத் தடைக்கு உள்ளான பாகிஸ்தான் சுழற் பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் தெரிவித்துள்ளார்.

விதிமுறைகளை மீறிப் பந்து வீசுவதாகக் கூறி சர்வதேச ஆட் டங்களில் பந்து வீசுவதற்கு அஜ் மலுக்குதடைவிதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அஜ்மல் அளித்த பேட்டி ஒன்றில், பந்து வீச்சுத் தடையால் நான் நெருக்கடிக்கு உள்ளாகவில்லை. இது ஒரு தற்காலிக பின்னடைவு. இந்த பிரச்சினையில் இருந்து விரை வில் விடுபட முடியும் என்ற நம் பிக்கை இருக்கிறது. சக்லைன் முஸ்தாக் உதவியுடன் பந்து வீச்சில் உள்ள குறைபாடுகளை நீக்குவேன். அடுத்து கிரிக்கெட் சபை யின் முடிவின் படி சர்வ தேச கிரிக்கெட் கவுன்சிலின் சோதனைக்கு செல்வேன். அடுத்த ஆண்டு நடைபெற வுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பு சர்வதேச ஆட்டங்களுக்குத் திரும்புவேன் என்று அவர் தெரிவித்தார். (ரி)

## தொடர்ச்சிகள்

### யாழ்.

ரயில்வே திணைக்கள அதி காரி அபேயரத்ன.

யாழ்தேவி ரயில் சேவை ஆரம்பிப்பு தொடர்பில் அவரி டம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:-

"ரயில் பாதை புனரமைப்பு நிறை வடைந்தமை தொடர்பில் இன்னும் அறிவிக்கபடவில்லை. தொடர் ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு பரீட்சார்த்த ரயில் சேவை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இதற்காக பளையில் இருந்து யாழ்ப் பாணம் வரை பரீட்சார்த்த ரயில் சேவையை எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும்"- என்று தெரிவித்தார்.

பளையில் இருந்து ரயில் பாதை புனரமைப்பு பணிகள் கடந்த வருடம் முதல் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு கடந்த வருடம் செப்ரெம்பர் மாதமும், கொழும் பில் இருந்து பளை வரைக்கான ரயில் சேவை கடந்த பெப்ரவரி மாதமும் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் காலநிலை மாற்றத் தால் யாழ்ப்பாணம் வரை யான ரயில் பாதைப் புனர மைப்புப் பணிகள் தாமத மடைந்தன. தற்போது புனர மைப்பு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதால் ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு ரயில்வேத் திணைக்களம் நட வடிக்கை எடுத்துள்ளது.

பரீட்சார்த்த ரயில் சேவை நடைபெற்ற பின்னர் தொடர் ரயில் சேவை இந்த மாத இறுதி யில் இடம்பெறும் என ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

(ற-14,ரி)

### சீன

டது. இந்தப் பயணம் 28 வரு டங்களுக்கு பின்னர் சீன ஜனாதிபதி இலங்கைக்கு மேற் கொள்ளும் பயணமாகும்.

சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் இலங்கையுடன் 20 உடன்படிக் கைகளில் கைச்சாத்திட்டுள் ளார். சீன ஜனாதிபதி அவரது இலங்கை பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுடன் பேச்சுக்களை மேற் கொண்ட பின்னர் இருவரும் இணைந்து நுரைச்சோலை யின் லக்விஜய மின்திட்டத்தின் இரண்டாவது பகுதியை ஆரம் பித்துவைத்துள்ளனர். ஜனாதி பதி செயலகத்திலிருந்தே அதனை அவர்கள் ஆரம்பித்து வைத்துள்ளனர்.

இன்று இந்தியாவுக்கான தனது பயணத்துக்கு முன்ன தாக சீன ஜனாதிபதி கொழும்பு துறை முகத்துக்கு செல்லவுள்ளார்.

இதேவேளை- அவரது இந்த பயணத்தின்போது கொழும்பு போர்ட் சிட்டி திட்டம் தொடர் பான ஒப்பந்தமும் கைச்சாத் தாகியுள்ளது. சீன துறை முக நிறுவனம் இந்தத் திட்டத்தில் முதற்பகுதிக்கு 1.3 பில்லியன் டொலர்களை முதலீடு செய்ய வுள்ளது.

இதேவேளை- இரு நாட்டு தலைவர்கள் மத்தியிலான சந்திப்பின்போது சீனாவின் பட் டுப் பாதை திட்டத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ தனது ஆதரவை வெளியிட்டுள்ளார். சர்வதேச அரங்கில் சீனா அளித்துவரும் ஆதரவுக்கும் அவர் தனது நன்றியை தெரி வித்துள்ளார்.

(ற-சி)

### இராணுவத்துக்கு

உறுதிகள் பொதுமக்களிடம் உள்ளன. போரின் பின்னர் மக்கள் மீள்குடியமர்ந்துள்ள போதும், நகரின் மத்தியில் குறித்த இராணுவ முகாமை படையினர் தொடர்ந்தும் வைத் துள்ளனர்.

படையினரின் முகாம் அமைந் துள்ள காணி உரிமையாளர் கள், தமது காணிகளை விடு விக்குமாறு இராணுவத்தினரி டம் பல தடவைகள் கோரிய போதும் இராணுவத்தினர் அதற்கு சம்ம திக்கவில்லை. அத்துடன் பொது மக்கள் பல் வேறு தரப்பினர் ஊடாக வேண்டுகோள் விடுத்த போதும் அதற்கும் இராணு வத்தினர் மசியவில்லை.

இந்த நிலையில் குறித்த காணியை சுவீகரிப்பதற்கான அறிவித்தல் கடந்த சில மாதங் களுக்கு முன்னர் ஒட்டப்பட்டி ருந்தது. நேற்றுக் காலை திடீ ரென நிலஅளவைத் திணைக் களத்தினர், குறித்த இராணுவ முகாமின் பின் பகுதியினூடாக உட்சென்று, காணியை இரா ணுவத்தினரின் துணையுடன் அளவீடுகள் செய்தனர்.

இதனை அறிந்த காணி உரி மையாளர்கள் இராணுவ முகாம் முன்பாகத் திரண்ட போதும், அவர்களால் முகா முக்குள் பிரவேசிக்க முடியாத நிலைமையை சாதகமாகப் பயன்படுத்தி, நில அளவைத் திணைக்களத்தினர் தமது அள வீட்டு நடவடிக்கைகளை மேற் கொண்டனர்.

அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வெளியே வரும் போது, பொதுமக்கள் நில அளவைத் திணைக்களத்தினரி டம் தமது நியாயங்களை எடுத் துக் கூறியுள்ளனர். ஆனாலும் இராணுவத்தினர் பொதுமக் களை அந்த இடத்தை விட்டு வெளியேற்றுவதில் குறியா கவே இருந்தனர். இதன்போது அங்கு பொலிஸார் குவிக்கப் பட்டிருந்தனர்.

பொதுமக்களின் நியாயங்களை நில அளவைத் திணைக்களத் தினர் கேட்ட போதும், குறித்த காணியை அவர்கள் அளவீடு செய்து முடித்துள்ளனர்.

(ற-5,101)

### 13 ஆவது

வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சையத் அக் பருதின் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச் சில் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடை முறைப்படுத்த முடியாது என்று தெரிவித்திருந்தார். 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பொலிஸ் அதிகா ரத்தை மாகாணசபைகளுக்கு வழங்க முடியாது என்று குறிப் பிட்டுள்ளார். இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.


"இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்தவித மாற் றமும் இல்லை. இலங்கை அர சிடம் அதையே மத்திய அரசும் தொடர்ந்து வலியுறுத்தும். இந்த விடயத்தில் இந்தியாவின் கோரிக் கையை இலங்கை அதிகாரபூர்வமாக நிராகரிக்க வில்லை. எனவே, இலங்கை வழங்கிய உறுதிமொழி நிறை வேற்றப்படும் என்று நம்புகின் றோம்" என்று அவர் குறிப்பிட் டுள்ளார்.

#### சர்ச்சை கிளப்பிய சிங்கள மொழி

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைக்கான இந்திய துணைத் தூதர் எஸ்.டி.மூர்த்தி அங்குள்ள மக்களிடம், "இந்தி யாவில் வட - கிழக்கு மாநிலங் களில் உள்ள மக்கள், ஹிந்தி மொழியை தொடர்பு மொழி யாக பேசக் கற்றுக்கொண் டுள்ளனர். நீங்களும், சிங்கள மொழியை பேச கற்றுக் கொள்ள வேண்டும்" என்று கூறியுள்ளமை தொடர்பில், சையத் அக்பருதீனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், "இது குறித்து இன்னும் எங்க ளுக்கு முழுமையான தகவல் கிடைக்கவில்லை. எனினும், இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் துணைத் தூதர் எந்தக் கண்ணோட் டத்தில் அத்தகைய கருத்தை வெளியிட்டார் என்பது பற்றி விளக்கம் கேட்கப்படும்"- என்று தெரிவித்தார். (ற-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரிய சாந்தா அபிமன்னசிங்கம் (ஜனாதிபதி சட்டத்தரணி) அவர்களின் சகோதரர்


**அபிமன்ன சிங்கம் மாணிக்கசோதி**

காலமான செய்தியறிந்து துயரடைகின் றோம். அவரது பிரிவால் துயருறும் குடும் பத்தினரின் ... துயரில் நாமும் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோம்.

157/1 ... வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளரும், ஊழியர்களும்
சாரங்கா நகை மாடம்.

## ஈர விழிகளுடன்...



15.09.2014 அன்று இடம்பெற்ற வாகன விபத்தில் அகால மரணமடைந்த

**அபிமன்னசிங்கம் மாணிக்கசோதி**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
சட்டத்தரணி நண்பர்கள்.

# மட்டு நகரில் கவனவீர்ப்புப் பேரணி நியமனம் வழங்கக் கோரி பட்டதாரிகள்




மட்டக்களப்பு, செப். 17

2011ஆம் ஆண்டு பட்டப் படிப்பை பூர்த்தி செய்த பட்டதாரிகளான தமக்கு நியமனம் வழங்கப்படாததைக் கண்டித்தும் நியமனங்களை வழங்க வலியுறுத்தியும் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தால் கவனவீர்ப்புப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு நகரின் காந்திபூங்காவில் இருந்து மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரையில் அமைதியான முறையில் இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் யு.உதயவேந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஜனாதிபதி அவர்களே எங்களுக்கு ஒரு தீர்வை பெற்றுத்தாருங்கள், 'மிக விரைவில் நியமனம் வேண்டும், தொழில் இல்லாமல் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் நாம், எமக்கு குரல் கொடுக்க எவருமில்லை போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை தாங்கியிருந்தனர்.

பட்டதாரிகள் நியமனம் வழங்கும் திகதிக்கு சில தினங்களுக்கு பின்னரே எமது பட்டப்படிப்பு பூர்த்திசெய்யப்பட்டது. அதற்குக் காரணம் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட தாமதம். கடந்த காலத்தில் எமக்கு நியமனம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டபோதிலும் இதுவரையில் நியமனங்கள் வழங்கப்படவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் யு.உதயவேந்தன் தெரிவித்தார்.

தங்களது கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்த ஆண்டுக்குள் நியமனங்கள் வழங்க நடவடிக்கையெடுக்கவேண்டும். இல்லாவிடில் மட்டக்களப்பு பஸ் நிலையத்துக்கு முன்பாக தொடர்ச்சியான உணவு தவிர்ப்புப் போராட்டங்களை நடத்தவுள்ளதாகவும் யு.உதயவேந்தன் தெரிவித்தார்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரனைச் சந்தித்து தமது நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் மனு ஒன்றையும் கையளித்தனர். (ஒ-10)

## ஒலுவில் மீனவர்களுக்கு உபகரணங்கள் கையளிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல் ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட ரூபா 6 லட்சம் நிதியில் ஒலுவில் பிரதேச மீனவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலயத்தில் நடை பெற்றது.

ஹரீஸின் இணைப்புச் செயலாளர் ஐ.எல். ஹமீட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாகவும் உறுப்பினர் ஏ.எம். ஜெமீல், அட்டாளைச்சேனை பிரதேச சபை உதவித் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா (நபீல்), பிரதேச சபை உறுப்பினர் யாசீர் ஐமன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனீபா, அம்பாறை மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் ஒலுவில் நடுத்துறை மீனவர்களுக்கு வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களும், விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணத் தொகுதியும் வழங்கப்பட்டன. (ஒ-10)


### தவறிவிட்டது

பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளானந்தம் லின்ரன் ஜோன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (651044944V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கடந்த 09.09.2014 அன்று ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(52320) (12.3.6) தொடர்பு: 077 530 5347

### தவறிவிட்டது

சண்முகரட்ணம் பிரதீபன் என்பவருடைய தே.அ.அட்டை (860922223V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பேஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (52331)(45.3.6)

077 398 2532, 077 905 0306

### விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி,
ஊர்ப்பேட்டுக்கோழி மொத்தமாகவும்
சில்லறையாகவும் குறைந்த
விலையில் விற்பனைக்குண்டு.
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகில்
தொடர்பு: 078 880 3483 (52319) (4.6.3)

### கடை/வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில்
Store தேவைக்காக கடை/வீடு
வாடகைக்குத் தேவை.

(52318) (12.3.6) தொடர்பு: 077 308 6904

### வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம்

இலவச தொழிற்றிறன் பயிற்சி வகுப்புக்கள் (5ஆவது அணி)

*பாடசாலையை விட்டு விலகியோருக்கான*

01) தையல் பயிற்சி
02) மனைப் பொருளியலும், மனை அலங்காரமும் பயிற்சி.

வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம்.
இல.39, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம், (யாழ்.இந்துக் கல்லூரி சுற்று வட்டத்திற்கு அருகில்)

***18.09.2014 வியாழக்கிழமை காலை 09.00 மணிக்குத் தொடங்கப்படவுள்ளது.*** (சி16254) (12.3.6)

இவ் இலவச பயிற்சி வகுப்பில் பயில ஆர்வமுள்ளவர்கள் தமது பெயர் விவரங்களை 18.09.2014, 19.09.2014 ஆகிய தினங்களில் மு.ப. 09.00 மணி தொடக்கம் பி.ப.2.00 மணி வரை மேற்படி முகவரியில் பதிவு செய்துகொள்ளலாம். மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே உள்ளன. 5 ஆவது அணியில் பதிவு செய்து பயிற்சியை இடை நடுவில் நிறுத்தியவர்களும், பயிற்சியினைத் தொடரலாம்.

**வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன நிர்வாகம்.**

### இரவு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

நெல்லியடி, வாணிபர் கழகத்துக்குட்பட்ட இரவு நேர பாதுகாப்புச் சேவைக்கு ஆள்கள் தேவை. சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் 25.09.2014இற்கு முன்பு கீழ்க் கண்ட விலாசத்திற்கு அனுப்பவும். வயதெல்லை 35 - 50 வரை.

**தலைவர்**
**நெல்லியடி வாணிபர் கழகம்,**
**கரவெட்டி.** (சி16246) (12.3.6)

### CONDOLENCE



We record with deep regret the death of

**Mr. TONY GANESHAN**

former Head of Studies in our institution. Though his association with the college was brief he endeared himself to everyone with his pleasing manners, readiness to help the students and untiring efforts to promote their standard. He was Studious, Methodical and Meticulous in his work. Our sincere condolences to the members of the family.

DIRECTORS, STAFF & STUDENTS
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES** (C16247) (12.3.6)

### Soft View Computer Center

கணினி சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள் புதிய வழி முறைகளுடன் ஆரம்பம்

A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள்

102,Main Street,
Jaffna.
E.C.Colin
T.P.: 021 222 4885
077 905 3545

(ச/16253) (5.6.3)

யாழ்.திருமறைக்கலாமன்றம் அருகில்
(இரவு நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன)

### தவறிவிட்டது

செல்லத்துரை பாஸ்கரன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன நாவலர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 021 320 6233 (52315) (4.6.3)

### தேவை

திருநெல்வேலி அல்லது கொக்குவில் பிரதேசத்தில் இருவர் தங்கக்கூடிய Anex அல்லது வீடு வாடகைக்கு அவசியம்.
தொடர்பு: 077 653 4411 (52324) (45.3.6)

### தேவை

முன் அனுபவமுள்ள
* முகாமையாளர்
* விற்பனை பிரதிநிதிகள்

தேவை. (52328) (45.3.6)

தொடர்பு: 021 222 5392

### விற்பனைக்கு

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட புடைவைக் கடையில் உள்ள புடைவைகளும் தளபாடங்களும் உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வந்து பார்வையிடலாம். (உரிமையாளர் வெளிநாடு செல்வதனால்)
தொடர்பு: 077 160 0507 (52317) (12.3.6)

### தவறிவிட்டது

நுணாவிலுக்கும், மீசாலைச் சந்திக்கும் இடையில் பூதத்தம்பி பார்த்திபன் என்பவருடைய அடையாள அட்டை (9406944774V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(47277) (4.6.3) தொடர்பு: 077 020 0085

### ஈராண்டு நினைவலைகள்...



தோற்றம் 14.01.1975 மறைவு 09.10.2012

**அமரர் கோசலவதனி கனகரத்தினம்**

ஆண்டவன் அழைப்பு அக்கா -உனக்கு
ஆறுதலாகிற்றுதா.....? -உன்
அழகு முகம் பார்த்து இன்றும் அலறுகிறோம்- எமக்கு
ஆறுதல் யாரக்கா.....? நீ சென்று
ஈராண்டுகள் ஆகியும் எம் ஈரவிழிகள் காயவில்லை
புரட்டாதி நவமி திதி தோறும் -உன்
ஆத்ம சாந்திக்காய் இறைவனை இறைஞ்சுகின்றோம் !

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தாயாருறும் சகோதரர்கள்
பொன்.கனகரத்தினம்(J.P)குடும்பம்,
(வலி.தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்-மானிப்பாய்)

### பிள்ளையார் இன் உணவகம்
### PILLAIYAR INN
### Tourist Hotel & Restourant

**எமது உணவகம், காலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை திறந்திருக்கும்.**

இங்கு தோசை, மசாலாதோசை,பேப்பர் தோசை,பூரி, சப்பாத்தி, முதலான சாப்பாடுகள் சுடச்சுட தயாரித்து வழங்கப்படும்.

பகல் 11 மணிக்கு மதியஉணவு தயாராகிவிடும்.

மதியஉணவு மரக்கறிச் சாப்பாடு, கோழிச்சாப்பாடு, இரண்டும் தரமான சுவையுடன் இந்திய வல்லுநர்களால் தயாரித்து வழங்கப்படும்.

(சம்பா அரிசி, குத்தரிசி, யாழ்ப்பாண அரிசி)

மீண்டும் மாலை, 6மணி தொடக்கம் இரவு 10 மணி வரையும் நீங்கள் விரும்பிய ... சாப்பாடுகளை ஓடர் செய்து சாப்பிடலாம். ஒருமுறை வருகை தந்து உணவகத்தின் ... யும் ருசியையும் பாருங்கள்.

C/52329 (5.6.3)

Pillaiyar inn & Restourant
31 Manipay Road, Jaffna.
Tel: 021 222 2829
Fax: 021 222 4449
Email: Pillaiyarinn@gmail.com
web: www. Pillaiyarinn.com

# இலங்கையில் அதிகரிக்கிறது எயிட்ஸ் நோயாளர் தொகை

கொழும்பு, செப்.17
கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்துள் இலங்கையில் எயிட்ஸ் நோயாளர்களில் அதிகரிப்புக் காணப்படுகின்றது என்று தேசிய எயிட்ஸ் ஒழிப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்துள் எயிட்ஸ் நோயாளர்கள் 90 பேர் பதிவாகியிருந்த போதும், இந்த ஆண்டின் முதல் ஆறுமாத காலத்துள் அந்த எண்ணிக்கை 110 வரையிலும் அதிகரித்துச் சென்றுள்ளது என்று எயிட்ஸ் ஒழிப்பு இயக்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

குறித்த காலகட்டத்துள் ஒரு லட்சம் பேர் வரையில் மருத்துவப் பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டதன் மூலம் இந்த எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைப்பாடு விரிவடைந்து செல்வதைத் தடுப்பது தொடர்பாக மாகாண மட்டத்தில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டமொன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் வைத்தியர் லியனகே தெரிவித்துள்ளார்.

1989ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையில் இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை 1950 வரையிலானது என்பதோடு பெரும்பாலும் 15 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையோரே எயிட்ஸ் தாக்கத்துக்கு உட்பட்டுள்ளனர் என்று ஆய்வொன்று கூறுகின்றது. (ற-22)

# வாடகை கார் சேவைகள் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, செப்.17
கட்டுநாயக்க விமான நிலையச் சூழலில் இடைத் தரகர்களின் அனுசரணையுடன் நடத்திச் செல்லப்படும் வாடகைக் கார் சேவையைப் பயன்படுத் திக் கொள்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று புலனாய்வுப் பிரிவுகள் பயணிகளுக்கு அறிவுறுத்தியுள்ளன.


அத்தகைய வாடகைக் கார் சேவைகள் பயன்படுத்திக் கொண்டுள்ளதன் காரணமாக கடந்த காலத்தில் பயணிகள் பலதரப்பட்ட துன்புறுத்தல்களுக்கும் மோசடிகளுக்கும் முகம் கொடுக்க நேர்ந்திருந்ததாக ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது என்று தெரிவிக்கும் புலனாய்வுப் பிரிவுகள் இங்கு அதிகளவில் பாதிப்புக்களுக்கு உள்ளாவோர் பெண்களே எனவும் தெரிவித்துள்ளன.

சில பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் கூட உள்ளாகியுள்ளனர் என்றும், பணம் மற்றும் பொருள்கள் கொள்ளையிடப்படும் சம்பவங்களும் தொடர்ச்சியாகத் தெரியவந் துள்ளன என்றும் புலனாய்வுப் பிரிவுகள் மேலும் தெரிவித்துள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் முறையாக நடத்தப்படும் செல்லப்படும் வாடகைக் கார் சேவைகள் இருப்பதால் அத்தகைய வாடகைக் கார்களைப் பயன்படுத்திக் கொள்ளும் போது இவ்வாறான ஆபத்துக்களை கூடிய வகையில் தவிர்த்துக் கொள்ள முடியக் கூடியதாக இருக்குமென்றும், விமான நிலையச் சூழலில் சந்திக்கும் இடைத் தரகர்கள் சம்பந்தமாக மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் புலனாய்வுப் பிரிவுகள் பயணிகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளன. (ற-22)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# முதியவர் வயிற்றில் இருந்து முருகைக்கல்



கொழும்பு, செப்.17
84 வயதான முதியவர் ஒருவரின் வயிற்றிலிருந்து முருகைக் கற்பாறை வடிவிலான கல்லொன்று சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டுள்ளது. இந்த அறுவை சிகிச்சை, கிண்ணியா தள வைத்தியசாலையில் நேற்று செவ் வாய்க் கிழமை மேற்கொள்ளப்பட்டது.

அறுவைச் சிகிச்சை நிபுணர் வைத்தியர் ரொஹான் குமாரவினால் இந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

முன்னீர்க்கும் சுரப்பியிலிருந்த 60 கிராம் நிறையுடைய கல்லே அகற்றப்பட்டுள்ளது.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட அப்துல் சமது என்பவரின் வயிற்றில் இருந்தே இந்தக் கல் அகற்றப்பட்டுள்ளது.

இவர், தற்போது அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சத்திர சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்ட 'கல்' முருகைக் கற்பாறை வடிவில் இருப்பதனால், அந்தக் கல்லை மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (ற)

## வேலையாள் தேவை

அக்கூறியம் ஒன்றுக்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய ஆண் தேவை.
வயது : 18. - 25. தொடர்பு: 0217912997

## திருமண சேவை

பொறியியலாளர்கள், மருத்துவர்கள், விஞ்ஞான, கலைத்துறைப் பட்டதாரிகள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள் மற்றும் தனியார் துறையினர் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களது ஜாதகங்கள் பெருமளவில் எம்மிடம் உண்டு.
மணமக்களை எதிர்பார்ப்போர் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**சிவா சோதிட நிலையம்**

100, அரசடி வீதி, கந்தர்மடம் (யாழ். இந்து மகளிர் கல்லூரியடி)
தொ.பே.: 0778996281 (52339)

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

பருத்தித்துறை பிரதேச செயலக நலன்புரி சங்கத்தினால் 17.09.2014 அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 04.11.2014 அன்று பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.


தலைவர்
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை. (சி-16256)

எளியோருக்கு நற்செய்தி நவில ...

**விண்ணக வாழ்வில் இணைந்து கொண்ட**
**முதல் மாத**
**நீங்கா நினைவுகளுடன் ...**
**17-09-2014**

## அருட்பணி. தேவதாசன் எட்வின் அ.ம.தி

இறை நிழலில் என்றென்றும் துயில் கொள்வீராக!



*தோற்றம்* *17.08.1974*
*மறைவு* *18.08.2014*

மாதமொன்று மறைந்ததையா
மலை மேல் விளக்கே உமையிழந்து
வழி நெடுகத் தேடுகின்றோம்
விழிகளெல்லாம் குளமாகிறதே

இறையழைத்தல் நீர் பெற்றபோது
இன்புற்றே மகிழ்ந்து நின்றோம்
இக வாழ்வில் இது போன்ற
இனிய பணி இல்லையென்றோம்

விலையுயர்ந்த சொத்தே – எம்
விடிவெள்ளியே மறைந்ததேனோ
அலை கடலில் தவிக்கின்றோம்
ஆண்டவரிடம் வேண்டிடுவாய்

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்

# Invitation for Bids (IFB)

*Zonal Education Office, Thunukkai.*

1. The Chairman, Regional Procurement Committee on behalf of the Zonal Education Office, Thunukkai now invites sealed bids from eligible and qualified bidders for the following civil works.

| Bid ID | Description of Work | Estimated/ Cost/ Rs.in million | Contract period | Required Grade | Security Amount RS.0.00 | Security Valid Period | Pre Bid meeting place, date & Time |
|---|---|---|---|---|---|---|---|
| NP/44/20/2/5/ PSDG/2014-01 | *Construction of 80'x25' Main Hall at* Mu/Mankulam M.M.V | 4.18 | 75 Days | C8 Or above (Buildings) | 45,000.00 | Till 17.01.2015 | Zonal Education Office,Thunukkai 26.09.2014 10.00 AM |
| NP/44/20/2/5/ PSDG/2014-02 | *Renovation of Teachers Quarters at* Mu/Pandiyankulam M.V | 4.36 | 75 Days | C8 Or above (Buildings) | 45,000.00 | Till 17.01.2015 | Zonal Education Office,Thunukkai 26.09.2014 10.00 AM |

2. Source of Fund for the above work is Provincial Sector Development Grand **(PSDG)**.

3. The Period of Completion of each of these Services is **75 days** from the Start date.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Constr uction for above mentioned grade or above with the Institute for Constr uction Training and Development (ICTAD)

5. Interested bidders may obtain further information and inspect the bidding documents at the Zonal Education Office Thunukkai during office hours.

6. A complete set of Bidding Documents in English language may be purchased from the office of **Zonal Education Office, School Works Branch, Thunukkai** by interested bidders on the submission of a written application to the date from **2014.09.18 until 2014.10.01 from 09.00 hrs to 15.00 hrs.** Upon payment of a **non refundable fee of Rs 2500/=** the method of payment will be cash to the office of the Zonal Education Office, Thunukkai

7. Bids shall be delivered to Zonal Education Office Thunukkai on or before 10.00 AM on 03.10.2014, Late bids will be rejected. Bids will be opened soon after closing in the prese nce of the bidders' representati ves who choose to attend.

8. All bids shall be accompanied by a Bid Security on the name of Zonal Director of Education, Thunukkai for rupees above mention which should be obtained either from a reputed Bank operating in Sri Lanka or from the Construction Guarantee Fund, valid for a period of **105 days (from 03.10.2014 till 15.01.2015** ) from the date of close of bids. The Bid Security should be "On-demand" & "Un-conditional" and on the format given in the Bidding Document.

**Chairman,**
**Regional Procurement Committee**
**Zonal Education Office,**
**Thunukkai.**

## தொடர்ச்சிகள்

### இரணைமடு

துக்கான குடிதண்ணீர் திட்டத்தை மூன்று கட்டங்களாக உடைத்து தனித்தனியே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாணசபை கோரிக்கை முன்வைத்திருந்தது. இந்தத் திட்டத்துக்குப் பெரும்பான்மையான நிதி வழங்குநரான ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு மேற்படி கோரிக்கையை விளக்கமாகத் தெளிவுபடுத்தியிருந்தது வடக்கு மாகாண சபை.

இந்த நிலையில் நேற்றைய கலந்துரையாடலில், இரணைமடுக் குடிதண்ணீர் திட்டம் திருத்தப்பட்டுப் புதிய திட்ட வரைவு வடக்கு மாகாண சபையிடம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் கையளிக்கப்பட்டுள்ளது. அதில் இரணைமடுக் குளத்தைப் புனரமைப்புச் செய்வது தனியாகவும், யாழ்.மாவட்டத்தின் நீர் நிலைகளை இனங்கண்டு புனரமைப்பது அத்துடன் கடல் நீரை நன்னீராக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தனியாகவும் செயற்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குறிப்பிடுகையில், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் திருத்தங்களுடன் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் சில சிறிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அவை விரைவில் மேற்கொள்ளப்பட்டு 10 நாள்களுக்குள் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கையளிக்கப்படும்.

மேலும் இதுவரை காலமும் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள். இந்தத் திட்டத்தில் வெறும் பார்வையாளராக மாத்திரமே கலந்து கொண்டிருந்தனர். இனி நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் ஒவ்வொரு படியிலும் அவர்கள் தீர்மானம் எடுக்கும் பங்காளர்களாக பங்கு பற்றுவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது' என்றார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், ப.சத்தியலிங்கம், த.குருகுலராஜா மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

### சிறப்புப் பாட

கலைப்பீடத்துக்கு அதிகளவு (644) மாணவர்கள் உள்வாங்கியதை மறந்து விட்டீர்களா?, கல்விக்கான உரிமை மறுக்கப்படுவது ஏன்? அதற்கான உரிமை எப்போது?, நாளை நாளை என்று எமது கல்வியின் நேரத்தை விரயமாக்காதீர், விரிவுரைகள் ஆரம்பமாகி 3 வாரங்கள் நிறைவடைந்தும் எமக்கான தீர்வு வழங்கப்படாததன் காரணம் என்ன? எமது விருப்பத்துக்குத் தடை போடாதீர்கள் ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாம் மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் பல்கலைக்கு வந்துள்ளோம். ஆனால் ஒரு நாளைக்கு விரிவுரைகள் குறைவாகவே இடம்பெறுகின்றன. செலவுதான் அதிகமாகவுள்ளது. இங்கு விரிவுரைகள் நடைபெறுவதற்கு உரிய இடங்கள் பற்றாக்குறையாகவுள்ளன. அதனால் ஒரு பாடத்தின் ஒரு வருடத்துக்கான விரிவுரை நிறைவடையும் வரை வகுப்பறைக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. அதனை அதிகரிக்க பல்கலை நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. பலமுறை அது தொடர்பில் சுட்டிக்காட்டிய போதும் அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. குறித்த 3 பாடங்களிலும் முதலாம் வருடத்திலிருந்து ஏராளமான மாணவர்கள் கற்றுவருகின்றனர். ஆனால் ஒரு சிறப்புப் பாடத்துக்கு 40 பேர் வரையிலேயே அனுமதிக்கப்படுவர். ஆனால் அந்த விடயம் முதலே மாணவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை.

தற்போது சிறப்புப் பாடத்தைக் கற்பதற்கு ஒரு பாடத்தில் மாத்திரம் 55 பேருக்கும் மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர். அவ்வாறே 3 பாடங்களிலுமாக சுமார் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் சிறப்புப் பாடத்தைக் கற்பதற்குத் தகுதி இருந்தும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனவே தமக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று மாணவர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் கலைப்பீடப் பதில் பீடாதிபதியாக இருந்து வரும் பேராசிரியர் புஸ்பரட்ணத்துடன் தொடர்பு கொண்ட போது.

இது தனியே ஒருவர் எடுக்கும் முடிவல்ல. பீடத்தில் அனைவரும் சேர்ந்து தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம். அது தொடர்பில் மாற்று வழிகள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஒரு சிறப்புப் பாடத்துக்கு 40 பேருக்கு மேற்பட்ட மாணவர்களை வைத்திருப்பது அனைவரினதும் முழுமையான கற்றலுக்கு எந்தளவு சாத்தியமாகும் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். அது தொடர்பில் மாணவர்களுடன் கலந்துரையாட உள்ளோம் என்று தெரிவித்தார். (த-4-106-86)

### கேரளா

வவுனியா மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மதுவரி அத்தியட்சகர் எஸ். மதன் மோகனின் பணிப்புரைக்கு அமைய வவுனியா மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி பி.ரகுநாதன் தலைமையில் சென்ற குழுவினரே ஒரு கிலோகிராம் 300 கிராம் கேரளக் கஞ்சாவைக் கைப்பற்றினர்.

இந்தக் கஞ்சாவை வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் மற்றொருவர் தப்பியோடிவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிபதி வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், தப்பியோடிய நபரை உடன் கைது செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (த-108)

### தென்னிந்தியத்

தென்னிந்தியத் திருச்சபைக்குச் சொந்தமான குறித்த காணியைப் பொதுத்தேவை என்ற பெயரில், கடற்படை முகாமுக்குச் சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை குறித்த காணியை அளவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (த-5)

### சரியான

றனர்.

இதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாக மாணவர்களும், பெற்றோர்களும் உதயனிடம் தெரிவித்தனர்.

இதேவேளை- இது தொடர்பாக வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் வினவிய போது,

போட்டிகள் பிற்போடப்பட்டமை தொடர்பாக உரிய பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டதாக அதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட அதிகாரி தம்மிடம் தெரிவித்தார் என்றும்- ஆனால் ஏதோ தவறு இடம்பெற்றுள்ளது. மாணவர் நிகழ்வுக்கு வருகை தந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றமை தொடர்பாக தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் கூறினார். (த-108)

### தமிழ்த்

மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காகக் கொழும்பு சென்றுவிட்டு ஹைஏஸ் வாகனத்தில் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே முல்லைத்தீவு, மாங்குளம் பகுதியை அண்மித்து நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

எதிரே வந்த ரிப்பர் வாகனம் மோதியதனாலேயே விபத்து இடம்பெற்றதாக ஹைஏஸ் வாகனச் சாரதி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அந்த ரிப்பர் நிற்காமல் தப்பிச் சென்றுவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அந்த வாகனத்தில் 5 பேர் பயணித்தபோதும் ஏனையவர்கள் காயமின்றித் தப்பிக் கொண்டனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவரான உடுவில் வேதாரணியர் வளவைச் சேர்ந்த மாணிக்கசோதி தமிழ்த் தேசியத்தில் மிகுந்த பற்றுடையவர். பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் பிரேமதாஸவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சில் புலிகள் சார்பாகப் பங்குபற்றியிருந்தவர்.

1989 ஆம் ஆண்டு புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரிழந்துவிட்டதாக செய்திகள் பரப்பப்பட்டபோது அவர் உயிருடன் இருக்கிறார் என்பதை ஒளிநாடா மூலமாகப் போட்டுக் காட்டியிருந்தார்.

தமிழ்த் தேசிய நலனில் மிகுந்த பற்றுக் கொண்ட அவர் கடந்த வருடம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். அதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டிருந்தார். அவர் ஓய்வு பெற்ற ஆசிரியருமாவார்.

விபத்தையடுத்து ஹைஏஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (த-4-18-55)

### நெடுங்கேணியில்

தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வீட்டுக்காரர் தோட்டத்துக்குச் சென்றிருந்தவேளை, அவர்களின் வீட்டுத் திறப்பை எடுத்த திருடர் கதவைத் திறந்து உள்நுழைந்து நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கைரேகைகளைப் பதிவு செய்ததோடு விசாரணை மேற்கொண்டனர். எனினும் எவரும் கைதாகவில்லை என்று பொலிஸார் மேலும் கூறினர். (த-4)

### இந்திய

வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே மறியல் நீடிக்கப்பட்டது.

நெடுந்தீவுக் கடற்கரையை அண்மித்து ஒரு படகில் பயணித்த 5 பேரும், படகு பழுதடைந்தமையால் கரையொதுங்கியதாகத் தெரிவித்ததுடன் மற்றொரு படகில் 4 பேருமாக 9 பேரும் கடந்த 2 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அவர்கள் தவணைக்காக மன்றில் முற்படுத்தப்பட்டு மறியல் நீடிக்கப்பட்டது. (த-4)

### மும்மொழியின்

ஆகியோர் கையொப்பமிட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இதுவரை காலமும் சட்டக் கல்லூரியில் நடத்தப்பட்ட சகல பரீட்சைகளின் போதும் மும்மொழிகளிலும் வழங்கப்பட்டு வந்த வினாத்தாள்கள் தற்போது சர்வதேச மொழியான ஆங்கில மொழியில் மாத்திரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதனைச் சட்டத்துறை தாய் மொழிக்குச் செய்யும் துரோகமாகவே சங்கம் கருதுகின்றது.

தமிழ், சிங்களம் என்பவற்றைச் சுதேச மொழிகளாகவும், ஆங்கிலத்தைச் சர்வதேச (இணைப்பு) மொழியாகவும் பிரகடனம் செய்துள்ள அரசு, சகல பிரஜைகளும் அரச நிறுவனங்களுக்குள் சிங்களத்தில் அல்லது தமிழில் தமது சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சட்டபூர்வமான உரிமையுண்டு என்றுகூறி, இந்த மொழிகளின் நடைமுறைப் படுத்தலுக்குத் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சொன்றையும் உருவாக்கி, அதற்கு அனுபவமும் தேர்ச்சியுமிக்க அமைச்சர் ஒருவரையும் நியமித்து அதற்கு மேலதிகமாக அரச கரும மொழிகள் ஆணைக் குழுவொன்றையும் தாபித்துச் செயற்படுத்தி வருகின்ற நிலையில் தாய் மொழிக்குச் சட்டக் கல்லூரியில் இடமில்லாமல் போவதை எவராலும் ஏற்கமுடியாது.

இதற்கு மேலதிகமாகச் சகல அரசதுறை ஊழியர்களும், தமிழ்மொழி ஊழியர்கள் சிங்களத்தையும், சிங்கள மொழி ஊழியர்கள் தமிழையும், ஆங்கில மொழி ஊழியர்கள் தமிழையும், சிங்களத்தையும் இரண்டாம் மொழியாகக் கற்க வேண்டும் என்ற சட்டத்தையும் கட்டாயமாக்கியுள்ள நிலையில்சட்டத்துறை ஆங்கிலத்தை பரீட்சை மொழியாக்குவதை எவ்வாறு ஏற்க முடியும்.

இலங்கை அரசமைப்பின் 24ஆவது உறுப்புரையின்படி சிங்களமும், தமிழும் நீதிமன்றங்களின் மொழிகளாக இலங்கை எங்கிலும் இருத்தல் வேண்டும். அரசமைப்புச் சட்டங்கள் இவ்வாறிருக்கச் சட்டக் கல்லூரி மட்டும் எவ்வாறு பரீட்சை வினாத்தாளை ஆங்கிலமொழியில் மட்டும் வழங்க முடியும். முன்பிருந்தபடி மும்மொழி நடைமுறைக்கு அமைச்சும், ஆணைக்குழுவும் ஆவன செய்ய வேண்டும்-என்றுள்ளது. (த-10)

### பேச்சுக்கு

தந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக.

அதேவேளை, ஜனாதிபதி மஹிந்தவின் அழைப்பையேற்று அவருடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவேண்டும் என்றும், அப்போதுதான் தீர்வு விடயத்தில் ஜனாதிபதியின் நிலைப்பாடு என்னவென்று தெரிய வரும் எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் விடயத்தில் தொடர்ந்தும் இழுத்தடிப்புகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வந்தால்தான் தீர்வு என்ற நிலைப்பாட்டில் கூட்டணி அரசு உறுதியாக இருக்கின்றது.

எனினும், அரசுடன் பேச்சு நடத்தப்பட்டு அதில் எட்டப்படும் இணக்கப் பாட்டை ஆராயும் களமாகவே நாடாளு மன்றத் தெரிவுக்குழு அமையவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வருகின்றது. இதனால், காலம் கடத்தப்படுகின்றதே ஒழிய தீர்வு விடயத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்நிலையில், அரசியல் தீர்வு விடயத்தில் அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எத்தகைய போக்கைக் கடைப்பிடித்தால் விரைவில் தீர்வை நோக்கி பயணிக்ககூடியதாக இருக்கும் என்று அரசியல் விமர்சகரும் முன்னாள் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலகவிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது.

"தீர்வு விடயத்தில் அரச தரப்பில் மாற்றமொன்று நிகழ்ந்துள்ளது. அதாவது, கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு தான் தயாரென்று ஜனாதிபதியே அறிவித்துள்ளார். இது வரை காலமும் அரசின் சார்பில் நியமிக்கப்பட்ட குழுவுடனேயே கூட்டமைப்பு பேச்சு நடத்தியுள்ளது. ஆகவே, ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அவருடன் பேச்சு நடத்துவதற்கு கூட்டமைப்பு தயாராக வேண்டும்.

இந்து பத்திரிகையில் தாங்கள் இவ்வாறு கூறியுள்ளீர்கள். ஆகவே, தாங்களும் பேச்சுக்கு தயார் என்று ஜனாதிபதிக்கு கூட்டமைப்பு கடிதம் எழுதி அவரின் நிலைப்பாட்டை அறிய வேண்டும். அப்போதுதான் ஜனாதிபதியின் அறிவிப்பு பொய்யானதா அல்லது மெய்யானதா என்று தெரியவரும்.

அதேவேளை, சர்வதேச கண்காணிப்பாளர்களுக்கு பதிலாக, தேசிய மட்டத்திலுள்ள நடுநிலைவாதிகளை கூட்டமைப்பு கண்காணிப்பாளராக அழைக்க வேண்டும். சிலவேளை, கூட்டமைப்பின் கோரிக்கையின் பிரகாரம், கூட்டமைப்புக்கு பிடிக்காத சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் பிரதிநிதிகளை ஜனாதிபதி நியமித்தால் கூட்டமைப்பின் பிரதிபலிப்பு எவ்வாறு அமையும்?

எனவே, தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதியின் அழைப்பையேற்று கூட்டமைப்பு பேச்சுக்குச் செல்ல வேண்டும் என்பதே எனது கருத்தாகும்"- என்றார். (ற-சி)

### அரச

யின் உரிமையாளர் ஒருவர் இதுபற்றி 'உதயனுக்குத்' தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாம் பரம்பரையாக வாழ்ந்து வந்த காணி அது. எமது உறவினர் ஒருவர் அண்மையில் உயிரிழந்திருந்தார். அவரது உடலைக் கூட முகாம் முன்பாக வைத்து இறுதி அஞ்சலி செய்து எடுப்பதற்கே இராணுவம் அனுமதி வழங்கவில்லை. அவரது இறுதி ஆசையைக் கூட நிறைவேற்றுவதற்கு இராணுவம் தடையாக இருந்தது.

இந்த நிலையில் எமது காணியை அளவீடு செய்து சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாம் இராணுவத்திற்கு காணியை வழங்க தயாரில்லை. எமது காணி எமக்கு வேண்டும். மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்களாகின்றது. சொந்த வீடு இருந்தும் அதில் குடியிருக்க முடியாமல் வாடகை வீட்டில் இருக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

எங்களை பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றியதாக அரசு சொல்லிக் கொள்கின்றது. இப்போது நாங்கள் அரச பயங்கரவாதத்தில் சிக்கிக் கொண்டதாகவே எண்ண வேண்டியுள்ளது. போர் முடிந்து 5 வருடங்களாகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லை. இன்னும் எதற்காக நகரின் மத்தியில் இவ்வளவு பெரிய இராணுவ முகாம். இனியாவது எங்கள் காணிகளை இராணுவம் வழங்க வேண்டும்" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-5)

### பரீட்சை

கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அது பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம் அது தொடர்பில் கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாட வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு 2 மணித்தியாலங்களும் 15 நிமிடங்களும் வழங்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே பரீட்சை நடைபெற்று வருகின்றது.

ஆனால் அந்த நேரத்தை ஒன்றரை மணித்தியாலங்களாகக் குறைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்று கல்வி அமைச்சுத் தகவல் தெரிவித்துள்ளது.

அதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கம், "அவ்வாறு குறைப்பதாக இருந்தால் அது மாணவர்களுக்கு ஏற்படுத்தும் சாதக பாதக தன்மைகள் தொடர்பில் ஆராய வேண்டும். கல்வி அமைச்சர் தன்னிச்சையாக முடிவு எடுக்கக்கூடாது"- என்று தெரிவித்துள்ளது. (ற-4)

### முட்டைப்

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நடந்துள்ளது. கைது செய்யப்பட்ட பெண் கண்டியைச் சேர்ந்தவர் என்றும், அவர் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலையிலுள்ள உறவினர் ஒருவரைப் பார்க்கச் சென்ற அவர் கையில் உணவுப் பொட்டலத்தையும் கொண்டு சென்றுள்ளார். அதனைப் பரிசோதனை செய்த போதே அதனுள் இருந்த முட்டைப் பொரியலுக்குள் ஒரு பொட்டலமாகக் கஞ்சா மறைத்து வைத்திருந்தமை தெரியவந்துள்ளது. (ற-4,106)

## பயிற்சி பட்டறை

தென்மராட்சி, செப்.17

உள்ளூராட்சிச் சபைகளில் வரவு - செலவுத்திட்ட அறிக்கை தயாரிப்பது தொடர்பான இரு நாள் பயிற்சிப் பட்டறை நாளையும் நாளைமறுதினமும்மன்னார் ஆங்கில வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மாகாணஉள்ளூராட்சிதிணைக்களத்தால் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் வரவு - செலவுத் திட்டம் தயாரித்தலுடன் தொடர்புடைய உத்தியோகத்தரை கலந்துகொள்ளுமாறு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பட்டிமன்ற ஆற்றுகை

தென்மராட்சி.செப்.17

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் (புலுட்டையன் பிள்ளையார்) ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தின் பட்டிமன்ற ஆற்றுகை நடைபெறும்.

இந்துப் பண்பாட்டு மரபு எமது சமூகத்தில் பேணப்பட்டு வருகின்றதா? இல்லையா? என்னும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)

## ஆக்கங்களை அனுப்பலாம்

யாழ்ப்பாணம், செப்.17

செல்லப்பா சுவாமிகளின் நூறாவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட இருக்கும் நூற்றாண்டு மலருக்கான கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ச.கனகசபாபதி செல்லப்பா சுவாமிகள் நினைவாலயம், 258 பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(வ)

# மண்முனையினை ஆட்சி புரிந்த உலகநாச்சியின் சிலை நிர்மாணிப்பு



மட்டக்களப்பு, செப். 17

மட்டக்களப்பு மண்முனையை ஆட்சிசெய்த முதல் பெண் சிற்றரசி உலகநாச்சியின் சிலை மற்றும் காசிலிங்கம் ஆகியன மண்முனை குளத்தருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு ஆரையம்பதி இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.லோகநாதனின் தலைமையில் திங்கட்கிழமை நடைபெற்றது.

ஆற்றல் பேரவையின் தலைவர் பூ.பிரசாந்தன் ஏற்பாட்டில் நிறுவப்பட்டுள்ள இந்த சிலைகளை ஆரையம்பதி ரூபன் வடிவமைத்ததுடன் சிலைகள் நிறுவப்பட்டுள்ளநிலத்துண்டை சோமசுந்தரம் பொன்னம்மா இலவசமாக வழங்கியுள்ளார்.

கி.மு. 312ஆம் ஆண்டளவில் மண்முனையை இராச்சியமாகக் கொண்டு ஆட்சி செய்த உலகநாச்சியின் கோட்டையும் சிற்றரசியினால் அமைக்கப்பட்ட காசி லிங்கேஸ்வரர் ஆலயமும் போர்த்துக்கீசரால் உடைக்கப்பட்ட எச்சங்கள் போவிற்குளம் சிகரம் பகுதியில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-10)

# யாழ்.கல்வி வலயத்தில் உயர் பெறுபேறுகளில் முன்னிலை பெறுபவர்கள் மாணவிகளே

யாழ்ப்பாணம்.செப்.17

யாழ்ப்பாணக்கல்வி வலயத்தில் 80 வீதத்துக்கும் அதிகமாக மாணவிகளே உயர்ந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். அதேபோன்று தமது திறன்களை மேலும் வளர்த்துக் கொள்வதன் ஊடாக உயர்ந்த நிலையை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ்ப்பாண கல்வி வலயத்தின் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக்கல்வி வலயத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ சாதாரண தரம் மற்றும் உயர்தரம் மற்றும் ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

மாணவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்க வேண்டும் என்பதற்காக வருடாந்தம் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாண கல்வி வலயத்தைப் பொறுத்த வரையில் மாணவர்களை விட மாணவிகளே அதிகளவில் உயர் பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர். கிட்டத் தட்ட 80 வீதம் தொடக்கம் 90 வீதம்வரை பெண்பிள்ளைகளே அதிக சித்தியைப் பெற்றுள்ளனர்.

கடந்த வருடத்தை விட இந்த வருடம ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் 9ஏ பெற்ற 64 மாணவர்களும்,8ஏ,பி பெற்ற 111 மாணவர்களும் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 5 மாணவர்களும், ஜி.சீ.ஈ உயர் தரத்தில் 3ஏ பெற்ற மாணவர்களும் உட்பட230 மாணவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் உயர்ந்த பெறுபேறுக்களைப் பெறும் மாணவர்கள் இருக்கும்போது வெறுமனே அவர்கள் மருத்துவர்களாகவோ, பொறியியலாளர்களாகவோ வர வேண்டும் என்று எண்ணாமல் அதனையும் தாண்டி விஞ்ஞானிகளாகவும், நிபுணர்களாகவும் தம்மை உருவாக்க வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் போது வெட்டுப் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறார்கள். எனவே மாணவர்கள் தங்களது திறமைகளை மேன்மேலும் வளர்த்துக்கொள்வதன் ஊடாகதிறமை அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட வேண்டும். இதுவே அவர்களுக்கு கிடைக்கும் சிறந்த பெறுபேறு - என்றார்.

இந்த நிகழ்வில் வரவேற்பு நடனத்தை யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகளும், கிராமிய நடனத்தை கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாசாலையின் மாணவிகளும் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (வ-14)

# நொச்சிமுனை தரிசனத்தில் கொடிவாரம் அனுஷ்டிப்பு



நொச்சிமுனை, செப். 17

மட்டக்களப்பு நொச்சிமுனை தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் கொடி வாரத்தை முன்னிட்டு கொடிகள் விற்பனைசெய்வதன் மூலம் நிதி சேகரிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

முதலாவது கொடி உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சர் பசீர் சேகுதாவூத்துக்கு தரிசனத்தின் தலைவர் எம். தேவானந்தாவினாலும் மட்டக்களப்பு அரச அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு தரிசனத்தின் சிரேஷ்ட ஆசிரியை பி.பாஸ்கரனாலும் வழங்கி வைக்கப்பட்டன.

கொடிவாரம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை வரை அனுஷ்டிக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

# விபத்துக்கள்

## மட்டக்களப்பில் விபத்துக்கள் இருவர் உயிரிழப்பு

காத்தான்குடி, செப். 17

மட்டக்களப்பில் இருவேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர். திங்கட்கிழமை இரவு 10 மணியளவில் மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டக்களப்பு -கல்முனை பிரதான வீதியில் கிரான்குளத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

கிரான்குளம் வளைவு பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட மூவர் மீது மட்டக் களப்பில் இருந்து கல்முனைக்குச் சென்ற வான் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மூவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட போதிலும் அதில் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கிரான்குளம், ஆலையடிவீதியை சேர்ந்த உருத்திரநாதன் (வயது-22) என்றும்- படுகாயமடைந்தவர்கள் கிரான்குளம் பிரதான வீதியைச் சேர்ந்த சுரேஸ்குமார் (வயது-21) கடற்கரை வீதியைச் சேர்ந்த பிரதீபன் (வயது-24) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் வான் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் வானும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை – களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் ஓந்தாச்சி மடத்தில் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்த நல்லையா நவரெட்ணம் (வயது-65) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வேகமாக வந்த தனியார் பஸ், சைக்கிளில் சென்றவரை மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் ஓந்தாச்சிமடத்தில் உள்ள மர ஆலை ஒன்றில் கணக்காளராக தொழில் புரிந்துவந்த நிலையில் தனது தொழில் நிலையத்துக்கு அருகில் உள்ள கடைக்கு சென்று திரும்பும்போதே இந்த விபத்து நடைபெற்றுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி போக்குவரத்து பொலிஸார் இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டதுடன் சாரதியை கைது செய்து பஸ்ஸையும் தடுத்து வைத்துள்ளனர். (வ-10-32)

## வடிகாலுக்குள் வயோதிபர் வீழ்ந்து காயம்

தென்மராட்சி, செப்.17

வீதியில் வந்த வாகனத்துக்காக வீதியோரத்துக்கு சைக்கிளைச் செலுத்திய வயோதிபர் வீதியோர வடிகாலுக்குள் வீழ்ந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் அண்மையில் சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி வீரசிங்கம் வீதியைச் சேர்ந்த சின்னவன் ஆறுமுகம் (வயது-75) என்பவர் வடிகாலுக்குள் வீழ்ந்து காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (வ-9)

# வலயக் கல்வித் திணைக்களம் நடத்திய மாணவர் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், செப்.17

யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்தால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, கல்வி பொது தராதர சாதாரணதரப் பரீட்சை, கல்விப்பொது தராதர உயர் தரப்பரீட்சை 2013 இல் உயர் பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நேற்று இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண வலயக்கல்வி பணிப்பாளர் செ. உதயகுமார், பிரதி வலயக் கல்வி பணிப்பாளர் அருந்தவநாதன், வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் தெய்வேந்திரராஜா, வட மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் சுகந்தி செபஸ்ரியன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம்,வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-21)

# முஸ்லிம் அமைப்புகள், அமைச்சர்கள் மீது புலனாய்வாளரின் கண்காணிப்பு தேவை

## அரசிடம் வலியுறுத்துகின்றது பொதுபல சேனா

முஸ்லிம் மதரஸாக்கள், முஸ்லிம் கல்விக்கூடங்கள், உலமா சபை, சூறா சபை ஆகியவற்றில் என்ன நடக்கின்றது என்பதை அரசும், புலனாய்வுத் துறையினரும் தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்றும், முஸ்லிம் அமைச்சர்களின் பின்னால் புலனாய்வுத்துறையினரை ஈடுபடுத்த வேண்டும் என்றும் பொது பல சேனா அமைப்பு நேற்று வலியுறுத்தியது.

பொதுபல சேனா அமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு கிருலப்பனையிலுள்ள பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அதன் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் டிலாந்த வித்தானகே மேற்கண்ட வலியுறுத்தலை விடுத்தார்.

"முஸ்லிம் தீவிரவாதக் குழுவொன்று இலங்கையில் இயங்குகின்றது என நாம் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம். எனினும், இது பற்றி எவரும் கண்டுகொள்வதாக தெரியவில்லை. குறிப்பாக இலங்கையில் இருந்து கொண்டு இந்தியா உட்பட அண்டை நாடுகளில் பிரச்சினைகளை உருவாக்குவதே மேற்படி தீவிரவாதக் குழுவின் நோக்கமாக இருக்கின்றது. தற்போது தமிழகத்தில்கூட உளவாளியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனவே, இலங்கையிலுள்ள முஸ்லிம் மதரஸாக்கள், முஸ்லிம் கல்விக்கூடங்கள், உலமா சபை, சூறாசபை ஆகியவற்றின் என்ன நடக்கின்றது என்று அரசும், புலனாய்வுத் துறையினரும் தீவிரமாக ஆராய வேண்டும். அத்துடன், முஸ்லிம் அமைச்சர்களை புலனாய்வுத்துறையினர் பின்தொடர வேண்டும் " என்றும் டிலாந்த குறிப்பிட்டார்.

# தேர்தலுக்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி

## பதுளையில் 6 லட்சத்து 9 ஆயிரத்து 966 வாக்காளர்கள்

கொழும்பு, செப்.17

பதுளை மாவட்டத்தில் 6 லட்சத்து 9 ஆயிரத்து 966 வாக்காளர்கள் 515 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கவுள்ளனர். தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்கிறார் பதுளை மாவட்ட அரச அதிபரும், தலைமைத் தெரிவத்தாட்சி அதிகாரியுமான ரோஹண கீர்த்தி திஸாநாயக்க.

எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள ஊவா மாகாணசபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் 6,09,966 பேர் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்காக 515 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. ஆகக் கூடுதலாக 93 ஆயிரத்து387 பேர் மஹியங்கனைத் தொகுதியில் வாக்களிக்கவுள்ளனர். அங்கு 76 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

வாக்களிப்பு முடிந்தவுடன் வாக்கு எண்ணும் பணிகள் 71 நிலையங்களில் நடைபெறும். 58 நிலையங்களில் நேரடியாக அளிக்கப்பட்ட வாக்குகளும் 13 நிலையங்களில் தபால்மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளும் எண்ணப்படும்.

தேர்தல் கடமைகளுக்கென சுமார் 7,000 அரச ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரின் கூற்றுப்படி மஹியங்கனைத் தொகுதியில் 93, 387 வாக்காளர்களுக்கு 76 வாக்களிப்பு நிலையங்களும், பண்டாரவளையில் 82, 025 வாக்காளர்களுக்கு 65 வாக்களிப்பு நிலையங்களும், அப்புத்தளையில் 64, 135 வாக்காளர்களுக்கு 59 வாக்களிப்பு நிலையங்களும், வெலிமடையில் 73, 308 வாக்காளர்களுக்கு 61 வாக்களிப்பு நிலையங்களும், ஆலி எலயில் 68, 208 வாக்காளர்களுக்கு 57 வாக்களிப்பு நிலையங்களும், பசறையில் 61 ,933 வாக்காளர்களுக்கு 55 வாக்களிப்பு நிலையங்களும், வியலுவையில் 50, 648வாக்காளர்களுக்கு 49 வாக்களிப்பு நிலையங்களும், பதுளையில் 54, 327 வாக்காளர்களுக்கு 42 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

சகல வாக்களிப்பு நிலையங்களுக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்படும். வாக்காளர்களையும் கட்சிகளின் முகவர்களையும் தவிர வெளியார் அனுமதிக்கப்படமாட்டார்கள். சகல வாக்களிப்பு நிலையங்களுக்கும் அருகிலோ அல்லது சுற்றுப்புறத்திலோ வாக்களிப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கூட்டமாகக் கூடிநிற்பதோ. வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொள்வதோ தண்டனைக்குரிய குற்றங்களாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பதுளை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாரதூரமான தேர்தல் குற்றங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (த-சி)

# உலக வங்கிக் குழுவினர் அடுத்த வாரம் வடக்குக்கு

தென்மராட்சி,செப்.17

உலக வங்கியினர் வட மாகாணப் பாடசாலைகளைப் பார்வையிடுவதற்காக அடுத்த வாரம் வருகை தரவுள்ளனர். அவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை மாகாணத்தில் உள்ள பாடசாலைகள், வலயக் கல்வி அலுவலகங்கள் போன்றவற்றுக்குப் பயணம் செய்து பார்வையிடவுள்ளனர்.

பாடசாலைகளிலும் வலயக் கல்வி அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஆகியவற்றிலும் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை அவர்கள் பார்வையிடவுள்ள தாக மாகாணக் கல்வி பணிப்பாளர் ஆர்.இராஜேந்திரம் அறிவித்துள்ளார்.

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை பாடசாலைகளுக்கும் பின்னர் பி.ப. 2.30 மணிவரை வலயக் கல்வி அலுவலகத்துக்கும் உலக வங்கிக் குழுவினர் வருகை தரவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (த-9)

# மக்களுக்கு உதவுவேன்

## கூறுகிறார் கமல்

யாழ்ப்பாணம், செப். 17

வடக்கு மாகாண சபையிலிருந்து நீக்கப்பட்ட கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தன்னை ஆதரித்த மக்களுக்கும் இந்த மண்ணுக்கும் உதவி செய்வேன் என்றும், நல்ல மண்ணில் விழுந்த விதை ஒரு போதும் வீணாகாது என்றும் கூறியுள்ளார்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷயனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டில் கைதாகி 10 மாதங்களாக விளக்கமறியலில் இருந்து யாழ். மேல் நீதிமன்றினால் கடந்த மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டார் கமல். எனினும் பிணைகளை உறுதிப்படுத்தி அவர் நேற்றைய தினமே சிறையிலிருந்து வெளியேறினார். ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குக்குச் சென்றுவிட்டு வெளியேறிய அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

23 வருடங்களுக்கு முன்னர் மக்கள் பணிக்காகக் கால் பதித்தேன். காலத்தின் கட்டளையால் இந்த மண்ணை விட்டுச் செல்கிறேன் என்று கூறியுள்ளார்.

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றம் உள்ளடங்கும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கவோ, நடமாடவோ கூடாது என்பது உட்பட கடும் நிபந்தனைகளுடனேயே பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உ. கிழங்கு

## எடுத்து வருவதற்கு நுவரெலியா கிளம்பின பாரவூர்திகள்

யாழ்ப்பாணம்.செப்.17

வறட்சியால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட மக்களுக்காக நுவரெலியா மாவட்ட செயலகத்தால் 156 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு வழங்கப்படவுள்ளது. அவற்றை எடுத்து வருவதற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 7 பாரவூர்திகள் நுவரெலியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியால் 34 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்புற்றுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உருளைக் கிழங்கை நிவாரணமாக வழங்க நுவரெலியா மாவட்ட செயலகம் முன்வந்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபருடன் நுவரெலியா மாவட்ட அரச அதிபர் கலந்துரையாடல் மேற்கொண்டு 156 மெற்றிக் தொன் ஊருளைக் கிழங்கை யாழ்.மாவட்ட மக்களுக்காக வழங்க முன்வந்துள்ளார்.

அதனடிப்படையில் முதற்கட்டமாக 100 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு எ[illegible] வரப்படவுள்ளது என்று யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. தருவிக்கப்படவுள்ள உருளைக்கிழங்குகள் அந்தந்த பிரதேச செயலகங்களில் வறட்சியால் பாதிப்பை எதிர்கொண்டுள்ள குடும்பங்களுக்கு யாழ்.மாவட்ட செயலகத்தின் ஊடாக பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் இருந்து உருளைக்கிழங்கை ஏற்றி வருவதற்கென பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் 6 லொறிகள் மற்றும் தனியாரின் ஒரு லொறி என 7 லொறிகள் நேற்றுமுன்தினம் நுவரெலியாவுக்குச் சென்றுள்ளன. (ற-14,86)

# மாவைக்கு இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம், செப்.17

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பதவியேற்றுள்ள மாவை சேனாதிராசாவுக்கு, காங்கேசன்துறை கிளையினால் இன்று புதன்கிழமை வரவேற்பளிக்கப்படவுள்ளது. தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் கோயிலிருந்து மங்கல வாத்தியங்களுடன் இன்று பி.ப 3 மணிக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராசா கட்சியின் கிளை அலுவலகம் அமைந்துள்ள ஆனைக்குட்டி மதவடி வரையில் அழைத்துச் செல்லப்படவுள்ளார்.

இதன் பின்னர் கட்சி அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## காணி பிணக்கு நடமாடும் சேவை

காணி அபிவிருத்தி அமைச்சும், காணி ஆணையாளர் திணைக்களமும் இணைந்து எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 27ஆம் திகதி சனிக்கிழமையும் முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்டப் பிரதேச செயலகங்களினால் தீர்வு எட்டப்படாத காணிப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. இதற்கான கடிதங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உரிய பிரதேச செயலாளர்களினால் விசாரணைக்கான திகதி, நேரம் என்பன குறிப்பிடப்பட்டுஅனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (த-102)


அதிரடியான புதிய வரவுகள்

ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க மாதம் ஒரு லட்சம் வரை உழைக்க. IELTS தேவையே இல்லை O/L போதும்

செங்கன் நாடுகள் சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி படிக்க உழைக்க 2 வருட விசா 100% விசா உறுதிப்பாட்டுடன்

அனைத்தும் நிபந்தனைகளுடன். சனி, ஞாயிறு உட்பட 7 நாள்களும் திறந்திருப்போம்.

இறுதித் திகதி 19.09.2014

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

அரச பதிவு -PV82703

முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 221 9016, 021 568 9090

(52310) (08)





EASYWAY TO ENGLISH

310, கோயில் வீதி, நல்லூர் கோயில் அருகில்

By. S.K.MAYURAN

தரம்: 6 முதல் O/L, A/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன

(52313) (45.3.6) T.P. 077 193 0298



SPOKEN ENGLISH

WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதிய மாணவர்களுக்கான 3 மாத வார மற்றும் வார இறுதிநாள் SPOKEN ENGLISH பயிற்சிநெறி ஆரம்பம்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் கூட எமது இப்பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.

வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் - 22.09.2014

பிரிவு 1. காலை 8.00-10.00 பிரிவு 2. காலை 10.00-12.00

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 20.09.2014

1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00

20 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.

SAMSON Experts in English Training

279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.

021 320 3313 077 621 4567


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.